பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 27 வெள்ளிக்கிழமை (13.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 352

# பொன்சேகா ராஜினாமா!

# மஹிந்த மீது நம்பிக்கை இல்லை!!

## அரசியல் பிரவேசம் குறித்து கடிதத்தில் எதுவுமில்லை





கொழும்பு, நவம்பர் 13

முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய முப்படைகளின் தலைமை அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகா தமது இராணுவப் பதவிகள் அனைத்தையும் இராஜினாமா செய்திருக்கின்றார். அடுத்த மாதம் முதலாம் திகதியுடன் தாம் பதவி விலகுகிறார் என அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதும், அவரது அரசு மீதும் தாம் நம்பிக்கை இழந்துவிட்டார் எனத் தெரிவித்திருக்கும் ஜெனரல் பொன்சேகா, அமைச்சர்கள் பலர் தம்மை அவமரியாதை செய்துவிட்டனர் என்றும் குறைப்பட்டிருக்கிறார். (19ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்கள் பட்டியல் இன்று வந்துசேரும்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் - I,II,III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் - I,II,III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேனா என்பதை சீருடையைக் கழற்றிய பின்பே பகிரங்கமாக அறிவிப்பேன்

## களனி விகாரையில் வழிபட்ட பின்னர் சரத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 13

அரசியலில் ஈடுபடுவதா? ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா? என்பது குறித்து உத்தியோகபூர்வமாக சீருடையைக் கழற்றிய பின்னரே பகிரங்கமாக அறிவிப்பேன். ஆனால் இராணுவப் பதவியிலிருந்து விலகிய பின்பும் நாட்டு மக்களுக்கான எனது பணி தொடரும்.

- இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கூட்டுப்படைகளின் தலைமைப் பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கான ராஜினாமாக் கடிதத்தை நேற்று அவர், ஜனாதிபதி செயலகத்தில் கையளித்த பின்னர் களனி விகாரையில் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டார்.

அப்போது அங்கு திரண்டிருந்த ஊடகவியலாளருக்குப் பேட்டியளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு:- (20ஆம் பக்கம் பார்க்க)

## சகல மக்களினதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கப் புதிய அரசமைப்புச் சட்டம் தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 13

இலங்கையில் சகல இன மக்களினதும் அடிப்படை உரிமைகளையும் அபிலாஷைகளையும் நிறைவு செய்யக்கூடிய புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்று தேவைப்படுகிறது. அதன் மூலமே சகல மக்களினதும் அரசியல் உரிமைகளையும் பாதுகாக்கலாம்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தன மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமாலை நடைபெற்ற 'சுதந்திரத்துக்கான மேடை' என்ற அமைப்பின் நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய போதே (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜோன் ஹோம்ஸ் இலங்கை விஜயம்

கொழும்பு, நவ. 13

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி.விசேட தூதுவர் துணுக்காய் விஜயம்

கொழும்பு.நவ.13

இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலியாவின் விசேட தூதுவர் ஜோன் மெக்கார்த்தி நேற்று துணுக்காய் (20ஆம் பக்கம் பார்க்க)

## 25 நாள்களாக கடலில் அந்தரித்த இலங்கையருக்கு அரசியல் தஞ்சம் வழங்க ஆஸி. அரசு இணக்கம்

கொழும்பு, நவ. 13

இந்தோனேஷியா கடலில் கடந்த 25 நாள்களாக அந்தரித்துக்கொண்டிருக்கும் 78 இலங்கையர்களுக்கும் அரசியல் தஞ்சம் வழங்க அவுஸ்திரேலியா கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளது. அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்க முயன்ற போது இந்தோனேஷிய கடலில் வைத்து அவுஸ்திரேலிய கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அவர்கள் கடந்த நான்கு வார காலத்துக்கும் மேலாக இந்தோனேஷிய கடலில் அவுஸ்திரேலியாவின் சுங்கக் கப்பலான "ஓசியானிக் வைகிங்" இல் உள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நெல்லியடியில் நாளை முதல்

வடமராட்சி வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் செய்தி யாளர்களின் நன்மைகருதி உதயன் உப பணிமனை பிரதான வீதி, நெல்லியடி (மக்கள் வங்கி முன்பாக) எனும் முகவரியில் நாளை மு.ப. 9 மணிக்கு திறந்துவைக்கப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி அரச அலுவலர்களை வவுனியாவுக்கு வரக் கோரிக்கை

வவுனியா, நவ. 13

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்களில் கடமையாற்றி தற்போது வெவ்வேறு மாவட்டங்களில் வசித்து வரும் அரச அலுவலர்களை எதிர்வரும் திங்கட்கிழமை 16ஆம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் மீள் குடியேற்றப் பணிகளுக்காகவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும், மாவட்ட செயலாளருமான திருமதி.ஆர். ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அரச பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவுகளும் மாவட்ட செயலகத்திலேயே மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், நவ.13

கற்கோவளம் புனித நகரில் இயங்கி வரும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்துக்கான திறப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜே.கண்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.ரி.செல்வரட்ணம், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன், சேவா லங்கா செயற்றிட்டப் பணிப்பாளர் தோமஸ் ஒலேமில்சாட், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, யாழ். கல்வித் திணைக்களப் பொறியியலாளர் ஜீ.சிவபாலன், பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை போதகர் வணபிதா என். அருள்நாதர் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்தப் புதிய கட்டடம் 95 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. (10-236)

# இராணுவத் தலைமை நாட்டுக்கு வேண்டாம்

## பதறுகிறார் ஊடக அமைச்சர்

நாட்டுக்குத் தேவை அரசியல் தலைமைத்துவமேயன்றி இராணுவத் தலைமையல்ல. உலக வரலாறு இதற்குச் சிறந்ததொரு சான்றாகும். ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுப் படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா அரசியலில் ஈடுபடுவது குறித்துப் பல்வேறு வகையான ஊகங்கள் எழுந்துள்ளன. இராணுவத் தலைமைத்துவத்துக்கு முன்னேற்றகரமான செயற்பாட்டுக்கு வித்திடுவதாய் அமையாது என அமைச்சர் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் - எந்தவொரு ஜனநாயக நாட்டுக்கும் அரசியல் தலைமைத்துவமே அவசியமாகும். இரண்டாம் உலகப் போரை எடுத்துக்கொண்டால், திறமைமிக்க சவால்களை வெற்றிகொண்ட இராணுவ அதிகாரிகள் இருந்தார்கள் என்பதை அறிய முடியும். ஆயினும் அவர்கள் அரசியலுக்குள் நுழைந்து அல்லது நுழைய முற்பட்டுத் தோல்வியை அடைந்தனர் - என்றார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் அரசியல் பிரவேசம் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் வினவியபோது, ''இராணுவத்தில் உயர் பதவியில் சேவை செய்யும் அதிகாரியாக மட்டுமே அவரை நான் பார்க்கிறேன். அதைவிடுத்து வேறெதுவும் எனக்குத் தெரியாது'' என்று பதிலளித்தார். (அ-சி)

## சதுரங்கப் போட்டி பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.நகரமையப்பகுதி றோட்டறிக் கழகத்தினர் நடத்திய சதுரங்கப் போட்டி மற்றும் பொது அறிவு, நுண்ணறிவு தேடல் -12 பரீட்சைகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு றோட்டறிக் கழக செயல்திட்ட இயக்குநர் கேட்டுள்ளார். (10)

## உடுப்பிட்டி அமெரிக்க மிஷனில் இரசாயனவியல் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.13

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் இரசாயனவியல் கழகத்தின் 'குவாக்'. வருடாந்த சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இரசாயனவியல் கழகத் தலைவர் சி.மயூரேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி பிரதிக்கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொள்வார். (10)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்.மாவட்ட கூடைபந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதுகின்றது. (1-23)


## WANTED TEACHER

Teacher with ICT Knowledge to teach Kids

Walk in Interview

361, New Uthayan Publication (Pvt) Ltd.

(சி/562288)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி இராசேந்திரம் குமுதா தம்பதியரின் அருந்தவப் புதல்வன்

**இ.சஞ்சிகன்**

யா/ மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் 2009 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளி 156 ஐப் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டுகின்றோம். அத்துடன் சித்தியடைய வழி காட்டிய அதிபர், ஆசிரியர்கள், அன்பொளி கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், சஞ்சிகன் எதிர்வரும் பரீட்சைகளிலும் விசேட சித்திகளைப் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, அக்கா (சாரங்கா), மௌலி (மாமா), அங்கயற்கண்ணி (அன்ரி).

மீசாலை மேற்கு,
மீசாலை. (90914)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும்

**செல்வன் தவேந்திரராசா அபினேஷ்**

2009 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்ததுடன், பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றமையை இட்டு கற்றல் செயற்பாடுகளுக்கு ஊக்க மளித்த பாடசாலை அதிபர், அன்புடன் பாலர் வகுப்பு, தரம் 1, தரம் 5 வரை கற்பித்த ஆசிரியர்கள், வகுப்பாசிரியர், தனியார் வகுப்பு ஆசிரியைகள் அனைவருக்கும் அன்புடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அவர் எதிர்காலத்தில் மாலை சந்தை விநாயகரின் அருளினால் பல்கலைக்கழகம் சென்று பல்கலைகளையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அப்பம்மா, அண்ணாமார்-அனோஜ், அஜி, தம்பி - அஜய் உற்றார், உறவினர், நண்பர்கள்.

ஆனைப்பந்தி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய். (சி/562285)

## பணியாளர்கள் தேவை

TCT Multi Trade Centre
527, Navalar Road, Nallur, Jaffna.

★ பதவி- 01:- விற்பனை உதவியாளர்கள் (50 வயதிற்கு உட்பட்ட அனுபவம் வாய்ந்த ஆண்கள் விண்ணப்பிக்கலாம்).

★ பதவி- 02:- Data Entry Operater (கணனித்துறையில் அனுபவம் உள்ள பெண்கள் விண்ணப்பிக்கலாம்)

Note:- விண்ணப்பதாரர் விற்பனை நிலையத்திலிருந்து 3கிலோ மீற்றர் தூரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரத்தை 18.11. 2009 இற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(90924) பணிப்பாளர்.

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மூன்று சில்லு சாளி மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774747217

## விற்பனைக்கு

தரமான சிறிய செங்கற்கள், கொங்கிறீட் கற்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 0778330145

## வீடு வாடகைக்கு

முதலிக் கோவில் வீதி (சேச் லேன்), கொக்குவிலில் மூன்று பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0776029656

## காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் றெயில்வே வீதிக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு : 0779749343

## பணியாளர் தேவை

சாவகச்சேரியில் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள கணனி அச்சுப்பதிவு நிறுவனத்திற்கு ரைப்பிங், Page Maker, Photo Shop வேலைகள் தெரிந்த ஆண், பெண் இருபாலார்களும் தேவை. 14.11.2009 பிற்பகல் 3 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

பொதிகை புத்தக நிலையம்,


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி ஜெ.பிரேமாவதியின் அன்புத் தந்தை

**ஆறுமுகம் கனகலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி. (90923)

**ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக்கல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மகளிர் அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் திருமதி பி.கமலலோஜினிதேவி அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி இராசரத்தினம் மகேஸ்வரி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குபற்றுவதுடன் அவரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி. (562283)

பிரதேச செயலக நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கிட்ணபிள்ளை தங்கவேலாயுதம்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்ணபிள்ளை - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகன் தங்கவேலாயுதம்நேற்று(12.11.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, சத்தியமூர்த்தி ஆகியோரின் சகோதரரும் தபோதினி (ஆசிரியை, பொலிகண்டி இ.த.க பாடசாலை), விஜிதா (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), பாரத் (பொலிஸ் உத்தியோகத்தர், யாழ். பொலிஸ் தலைமையகம்), வனஜா (பட்டதாரி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகாக நண்பகல் 12 மணியளவில் ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தவனம் கோயிலடி,
பொலிகண்டி.

தகவல் : குடும்பத்தினர்.
விஜயலக்ஷ்மி.

### திருமதி செகநாயகம்பிள்ளை அன்னராசா காந்தமலர்

அரசடி ஒழுங்கை, செட்டித்தெரு (வல்லிபுர பரியாரியார் ஒழுங்கை), பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செகநாயகம்பிள்ளை அன்னராசா காந்தமலர் நேற்று (12.11.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னராசாவின் கணவரும், காலஞ்சென்ற ஆதவன் மற்றும் ராஜ்குமார், சாந்தாதேவி, வனிதா, விஜிதா (டென்மார்க்) ஆகியோரின் தாயாரும், சிவலிங்கம், கேசவன், ஜெயசீலன் (டென்மார்க்), சிவசிறி ஆகியோரின் மாமியாரும், பூஜா, மாதுளா, பிரித்திகா, விதுசன், அபிராமி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
செட்டித்தெரு, பருத்தித்துறை.

தகவல்:
செ.அன்னராசா (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வலசை போகும் மக்கள் கூட்டத்தை தடுத்து நிறுத்த முயலும் தேசங்கள்

இலங்கையிலிருந்து எப்படியோ வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் கோரும் மனப்போக்கு நம்மவர்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றமை குறித்து பிரஸ் தாபிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையிலிருந்து படகுகளில் ஏறி, உயிரையே பணயம் வைக்கும் ஆபத்து மிகுந்த பயணங்களில் ஈடுபட்டு, சட்ட விரோதமாக வெளிநாடுகளில் குடியேற முயலும் இலங்கையரின் விவகாரம் குறித்து இலங்கை அரசுடன் உயர்மட்டப் பேச்சுகளில் ஈடுபடுவதற்காக, ஆஸ்திரேலியப் பிரதமரின் விசேட தூதுவராக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஆஸ்திரேலியாவின் பிரபல இராஜதந்திரியான ஜோன் மக்காந்தியே இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசினால் தமிழர்களுக்கு ஏராளமான விடயங்கள் செய்யப்படவேண்டியுள்ளன. அப்படியான விடயங்கள் நிறைவு செய்யப்பட்டால்தான், சட்ட விரோதமான முறையிலேனும் நாட்டை விட்டுத் தப்பியோட வேண்டும் என்ற சிந்தனையிலிருந்து தமிழர்கள் விடுபடுவார்கள். இவ்வாறான உயிராபத்து மிகுந்த பயணங்களை மேற்கொண்டேனும் நாட்டை விட்டுத் தப்ப வேண்டும் என்ற போக்கைத் தடுத்து நிறுத்தும் சூழலும் அப்போதுதான் ஏற்படும் என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஆழ்ந்த கருத்துகள் பொதிந்த விடயம் இது. அந்தப் பின்புலத்தில் இக்கருத்தை நோக்கவேண்டும்.

இலங்கையில் யுத்தம் முடிந்துவிட்டது. நாட்டுக்கு ஏற்பட்ட தேசிய அச்சுறுத்தல் முறியடிக்கப்பட்டு விட்டது என்று கருதி, திருப்திப்பட்டுக் கொள்கின்றது தென்னிலங்கை. அரசுத் தலைவர்கள் அந்தச் 'சாதனையை' வெளிப்படையாகவே குறிப்பிட்டு ஆசுவாசப்பட்டுக் கொள்கின்றார்கள்.

ஆனால் இப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தரப்பான - சிறுபான்மையினரான - தமிழ் மக்களின் மனநிலைமை அப்படி இல்லை. ஏதோ நிரந்தர பீதிக்குள் வீழ்ந்துவிட்டோம் என்ற பேரச்சமே அவர்களைப் பீடித்து நிற்கின்றது. இலங்கைத் தீவில் இனி, மீளமுடியாத அடிமைத்தனமே தங்கள் இனத்துக்கு சாசுவதமானது, மாற்றமுடியாதது என்ற அவநம்பிக்கை இருள் தமிழ் இனத்தின் மனதைச் சூழ்ந்து ஆக்கிரமித்து நிற்கின்றது.

தங்களின் நீதி, நியாயமான அபிலாஷைகள் நிறைவு செய்யப்படப் போவதில்லை,மற்றைய இனத்தவருடன் - குறிப்பாகப் பேரினத் தரப்பினருடன் - சம அந்தஸ்துடனும், ஒரே கௌரவத்துடனும் வாழும் பாக்கியம் நமக்குக் கிட்டவே மாட்டாது என்ற மனநிலையே தமிழர்கள் மனதில் ஓங்கி நிற்கின்றது.

உரிமைகளுக்காக, விழ விழ எழுந்து நின்று போராடிய தமிழினம், இன்று யுத்தப் பேரிழப்புகளின் முடிவில் துவண்டுபோய்க் கிடக்கின்றது. ஆனால் அப்படிப் பாதிக்கப்பட்டுக் கிடக்கும் தமிழினத்தை அரவணைத்துத் தூக்கி நிறுத்தி, நீதி, நியாயம் வழங்கும் தாராண்மை யுத்தத்தில் வெற்றியீட்டினோம் என மார்தட்டும் தரப்புக்கு இல்லவே இல்லை; அறவே இல்லை.

கடந்த மே மாதம் நடுப்பகுதிக்குப் பின்னர் இலங்கைத் தீவில் கட்டவிழ்ந்த சம்பவங்கள், போக்குகள் இதனைத்தான் தமிழர்களுக்கு உணர்த்தி நிற்கின்றன.

இதனால்தான், இனிமேலும் இங்கிருந்தால் ஆகப்போவது ஒன்றுமில்லை, எப்படியேனும் இலங்கைத் தீவை விட்டு வெளியேறி, அமைதியும், சமாதானமும், கௌரவ வாழ்வும் கிட்டும் ஏதேனும் ஓரிடத்துக்கு - பூமிப்பந்தின் ஏதோ ஒரு பிரதேசத்துக்கு - தப்பிச் செல்வோம் என்ற கருத்து நிலைப்பாடு தமிழர்கள் மனதில் வளர்ந்து வருகின்றது.

அதன் பெறுபேறாகவே பல்வேறு நாடுகளுக்குள்ளும் நுழைய முயலும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களான ஈழத் தமிழர்கள், ஆங்காங்கே பிடிபடும் சம்பவங்கள் பற்றிய செய்திகள் தாராளமாக வெளியாகத் தொடங்கியிருக்கின்றன.

இவ்வாறு குடியேற முயலும் மக்களைத் தடுத்து நிறுத்தி, அவர்கள் மீது தத்தமது சட்டங்களின் இரும்புப் பிடியை ஏவிவிடும் இந்த நாடுகள், அந்த மக்களை நோகாமல், அவர்களுக்கு அந்த நிலையை ஏற்படுத்தக் காரணமான அந்த மக்களின் தேச ஆட்சியாளர்களை நோவதுதான் நியாயமாக இருக்கும்.

இப்படி சட்டவிரோதக் குடியேற்றவாசிகளாகக் குடியேற முயலும் மக்கள் விடயத்தில், தங்களின் எல்லைகளை இறுக்கிப் பூட்டி, கடற் பிராந்தியங்களில் பந்தோபஸ்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் இந்த நாடுகள், அந்த மக்களை அப்படி உயிரையும் பணயம் வைக்கும் பயணங்களில் ஈடுபடத் தூண்டும் அடிப்படைப் பிரச்சினையை - பிரதான விவகாரத்தை - கவனிக்காமல் இருப்பது கவலைக்குரியது.

இலங்கைத் தீவில் சிறுபான்மையினரான தமிழர்களுக்குத் தொடர்ந்து அநியாயம் இழைக்கப்படுகின்றது; நியாயம் மறுக்கப்படுகின்றது; அவர்களைத் தொடர்ந்தும் அடிமைப்படுத்தும் பேரினவாத மேலாண்மையே இத்தீவின் காட்டாட்சியாகத் தொடர்கின்றது.

இந்தப் போக்கு நீடிக்கும் வரை இங்கிருந்து மக்கள் நியாயம் தேடி - அமைதி வாழ்வு தேடி - கௌரவம் கிட்டும் நிலை தேடி - வலசை போகும் பறவைகளாகப் பறந்து செல்ல முயல்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இந்த மக்கள் இப்படிப் புறப்பட்டு, அலைவதற்குக் காரணமான - உள்நாட்டு நிலைவரத்தை - இங்கு சரிசெய்வதற்கு முயலாமல், அப்படி அந்த மக்கள் தத்தமது நாடுகளுக்குள் நுழையாமல் இருப்பதற்கான இரும்பு வேலியை மட்டும் அமைப்பதற்கு அந்தந்த நாடுகள் முயல்வது 'கயிற்றை விட்டுவிட்டுத் தும்பைப் பிடிப்பதற்கு' ஒப்பானதாகும்.

# தங்க நகைகளை விற்பனை செய்ய வருபவர்களிடம் முழுமையான விவரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்

## நகைக்கடை உரிமையாளர்களுக்கு வணிகர் கழகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.13

தங்க நகைகளை விற்பனை செய்ய வருபவர்களிடம் முழுமையான விவரங்களைப் பெற்றுக் கொள்ளாமல் அவர்களிடமிருந்து நகைகளைக் கொள்வனவு செய்ய வேண்டாம் என யாழ்ப்பாண வணிகர் கழகம் நகைக் கடைகளின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாண வணிகர் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

நகைக்கடை உரிமையாளர்கள் மற்றும் ஆபரணங்கள் செய்வோர், தங்க நகைகளைக் கொள்முதல் செய்யும்போது விற்பனை செய்ய வருபவரிடம் அவர்களுடைய முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், குடும்ப அட்டை இலக்கம், அதிலுள்ள விலாசம், கிராம சேவையாளர் பிரிவு ஆகிய விவரங்களைப் பெற்றுக் கொண்ட பின்னரே நகைகளைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

ஆகவே மேற்கூறிய விவரங்கள் உள்ளடங்கிய சிட்டைகளை மாத்திரம் நகைகளை விற்பனை செய்ய வருபவர்களிடம் வழங்க வேண்டும்.

குடும்ப அட்டை இல்லாது நகைகள் விற்பனை செய்ய வருவோரிடம் கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் பெற்றுக்கொண்ட பின்னரே நகைகள் கொள்வனவு செய்ய வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நகைகளைக் கொள்முதல் செய்வோர் தங்களுக்கு வரும் சில பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவுறுத்துகின்றது - என்றுள்ளது. (50)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இளம் இரத்தம் பாய்ச்சுவதையே வற்புறுத்துகிறார் ஸ்ரீகாந்தா



கொழும்பு, நவ. 13

'ஏஸியன் ரிபியூன்' இணையத் தளத்திற்குத் தாம் வழங்கிய செவ்வியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இளரத்தம் பாய்ச்சுவது பற்றியே தாம் முக்கியமாகக் குறிப்பிட்டார் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான என்.ஸ்ரீகாந்தா தெரிவித் தார்.

'தமிழ்க் கூட்டமைப்பின் வயது முதிர்ந்த தலைகள் நாடாளுமன்ற அரசியலை விட்டு ஒதுங்கவேண்டும்! ஸ்ரீகாந்தா கூறுகிறார்; பொன்சேகாவை ஆதரிப்பது குறித்து இன்னமும் முடிவில்லையாம்!!' - என்ற தலைப்பில் நேற்றுமுன்தினம் 'உதயனில்' பிரசுரமான செய்தி குறித்துக் கருத்துக் கூறுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

இவ்விடயத்தையொட்டி அந்த இணையத்தளத்திற்கு அவர் தெரிவித்த கருத்துகள், நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்காக இங்கு அப்படியே மீள் பிரசுரம் செய்யப்படுகின்றன. அவர் கூறியவை வருமாறு:-

ஒரு கட்சி அல்லது அரசியல் அமைப்பொன்று தேர்தலின்போது புதிய முகங்களைக் கொண்டு வருவது, அறிமுகப்படுத்துவது என்பது இயல்பான விடயம். இது உங்களுக்குத் தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த வரை அதற்குப் புது இரத்தம் பாய்ச்சப்பட வேண்டிய அவசர தேவையுள்ளது. இளம் இரத்தத்தை நான் குறிப்பிடுகிறேன்.

1983 முதல் காணப்பட்ட இராணுவ மோதல் காரணமாகத் தமிழர்களின் தொழில்சார் நிபுணர்கள் அரசியல் நீரோட்டத்தில் இணைவதற்குத் தயக்கம் காட்டி வந்தனர், விலகி நின்றனர்.

தற்போது முற்றிலும் வித்தியாசமான சூழ்நிலை நிலவுகின்றது. அண்மையில் நடந்துமுடிந்த யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலின் போது அரசியலுக்கு முன்பின் அறிமுகம் இல்லாத - இளமையான - துடிப்புள்ள இரண்டு, மூன்று வேட்பாளர்களை எங்களால் நிறுத்த முடிந்தது. அவர்களில் சிலர் கல்வித்துறையிலும் தகைமை பெற்றவர்களாக இருந்தனர்.

இது நல்ல அறிகுறி. இதனைத் தொடர்ந்து முன்னெடுப்போம். மேலும் இளையவர்களை நாம் கொண்டுவர வேண்டும்.

1952 இல் தமிழரசுக் கட்சி, முதற் தடவையாகப் பொதுத்தேர்தலை எதிர்கொண்டவேளை, அதன் தலைவராகவிருந்த தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அப்போது அமிர்தலிங்கத்தை நிறுத்தினார். அவருக்கு அப்போது ஆக 24 வயதுதான். மேலும் அவர் சட்டக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையை அப்போதுதான் எழுதி முடித்திருந்தார். அத்தேர்தலில் சொற்ப வித்தியாசத்தில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்திடம் தோற்று மூன்றாவதாக வந்தார். வீரசிங்கம் அத்தேர்தலில் முதல் தடவையாக வென்றார்.

தந்தை செல்வநாயகம் 1956 இல் ஒருவரல்ல, நான்கு இளைஞர்களை அந்தச் சமயத்தில் களமிறக்கினார். அமிர்தலிங்கம் ஒருவர், மற்றவர் எஸ்.இராஜதுரை. அவருக்கு அப்போது வயது 28. வி.என்.நவரத்தினத்துக்கு வயது 26. கே.பி.துரைரத்தினம் வயது 25. பொத்துவில் தொகுதியில் வெற்றியீட்டிய முஸ்தபா தமது 30 வயதுகளில் இருந்தார்.

இந்த நிலைமை அண்மைக்காலங்களில் வேகமாக மாறி வந்துள்ளது. கடந்த இரு பொதுத்தேர்தல்களிலும் போட்டியிட்ட வேட்பாளர்களைப் பொறுத்தவரை அவர்களில் ஒரு சிலரைத் தவிர, அநேகமானவர்கள் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள். 40, 50, 60களின் நடுப்பகுதியில் உள்ளவர்கள்.

ஆகவே, இது மாறவேண்டும். அனுபவமிக்க அரசியல்வாதிகள், நாடாளுமன்றத் தேர்தல் அரசியலில் இருந்து ஓய்வுபெறவேண்டும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

எமக்கு அனுபவத்துடன் இள்மைத் துடிப்பும் தேவை.

எனவே, வயது மற்றும் வாழ்க்கைத் தரங்களைப் பொறுத்தவரை சரியான கலவையாக அது அமைய வேண்டும். இம்முறையாவது இளைஞர்கள் குறித்து நாம் நோக்க வேண்டும்.

30 வயதைத் தாண்டியுள்ள கஜேந்திரகுமார் 2001 இல் முதன் முதலில் தேர்தலில் போட்டியிட்ட வேளை, அவருக்கு 26 வயதே. நான் கஜேந்திரகுமார் குறித்துக் குறிப்பிடுகிறேன்.

**கேள்வி:** பொன்னம்பலத்தின் மகன்?

**பதில்:** ஆம். குமார்பொன்னம்பலத்தின் மகன். ஜி.ஜியின் பேரன். எங்களுக்கு அவரைப் போல் வய தில் முப்பதுகளில் உள்ள இளைஞர், யுவதிகள் தேவை. இருபதுகளின் நடுப்பகுதியில் அல்லது இருபதுகளின் பிற்பகுதியில் உள்ள ஓரிருவரும் குறைந்தபட்சம் முப்பதுகள் மற்றும் நாற்பதுகளில் உள்ள சிலரும் எங்களுக்கு வேட்பாளர்களாகத் தேவை - என்றார் அவர்.

# கரம்பகம், எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் மீள்குடியமர்வு நடவடிக்கை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 13

தென்மராட்சி கிழக்கில் எழுதுமட்டுவாழ், கரம்பகம் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று இந்தப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

தென்மராட்சி பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதன் கிழக்குப் பகுதியான எழுதுமட்டுவாழ் (ஜே/334) கிராம சேவகர் பிரிவிலுள்ள பகுதிகளையும் கரம்பகம் (ஜே/330) கிராம சேவகர் பிரிவிலுள்ள பகுதிகளையும் அப்பகுதிப் பொது மக்களின் மீள்குடியேற்றத்துக்கான ஏற்பாடுகளை பாதுகாப்புப் படையினரின் இணக்கப்பாட்டுடன் மேற்கொண்டார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் சி.ஸ்ரீநிவாசன், 523 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி ஹேமந்த பண்டார ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் சாள்ஸ் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பெருமளவு பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

கடந்த 10 வருட காலமாக பொது மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படாமலிருந்த கரம்பகம், எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கடும்பிரயத்தனத்தின் மத்தியில் மீள்குடியேற்றத்துக்கு விடப்பட்டுள்ளது. நேற்றையதினம் அப்பகுதியில் மீளக்குடியேறத் தயாராக இருந்த மக்கள் மத்தியில் உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது ஏற்பட்டுள்ள புதிய ஜனநாயக சூழ்நிலையில் நாம் கடந்த காலத்தில் இழந்தவற்றை ஈடுசெய்யும் பொருட்டு தொடர்ந்தும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருவதுடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாகப் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேறி ஏனைய பிரதேசங்களில் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்த மக்கள் முதற்கட்டமாக எழுதுமட்டுவாழ் கரகம்பகம் ஆகியபிரதேசங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதுடன் இன்னமும் விடுவிக்கப்படாதிருக்கும் எழுதுமட்டு வாழ் வடக்குப் பகுதியை ஓரிரு வாரங்க ளில் விடுவிப்பதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதிகளில் மீள்குடியேற்றச் செயற்பாடுகள் முழுமையாக முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (1)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 28 | 14.11.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.இ. 02.06 வரை |
| நட்சத்திரம்: | அத்தம் |
| | மு.ப.06.30 வரை |
| சுபநேரம்: | 03.07-04.37 வரை |
| ராகுகாலம்: | 09.07-10.37 வரை |

# நல்லூர் பிரதேச சபையைத் தரம் உயர்த்தும் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.13

நல்லூர் பிரதேச சபையை நகர சபையாகத் தரம் உயர்த்தும் திட்டம் தொடர்பாக பொதுமக்களின் அபிப்பிராயங்களைப் பெறும் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையிலான குழுவினர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டு பொது மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிவர். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரப் பலகைகளை அகற்றும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம் நகரில் வைக்கப்பட்டிருக்கும் பலகைகள், பதாகைகளை அகற்றும் நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றன.

நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள விளம்பரங்கள் நேற்று அகற்றப்பட்டுள்ளன. நகரின் பல்வேறு பகுதிகளிலும் இந்த நடவடிக்கை இடம்பெறும் என மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (1-111)

**Wanted Driver & Security Guards for School**

பஸ் சாரதி/பாதுகாப்பு உத்தியோகத்தர்

**Vacancy for Drivers**

★ Preferable age 45+

**Vacancy for Two Security Guards**

★ Smart and Handsome Persons

★ Preferable age 30+

**Contacts:- 0778485415. Nallasingam.**

(90915)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காகப் பயன்படுத்துவதற்கு வான் (Van) ஒன்றை அவ்வாகனத்திற்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலைகள் போன்றவற்றுடன் கிலோமீற்றர் அடிப்படையில் வழங்கக் கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து கோரப்படுகின்றது.

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 300.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டை உதவிப்பதிவாளர் நிருவாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 2009.11.23 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் *தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்லைக்கழகம்,* திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப் பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விவரங்களை நிர்வாகக் கிளையில் உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**பதிவாளர்.** (சி/562276)

## பல்கலைக்கழக ஒழுங்கினை விளங்கிக் கொள்ளும் செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ. 13

பல்கலைக்கழக ஒழுங்கினை விளங்கிக் கொள்ளும் வகையிலான செயலமர்வு நாளை சனிக்கிழமை மு.ப. 9.30 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை யாழ். பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பல்கலைக்கழக ஒழுங்கு விதிகள் பற்றி யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன், யாழ்.பல்கலைக்கழக நிதியாளர் கே.கனகரத்தினம், கல்வித் துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, சமூகவியல்துறை க.இராஜேஸ்கண்ணா, புவியல்துறைப் பேராசிரியர் எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் ஆகியோர் கருத்துக்களை வழங்குவர்.

இந்தக் கருத்தரங்கில் கலைப்பீடத்தைச் சேர்ந்த முதலாம் வருட மாணவர் கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கலைப் பீடாதிபதி கேட்டுள்ளார். (10)

## நகரின் வாகனத் தரிப்பிடங்களை மாநகர நிர்வாகம் பொறுப்பேற்கும்

யாழ்ப்பாணம், நவ. 13

நகரில் உள்ள வாகனத் தரிப்பிடங்கள் அடுத்த ஆண்டு முதல் மாநகரசபையின் நேரடி நிர்வாகத்தில் இயங்கும் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

தற்சமயம் சைக்கிள் மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் குத்தகைக்கு விடப்படுகின்றன. மாநகரசபைக்கு வாகனத் தரிப்பிடங்களின் மூலம் கணிசமான வருமானம் பெறக்கூடிய சாத்தியம் இருப்பதால் அடுத்த ஆண்டில் இருந்து வாகனத் தரிப்பிடங்களின் செயற்பாடு மாநகரசபையிடம் இருக்கக் கூடியதாக 15 ஊழியர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் மேயர் தெரிவித்தார். (1-111)

## யாகப்பர் ஆலயத்தில் இன்று நினைவு நிகழ்வு

வண்ணை, நவ. 13

குருநகர் புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் 1993 ஆம் ஆண்டு விமானத் தாக்குதலில் மரணித்த ஒன்பது பேர்களதும் 16 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று அமைதியான முறையில் அனுஷ்டிக்கப்பட உள்ளதாக பங்குத் தந்தை அருட்பணி ஆர்.சி.எக்ஸ். நேசராசா அடிகளார் தெரிவித்தார்.

அதிகாலை 5 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலி, மரணித்த ஒன்பது பேர்களுக்கும் மற்றும் வன்னி மண்ணில் இறுதி யுத்த நடவடிக்கைகளின் போது உயிரிழந்த ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள், மேலும் பணியாளர்களுக்காக விசேட ஒப்புதலுடன் இடம்பெறுமென்றும் பங்குத் தந்தை தெரிவித்தார்.

இரங்கல் திருப்பலி முடிவில் ஆலய கிழக்குச் சாலையில் அமைந்துள்ள 'இறந்தவர்களுக்கு வணக்கம் வாழுகின்றவர்களுக்கு எச்சரிக்கை' என்னும் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் மரணித்த ஒன்பது பேர்களதும் உறவினர்கள் தீபம் ஏற்றி, மலர்கள் சாத்தி தமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் 16 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நிறைவடையும்.

**மரண அறிவித்தல்**

**ஞானப்பிரகாசம் பத்திநாதர்**

**(இளைப்பாறிய அதிபர்)**



அலுக்கை, அளவெட்டியைப் பிறப்பிடமாவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் பத்திநாதர் (11.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - லூசியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மரியம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், அமரர் ஜெயரட்ணம், ஞானரட்ணம், தேவரட்ணம், யோகரட்ணம், பாலரட்ணம், ஜீவரட்ணம், அருட்சகோதரி புளோறினா நேசரட்ணம் (தி.சி.க), நவரட்ணம், குணரட்ணம், தவரட்ணம், தனரட்ணம், அருட்தந்தை ஜெபரட்ணம், விமலரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம், அமரர் இராசநாயகம், மரியதாசன், நவமலர், ஜசிந்தா, அமரர் மரியற்றா, அமரர் ஆனந்தராசா, அருள்தாசன், ஜெகசோதி ஆகியோரின் அருமை மாமனாரும், பெனராஜ், சாந்தி, ஆனந்தி, ஜெயந்தி, சுகந்தராஜ், மொறின், டெஸ்மன், மீரா, இதயராஜ், அமலராஜ், வனிதா, றோய் லியோன், சிறோன், விமலினி, ஜெறோன், டிலீசியா, வளன், அமலினி, நிமலினி, ஜான்சி வலென்ரினா, மிலோஜன், மிலோஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.11.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து அளவெட்டி புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அலுக்கை,*
*அளவெட்டி. 021 321 7099* (90925)

தகவல்:
[illegible]

**அறிவித்தல்**

எமது நிறுவனத்தில் வேலை செய்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த அனைவரையும் மீள் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

866, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
*13.11.2009* (சி/562282)

மனித வள முகாமையாளர்,
யூரோவில்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

*மண்ணில்* 23 ★ 05 ★ 1939



*விண்ணில்* 16 ★ 10 ★ 2009

**திருமதி பாலசிங்கம் புவனேஸ்வரி**

கடந்த(16.10.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தை ஆதிக்கமாகக் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியினரின் மகளும் கிளிநொச்சி பொலிஸ் உத்தியோகத்தர் அம்பலவாணர் பாலசிங்கத்தின் அன்பு மனைவியுமான புவனேஸ்வரியின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.11.2009) சனிக்கிழமை காலை 8 மணிக்கு வேலணை வெள்ளைக் கடற்கரையில் நடைபெறும். மறுநாள் (15.11.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவசுரேந்திரன் - மகன்,
டாக்டர் செல்வி கலாநிதிதேவி பொன்னையா
(பி.சி.வை. அதிகாரி, யாழ்.மாநகர சபை),
பொன்னையா பரராசசேகரம்
(பட்டய நில அளவையாளர்), பேரமக்கள்.

*10/22 B, பாமன் கடை லேன்,*
*கொழும்பு-06.* (90917)

**மரண அறிவித்தல்கள்**

***பிரான்சிஸ் லெனாட்***



யாழ்ப்பாணம் நியூலங்கா ரேடர்ஸ் பிறைவட் லிமிட்டட் ஸ்தாபகரும், WALKER & GRIEG Co.LTD முன்னாள் உத்தியோகத்தருமான பிரான்சிஸ் லெனாட் நேற்று (12.11.2009) வியாழக்கிழமை வத்தளையில் காலமானார்.

அன்னார் றூபி பிலோமினாவின் அன்புக் கணவரும், ஸ்ரீபன், கீதா, றெஜினா (மஞ்சு– கனடா), பத்மா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிரோமி (சாந்திகம்), ராஜநாயகம், ஷேக்ஸ்பியர், ஸ்ரான்லி ஆகியோ ரின் மாமனும், ஸ்ரெபனி, ஷெறூபினி, ஷேர்வின், டெனிஷியஸ், ஜோயல், ஜெறிஷா, ஜெறமி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் இன்று (13.11.2009) வெள்ளிக்கிழமை இரவு 7 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்பு அவரின் இல்லமான 12/1, சேர்ச் வீதி, நாயகந்தை, வத்தளைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நாளை (14.11.2009) சனிக்கிழமை பி.ப. 4.15 மணியளவில் நல்லடக்கத்துக்காக தூய மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12/1, சேர்ச் வீதி,*
*நாயகந்தை, வத்தளை*
*0777222238, 011-2935366* (சி/562278)

தகவல்:
லயன். ஸ்ரீபன் லெனாட் (மகன்)

***முருகேசு கந்தையா*** (மாரிமுத்து)



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது அளுத்மாவத்தை, கொழும்பில் வசித்தவருமாகிய முருகேசு கந்தையா நேற்று (12.11.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சவுந்தரிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், அமரர்களான ஐயாத்துரை- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அமரர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் சின்னப்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் இரத்தினம் (கொக்குவில்), காலஞ்சென்ற பரிமளம் மற்றும் ஆறுமுகம் (கனடா), தெய்வானைப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரி (லண்டன்) காலஞ்சென்ற குமாரசாமி (வர்த்தகர், யாழ்ப்பரணம்) மற்றும் விசுவலிங்கம் (கனடா), குமாரசாமி (கொக்குவில்), தருமலிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் இராசலட்சுமி (கனடா), சிவசாமி, சிதம்பரநாதன், காலஞ்சென்ற குருபரநாதன் மற்றும் நீலாம்பிகை, சிவநேசன், குமரையா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.11.2009 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*62, அச்சக லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (90921)

தகவல்:
பொ.குமாரசாமி (மைத்துனர்),
கு. இரத்தினம் (சகோதரி).

# சாதனைகளால் நிமிர்ந்து நிற்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி



இலங்கையின் தேசிய பாடசாலைகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் ஒன்றாகும். தேசிய பாடசாலைகளில் ஆண், பெண் மாணவர்களைக் கொண்ட கலவன் பாடசாலை இதுவே.

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை வகுப்புகளைக் கொண்ட இக்கல்லூரி வருடாந்தம் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்குக் கல்வி புகட்டுகிறது.

1904ஆம் ஆண்டு வி.தாமோதரம்பிள்ளையால் சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையாக இது ஸ்தாபிக்கப்பட்டு, படிப்படியாக முன்னேறி 1949ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்துக்கல்லூரியாக மாற்றப்பட்டு கல்லூரியின் கல்விச் செயற்பாடு காரணமாக 1993ஆம் ஆண்டு தேசியப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

இக்கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை 58 சமாந்தர வகுப்புகளில் கற்றல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

கல்விச் செயற்பாடுகளில் ஜி.சீ.ஈ சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகும் வேளையில் தென்மராட்சி பிரதேசத்தில் பரீட்சைகளில் சித்திபெறுவோர் எண்ணிக்கை கூடுதலாக உள்ள பாடசாலையாக இக்கல்லூரி திகழ்ந்து வருகின்றது.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் வருடாந்தம் பெருமளவு மாணவர்கள் சித்திபெறுகின்றனர். வருடாந்தம் குறைந்தது 75 மாணவர்களாவது உயர்கல்விக்காக பல்கலைக்கழகம் செல்கின்றனர். 2006ஆம் ஆண்டு 63 மாணவர்களும் 2007ஆம் ஆண்டு 115 மாணவர்களும் 2008ஆம் ஆண்டு 89 மாணவர்களும் உயர்கல்விக்காகப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றுள்ளனர்.

இக்கல்லூரி மாணவர்கள் பரீட்சைகளில் மட்டுமல்ல வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்ட ரீதியில் நடத்தப்படும் போட்டிகளிலும் பங்குபற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்க் கும் சாதனைகளை ஈட்டிக்கொடுத்துள்ளனர்.

கல்லூரி மாணவர்களின் பூரணமான ஆளுமை விருத்தியையும் படைப்பாக்க விருத்தியையும் முழுமைப்படுத்தும் வகையில் தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், இந்துமன்றம், விவசாய விஞ்ஞான மன்றம் ஆகியவை இடைநிலையிலும், உயர்தரக் கலைமன்றம், உயர்தர விஞ்ஞான மன்றம், உயர்தர வர்த்தக மன்றம், உயர்தர இந்துமன்றம் ஆகிய அமைப்புகள் மாணவர்களால் சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் மாணவர்களை மனிதநேயம்மிக்கவர்களாகவும் சமூகப் பற்றுள்ளவர்களாகவும் உருவாக்கவென சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர் குழு, பெண்கள் வழிகாட்டி இன்டரக்ட் கழகம், லியோ கழகம், சூழல் பாதுகாப்புக் கழகம், புத்தாக்குநர் கழகம் போன்ற அமைப்புகளும் கல்லூரியில் செயல்பட்டு வருகின்றன.

கலைத்திட்டச் செயற்பாடுகளை முழுமைப்படுத்தி மாணவரின் முழுமையான கல்வி விருத்திக்குப் பொருத்தமான நூல்களைக் கொண்ட நூலகம் கல்லூரியில் உள்ளது. ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அறிவு விருத்திக்கு உதவக்கூடிய ஏறக்குறைய 10 ஆயிரம் நூல்கள் இந்த நூலகத்தில் உள்ளன.

கல்லூரி ஆசிரியர்கள் ஒன்றிணைந்து ஆசிரிய சகோதரத்துவம் என்னும் அமைப்பினை செயற்படுத்தி வருகின்றனர். ஆசிரியர்களின் சேவை நாள்களைப் பாராட்டுவதிலும், அவர்களின் சுகதுக்கங்களில் கலந்துகொள்வதிலும் கல்லூரித் தேவைகளை நிறைவு செய்வதிலும் இந்த அமைப்பு பெரும் பங்காற்றுகிறது.

கல்லூரியின் அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றன. இரு சங்கங்களும் இணைந்து கல்லூரிக்கென 3 1/3 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளன.

கல்லூரியினால் ஒவ்வொரு பாடசாலைத் தவணை முடிவின்போது ''தடம்'' என்னும் காலாண்டு சஞ்சிகையையும், வருட இறுதியில் ''தாமோதரன்'' என்னும் வருட மலரும் வெளியிடப்பட்டு வருகின்றது.

கல்லூரியின் அபரிமித வளர்ச்சி கண்டு இலங்கைத் தபால் திணைக்களத்தினர்




கல்லூரியின் நூற்றாண்டில் 4.50 சதம் பெறுமதியான கல்லூரி முத்[illegible] ஆண்டு வெளியிட்டு, கல்லூரியின் கல்விச் சேவைக்கு உரமிட்டனர்.

கல்லூரியில் வருடாவருடம் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் உயர்புள்ளி பெறும் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் நிதி வழங்கப்படுகிறது. 35 பெருந்தகைகள் வழங்கிய நிதி உதவியுடன் வருடாந்தம் இந்தப் புலமைப் பரிசில் நிதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நமது நாட்டின் கல்விக் கொள்கைகளுக்கமையவே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாடத்திற்கும் அதற்குத் தேவையான வளங்கள் அப்பாடசாலையில் இருக்க வேண்டும்.

மாணவர்களின் கல்வியில் பெற்றோரின் அக்கறையும் கல்வி நிலையில் மாற்றத்தினைக் கொண்டு வருகிறது. நிறையக் கட்ட்டங்கள் உள்ள பாடசாலையில் பிள்ளையைச் சேர்க்க ஒருசில பெற்றோரும், கற்றல் வளங்கள் உள்ள பாடசாலையில் சேர்க்க ஒரு சில பெற்றோரும், நல்ல விளையாட்டு மைதானம் உள்ள பாடசாலையில் சேர்க்க ஒருசில பெற்றோரும் விரும்புகின்றனர். (வளரும்)

# சாவகச்சேரி வைத்தியசாலை பற்றிய பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் விளக்கங்கள்

தங்களது 06.11.2009 பத்திரிகையில் 'வசதிகளை வேண்டி நிற்கும் சாவகச்சேரி வைத்தியசாலை' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை சம்பந்தமாக உண்மையான நிலைப் பாட்டினைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

1. இக்கட்டுரையில் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் எதிர்வரும் ஜனவரி மாதம் நிறைவு பெறும் என்பது சந்தேகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கட்டடத்தை முடித்துக் கொடுக்க சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகளுக்கு அக்கறை இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கட்டடம் முற்றாகப் பூரணமாக்கப்பட்டு உத்தியோகபூர்வத் திறப்புவிழா 06.11.2009 இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதே திகதியில் தங்கள் பத்திரிகையில் இக் கட்டுரையில் இக்குறிப்பு இடம்பெற்றுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். வெளிநோயாளர் பிரிவுக் கட்டடத்திற்கான ஆரம்பப் பணிகள் 1996ஆம் ஆண்டு ஆரம்பமாகின. ஆனால் அப்போது நிலவிய யுத்தசூழ்நிலையால் இப்பணிகள் பல தடவைகள் தடைப்பட்டன. பின்னர் 2005இல் NECORD திட்டத்தின் கீழ் இதற்கான பணிகள் ஆரம் பமாகின. மீண்டும் 2006 இல் தரைவழிப்பாதை மூடப்பட்ட பின்னர் இப்பணிகள் தடைப்பட்டு மீண்டும் 2008இல் ஆரம்பமாகி தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

2. 2006இல் ஜப்பானிய நிறுவனம் ஒன்று 2 மாடிகளைக் கொண்ட சிறுவர் விடுதி ஒன்றை அமைக்க நிதி உதவி வழங்கியது. இதற்கான பணிகள் நடைபெற்று வந்தபொழுது 2006 ஓகஸ்ற் மாதம் தரைவழிப்பாதை மூடப்பட, நிர்மாணப்பணியைத் தொடரமுடியாமல் போனது. இப்பணிகளைத் தொடருவதற்கான அனுமதியினை அந்நிறுவனம் இடைநிறுத்தியது. பின்னர் நாம் பல தடவைகள் அந்நிறுவனத்திடம் தொடர்பு கொண்டு நிர்மாணப் பணிகளை மீள ஆரம் பிக்க அனுமதி கோரியிருந்தோம். ஆனால் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இந்நிறுவனத்தைச் சேர்ந்த உயர திகாரிகள் கடந்த மாதம் நேரில் வருகை தந்து, பார்வையிட்டு, ஜனவரி மாதத்தில் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதியை வழங்கியுள்ளனர். அதன் பிரகாரம் ஜனவரியில் இப்பணிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

3. இவ்வைத்தியசாலையில் விடுதிகள் இன்றி நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களை உடனடியாக நீக்கும்பொருட்டு உலக சுகாதார ஸ்தாபனம், அவுஸ்திரேலிய மருத்துவக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன் தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு தற்காலிக விடு திகள் அமைக்கப்பட்டுள்ளன.

4. இவ்வைத்தியசாலையில் இரண்டு மாடிகளைக்கொண்ட மருத்துவ விடுதி, சத்திரசிகிச்சை விடுதி, வைத்தியர்கள் தங்குவிடுதி போன்றன அமைப்பதற்கு பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுப் பரிசீலனையில் உள்ளது.

5. அண்மையில் இவ்வைத்தியசாலைக்கு இரண்டாவது அம்புலன்ஸ் வண்டியும் வழங்கப் பட்டுள்ளது.

6. இவ்வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு சர்வதேச மருத்துவக் கழகத்தினால் தேவையான மருத்துவ உபகரணங்கள் யாவும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இதே நிறுவனத்தினால் இவ்வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவிற்குப் புதிய பற்சிகிச்சைக் கதிரை யும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

7. இவ்வைத்தியசாலைக்கு NECORD திட்டத்தின் கீழ் புதிய X-Ray இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இதனை இங்கு பொருத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அத்துடன் இவ்வைத்தியசாலைக்கென நிரந்தர X-Ray கதிர்ப் படப்பிடிப்பாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வைத்தியசாலையில் சேவைகளை மேம்படுத்த இவ்வளவு பணிகளையும் நாம் செய்த பின்பும் வைத்தியசாலையின் அபிவிருத்தியில் சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகளுக்கு அக்கறை இல்லை எனக் குறிப்பிடப்படுவது மிகவும் வேதனைக்குரியது.

-வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்தியப் பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கடிதம்

தங்கள் உதயன் பத்திரிகையில் மேற்குறிப்பிட்ட தலைப்பில் ''தென்மராட்சி வலம்'' என்ற கட்டுரைத் தொகுப்பில் 2009.10.30, 2009.11.06 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட விடயங்கள் சார்பாக எமது வைத்தியசாலை அபிவிருத்திச்சபை கீழ்க்குறிப்பிட்ட விடயங்களைத் தங்களின் கவ னத்திற்குச் சமர்ப்பிக்கின்றது.

1. யாழ்.மாவட்டத்திற்குக் கப்பலில் கொண்டு வரப்பட்ட சீமெந்து மற்றும் கட்டடப் பொருள்கள் சாவகச்சேரி வைத்தியசாலையின் நிர்வாகக் கட்டடத் தொகுதிக்கும் ஏனைய கட்டட வேலைகளுக்கும் அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டுள்ளது.

2. நிர்வாக அலகுக் கட்டட வேலைகள் பூர்த்தியாகி 2009.11.06ஆம் திகதி திறப்புவிழா நடைபெறவிருந்த நேரத்தில் குறிப்பிட்ட திகதியில் வெளியாகிய தங்கள் பத்திரிகையில் கட்டட வேலைகள் பூர்த்தியாகவில்லை எனத் தவறான செய்தியைப் பிரசுரித்திருந்தீர்கள்.

3. யாழ்.அரசாங்க அதிபரினதும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரினதும் அயராத முயற்சியினால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரண்டு தற்காலிக விடுதிக்கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சுற்றுமதிலும், மருந்துக் களஞ்சியமும் அமைக்கப்பட்டுள்ளது.

4. யாழ்.மாவட்ட உயர் அதிகாரிகள் பிரதேச வேறுபாடு பாராது எமது வைத்தியசாலைக்குத் தேவையான உதவிகளை இயன்றவரை செய்துவருகின்றனர். எனவே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சார்பான தொகுப்புக் கட்டுரையில் சரியான தகவல்களைப்பெற்றுக்கொள்ளாமல் விடயங்களைப் பிரசுரித்தமையால் வைத்தியசாலை அபிவிருத்திக்கு உதவிவரும் அதிகாரிகளுக்கும், எமக்கும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

-சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை
அபிவிருத்திச்சபை.

'வசதிகளை வேண்டி நிற்கும் சாவகச்சேரி வைத்தியசாலை' என்ற கட்டுரை 'தென்மராட்சி வலம்' என்னும் புதிய சிறப்பம்சத்துக்காகப் பிரத்தியேகமாக எழுதப்பட்டது. எனினும் தென்மராட்சி வலம் பகுதியை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இக்கட்டுரையும் பொருத்தமற்ற சூழலில் பிரசுரமாகியது. [illegible] வாசகர்களை [illegible] கொள்கிறோம்; சிரமத்துக்கும் தவறுக்கும் வருந்துகிறோம்.

- ஆசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதிக் கோயிலுக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று விஜயம் செய்தபோது ஆலய பிரதம குரு மாலை அணிவித்து வரவேற்பதையும் கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் விநாயகர் ஆலயத்துக்குச் சென்றபோது பரிபாலனசபைத் தலைவர் மகஜர் ஒன்றைக் கையளிப்பதை யும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். சமூக நலத்துறை அமைச்சர் மரக்கன்றுகளை நட்டு வைப்பதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: நந்தன்)

# சிங்களமொழிக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தில் சிறிதளவுகூட ஆங்கிலமொழிக்கு வழங்கப்படுவதில்லை

### ஆங்கில அறிவின் தரம் குறைவதன் காரணத்தை விளக்குகிறார் அத்துறைத் தலைவர்

யாழ்ப்பாணம், நவ.13



சிங்களமொழிக்கு வழங்கப்பட்டுவரும் முக்கியத்துவத்தில் சிறிதளவுகூட ஆங்கிலமொழிக்குவழங்கப்படுவதில்லை. ஆங்கில மொழியின் முக்கியத்துவமும் உணரப்பட வேண்டும். ஆங்கிலத்தின் முக்கியத்துவம்உணரப்படாமையால் எல்லா நிலைகளிலும் அதன் தரம் பின்னடைந்தே வருகிறது.

இவ்வாறு கூறினார். யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் எஸ்.சுந்தரேஸ்வரன்.

யாழ்.கஸ்தூரியார் வீதியில் GATEWAY LANGAGE CENTRE திறப்புவிழா நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாறறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

எமது சொந்த மொழியானது பல்துறைகளில் முக்கியத்துவம் பெற்றாலும் தொழில்நுட்பம், விஞ்ஞானம், மருத்துவம், சட்டம் போன்ற துறைகளில் ஆங்கிலம் இன்னமும் முக்கியத்துவம் பெற்றே வருகிறது.

ஆசிரியர்கள், புலமையாளர்கள் அனைவராலும் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் ஆங்கில அறிவின் தரம் மிக மட்டமாகவே இருப்பதைப் பார்க்கின்றோம்.

உயர் கல்விக்கும், தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கும் ஆங்கில அறிவே முக்கிய தேவையாக எதிர்பார்க்கப்படுகிறது.

எமது பல்கலைக்கழகமானது நவீன உலகத்தின் தேவைக்கேற்ப பட்டதாரிகளைத் தகுதியானவர்களாக உருவாக்கவே விரும்புகிறது.

வருடக் கணக்காக ஆங்கிலத்தைப் படித்த பின்னரும்கூட ஆங்கிலத்தில் ஒரு வார்த்தையைப் பேசமுடியாத மாணவர்களையும் நாம் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல மிக நன்றாகப் படித்தவர்களும் ஆங்கிலச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இன்று ஆங்கிலமானது உயர் திறனை வெளிப்படுத்தும் கல்வியாகக் கருதப்படுகிறது. எனவே அதனை தன்வயப்படுத்தி செயற்படுவது மிக அவசியமானது.

பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்த் திறமை உள்ளவர்களாக இருந்த போதிலும் ஆங்கில அறிவில் மிகப் பின்தங்கிய நிலையில் இருப்பதாகக் கூறப்படுவது மனவேதனைக்குரிய விடயமாகும்.

தகவல் தொழில்நுட்பம் இப்பொழுது முக்கியத்துவம் பெற்றிருப்பதனால் அனைவரும் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆங்கில அறிவுதான் உலக அளவில் அங்கீகரிக்கப்படுகிறது. ஆங்கில அறிவின் மூலமே இனிவரும் நவீன உல்கைக் காண முடியும்.-என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் உரையாற்றுகையில்:- .

கடந்தகால யுத்த அனர்த்தத்தின் விளைவாக நாம் பல இழப்புக்களைச் சந்தித்தோம். இதன் காரணமாக எங்களுடைய கல்வி வளர்ச்சி சற்று வீழ்ச்சியடைந்து இருப்பதனை நாங்கள் காண முடிகிறது.

அதனை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் என்பதே எமது எல்லோருடைய விரும்பமுமாகும்.

எமது இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையிலே 'கேற்வே' நிறுவனம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 150 மாணவர்களுக்கு நிறைவான ஆங்கிலக் கல்வியை வழங்குவதற்கு முன்வந்திருப்பதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

உதயன் பத்திரிகை நிறுவன முகாமைத்துவ இயக்குநர் ஈ.சரவணபவனுடைய முயற்சியினாலேயே இந்த நிறுவனம் திறந்து வைக்கப்படுகிறது.

எமது நாட்டிலும், ஏனைய வெளிநாடுகளிலும் எமது மக்கள் ஆங்கிலக் கல்வி அறிவின் போதாமை காரணமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள், பின்னடைவுகளைக் கருத்தில்கொண்டு எமது மக்கள் உலகத்தின் எப்பகுதியிலும் சுயமாகச் செயற்பட்டு முன்னேற வேண்டும் என்ற தூர நோக்கு சிந்தனையோடு இந்த நிறுவனம் திறந்து வைக்கப்படுகிறது.

சிறப்பான ஆங்கிலச் சமுதாயம் இந்த மண்ணில் உருவாக வேண்டும் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணி மக்களுடைய மனத்தினை நிறைவுபடுத்தும் பணியாக இருக்கும்-என்றார்.

(203-14)

# ஊர்காவற்றுறை இறங்குதுறையை விரைவில் புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

ஊர்காவற்றுறை இறங்குதுறை விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சேதமடைந்த நிலையில் காணப்படும் இந்த இறங்குதுறையை மீளப் புனரமைப்புச் செய்து மக்கள் சிரமமின்றி தமது கடற்பாதை போக்குவரத்தை மேற்கொள்ள வசதிகள் செய்யப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

தற்போது இந்த இறங்குதுறையை மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

(203-224)

# நெடுந்தீவு வெல்லை வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

நெடுந்தீவு, நவ.9

நெடுந்தீவில் உள்ள பல வீதிகள் திருத்தியமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளபோதும் பிரதான வீதிக்கு அடுத்து மக்கள் கூடுதலாகப் பயன்படுத்தும் வெல்லை வீதிக்கான புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என நெடுந்தீவு மக்கள் கூறுகின்றார்கள்.

தற்சமயம் கிழக்குப் பகுதியில் புனித அந்தோனியார் கோயில் வரையான வீதியையும் திருத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வீதி அபிவிருத்தித் திணைக்களம், மிகவும் முக்கிய வீதியான வெல்லை வீதியைத் திருத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மழை காலங்களில் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்வது மிகவும் கஷ்டமானது எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

(203-111)

# யு.என்.டி.பி.நிறுவனத்தால் ஜீவனோபாய சுழற்சிக் கடன்

யாழ்ப்பாணம், நவ.13

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டப் பிரிவினால் (யு.என்.டி.பி) மந்துவில் வடக்கு மக்களுக்கு ஜீவனோபாய சுழற்சிக் கடனாக ஐந்து லட்சம் ரூபா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

மந்துவில் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக மந்துவில் வடக்கு பொது மண்டபத்தில் கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

(201-207)

# 'போரூட்' நிறுவனம் உதவிகள் வழங்கியது

நவாலி, நவ.13

கைதடி நலன்புரி முகாமிலிருந்து முதற் தடவையாக வந்து சேர்ந்தவர்களுக்கு 'போரூட்' நிறுவனம் கடந்தவாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

(203-100)

# கொழும்புப் பயணகட்டுப்பாடுகளை நீக்கி கட்டணத்தை நியாயமானதாக அறவிட உதவுக

### மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,நவ.13

ஏ-9 பாதை ஊடாக சொகுசு பஸ்களில் பிரயாணம் செய்கிறவர்களிடம் பஸ் உரிமையாளர்கள் ஈவிரக்கமில்லாமல் 2400 ரூபாவைக் கட்டணமாக அறவிடுகிறார்கள். ஏ-9 பாதை மூடப்படுவதற்கு முன்னர் சொகுசு பஸ்களில் கட்டணமாக 1000 ரூபா மட்டுமே அறவிடப்பட்டது. இந்தத் தொகையில் 350 ரூபா புலிகளுக்கு வரியாக செலுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. இன்று புலிகள் அழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இவ்விதம் பெருந்தொகைப் பணத்தை கட்டணமாக யார் நிர்ணயித்தார்கள் என்று விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இந்த நியாயமற்ற அளவுக் கட்டணம் அறவிடுவதற்கு அதிகாரம் அளித்தது யார் என்று புரியவில்லை.

இவ்வாறு கவலை தெரிவித்து மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளது. மேற்படி கூட்டமைப்பின் தலைவர் சிறிசக்திவேல் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தென்னிலங்கையில் 50 சதத்தை மேலதிகமாக அறவிட்டாலும் உரிமையாளரின் வழிதடத்துக்கான உரிமம் இரத்து செய்யப்பட்டுவிடும். ஆனால் எந்தக்கட்டுப்பாடும் இன்றி இவ்வளவு பணம் ஏன் இங்கு அறவிடப்படுகின்றது. இதில் சம்பந்தப்படுபவர்கள் தமிழர்கள் என்பதாலா?

இந்த விவகாரத்தில் ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு தேவையில்லாத கட்டுப்பாடுகள்ள நீக்கி அதிக பஸ்களும் விமானசேவைகளும் நடைபெற உதவ வேண்டும். கட்டணங்களை நீதியான அளவில் நிர்ணயிக்கவும் உதவ வேண்டும்.

இவ்வாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

# இசை அர்ச்சனை முருகப்பெருமானுக்கு ஏற்புடையது

ஞானக்கதிர்

அஞ்ஞானத்தை அகல்வித்து மெய்ஞானத்தையளிப்பவன் இறைவன். ஞானத்தின் திருவுருவாக விளங்கும் இறைவன் மெய்ஞான பண்டிதன். சூராதி அவுணர்க்கு மாயையினால் ஏற்பட்ட ஆணவத்தை அகற்றி, தன் கை வேலால் ஞானத்தை நல்கி புன்னெறி அகலச்செய்து மேலாம் நன்னெறி கைவரச் செய்தவன் முருகப்பெருமான்.


ஞானசக்தியாகிய முருகன் கைவேல் ஆழ்ந்து, அகன்று நுண்ணியதாய் இருப்பதைக் காண்கிறோம். நமது அறிவு , சிந்தனை, செயல்கள் யாவும் அதேபோன்று ஆழமாகவும், பரந்துபட்டதாகவும், கூர்மையானதாகவும் இருப்பது அவசியமென்பதை அவன் கைவேல் எடுத்துக் காட்டுகின்றது.

உலக நலத்துக்கென பஞ்சபூதங்களுடன் தொடர்புபட்டதாக அவனது அவதாரம் விளங்குகின்றது. இறைவனது நெற்றிக் கண்ணிலிருந்து ஜோதியாகத் தோன்றி காற்றில் கலந்து, பொய்கையிலே விழுந்து நிலந் தொடர்பான தாமரை மலரிலே முருகனாக உருவாகின்றான்.

முருகன் ஏழிசைக்கும் தலைவனாய், இசையின் பயனாய் விளங்குபவன். அத்தகைய கலைஞானத்தை நல்கும் கந்தனுக்கு இசை அர்ச்சனை மிக இஷ்டமானது. இசையால் இறைவன் சாந்தமாகிறான். இறைவன் சாந்தம் அகிலத்தையே சாந்தநிலைப்படுத்துகிறது. அதனால் இறை கருணை பெருகி மக்கள் சிந்தை குளிர்ந்து வாழ்வில் ஆத்மீக சக்தி நிறைந்து நாட்டிலே அமைதி, அன்பு நிறைகிறது. சாந்தமே சங்கீதத்தின் பூரணத்துவம் எனக் கூறப்படுவதால் நிரந்தர அமைதி வாழ்வு நிலைக்க சாந்த [illegible] இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கல்வி அமைச்சின் பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தம், கல்வி அமைச்சின் ஆலோசகர் எஸ்.தணிகாசலம்பிள்ளை ஆகியோர் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு கடந்த புதன்கிழமை மேற்கொண்ட விஜயத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தம் கல்வி அமைச்சின் ஆலோசகர் எஸ்.தணிகாசலம் பிள்ளை ஆகியோர் மங்களவிளக்கேற்றுகின்றனர். கல்லூரி அதிபர் ஆறு.தி.[illegible]முருகன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோ[illegible]ரும் படத்தில் காணப்படுகின்றனர். (படங்கள்: மகாலிங்கசிவம்)

## ஆலய மகா சபையின் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.13

இணுவில் கந்தசுவாமி ஆலய மகாசபையின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய உள் மண்டபத்தில் தலைவர் செ. சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது. (201)

## கோப்பாய் மத்தியிலுள்ள விடுவிக்கப்பட்டோர் கவனத்திற்கு

நல்லூர், நவ.13

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் பிரிவில் குடியமர்ந்தோரில் வீடு இல்லாதவர்கள், காணி இல்லாதவர்கள், காணிச் சொந்தக்காரரிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்றுவந்து உடனடியாக சமர்ப்பிக்குமாறு கோப்பாய் மத்தி கிராம சேவகர் எஸ்.பாலசுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை பிறப்பு, இறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதவர்களும் குழந்தை பிறந்து இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்களும் தொலைந்த அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்களும் உடனடியாக விண்ணப்பிக்கும்படியும் அவர் கூறினார்.

அத்துடன் ஏற்கனவே பொதுசன மாதாந்த உதவித்தொகையினை பெற்றவர்கள் மீள விண்ணப்பிக்குமாறு கோப்பாய் மத்தி கிராமசேவையாளர் மேலும் கூறியுள்ளார். (203-15)

## 'காந்தியம்' இதழ் வெளியாகியுள்ளது

சுழிபுரம்,நவ.13

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர் காந்தியம் ஒக்ரோபர்-நவம்பர் மாத இதழை இலங்கை முழுவதும் உள்ள சங்க அங்கத்தவர்களுக்கு தபாலில் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தமுறை இதழில் காந்தியவாதி நீர்வேலி வேலாயுதபிள்ளை பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

வேலாயுதபிள்ளையின் காந்தியத் தொடர்பை தென்னிலங்கை காந்திய சங்கத்தலைவர் சிங்களப் பெரியார் ஆரியரத்தினா அறிந்து அவரை தென்னிலங்கையில் நடைபெறவிருந்த காந்திய மகாநாட்டுக்கு வரும்படி அழைத்திருந்தார். போக்குவரத்து வசதியின்மையால் அங்கு செல்ல முடியாதிருந்த வேலாயுதபிள்ளையை அழைத்துச் செல்ல தனிவிமானம் ஒன்றை ஆரியரத்தினா ஏற்பாடு செய்து அவரை அழைப்பித்தார் அதன் பேரில் வேலாயுதபிள்ளை அங்கு சென்று மாநாட்டில் உரை நிகழ்த்தினார்.

இந்தத்தகவல் காந்தியம் ஒக்ரோபர் இதழில் தரப்பட்டுள்ளது. அக்காலத்து பெரியார்களின் பெருமை இவ்வாறு நினைவு கூறப்பட்டிருப்பது கவனத்துக்குரியது. (ப-28)

## அடுத்த ஆண்டுக்கான இலவச பாடநூல்கள் மேலும் ஒரு தொகுதி எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுக்கான மேலும் ஒரு தொகுதி பாடநூல்கள் எடுத்து வரப்படவுள்ளன என்று யாழ்.மேலதிக மகாண கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வராஜா தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடநூல்கள் தரைப்பாதையூடாக எடுத்துவரப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே தரைமார்க்கமாக 6 லட்சம் இலவசப் பாடநூல்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. கடந்த வாரம் மாணவர்களுக்கான இலவச சீருடை துணிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே சமயம் அடுத்த ஆண்டுக்கான இலவச பாடநூல்களை வைபவரீதியாக விநியோகிக்கவும் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (203-224)

## கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை

வலி.வடக்கு, நவ.13

கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு மல்லாகம் நீதிமன்றத்தினால் இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 75 ஆயிரம் ரூபா குற்றப்பணமாகச் செலுத்துமாறும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஏழாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்ற சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்ட நபரை கைது செய்து கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போது.

குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதே நபர் ஏற்கனவே கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்ட குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (203-86)

## 'போதையற்ற வாழ்வு' ஓவியப் போட்டி வெற்றியாளர் விவரம் அறிவிப்பு

அச்சுவேலி, நவ.13

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட போதையற்ற வாழ்வு ஓவியப் போட்டியில் பரிசில் பெறுவோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. பரிசில் பெறுவோர் பெயர் விவரம் வருமாறு:

பத்மநேசன் பிரசாத் - தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், தவராசா கபேஸ்சன் - ஞானபதி இணுவில் மேற்கு, இணுவில், தவராசா தயேந்திரன் (யோகி) - இருபாலை கிழக்கு, வசந்தபுரம், கோப்பாய்.

ஆறுதல் பரிசு பெறுவோர்:

நந்தகோபால் சிவகுமார் - பூதவராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை, தேவராசா பவிராஜ் - சுன்னாகம் தெற்கு - சபாபதிப்பிள்ளை வீதி, உதயகுமார் கஜேந்திரன் - பூந்தோட்டம், வவுனியா, சுதுசிங்கம் கமலாவதி - முதலியார் குளம் றோ.க.த.க. பாடசாலை, வவுனியா, வடிவேலு சண்முகராசா - வட்டுக்கோட்டை, சங்கானை.

முதலாம் பரிசுக்காக 15 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும், மூன்றாவது பரிசாக 7 ஆயிரத்தி 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் 15 ஓவியங்கள் வீதம் 45 ஓவியங்கள் தெரிவுசெய்யப்பட்டு அதில் இருந்து மகாணமட்டத் தெரிவுகள் நடைபெற்றுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட ஓவியங்களின் கண்காட்சியும் நடைபெறவுள்ளது. (203-11)

## சைவ சமயப் போட்டிக்கு வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்க

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவால் நடத்தப்படும் சைவசமய அறிவுப் போட்டிக்கு விண்ணப்பித்த யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் தரம் 4 தொடக்கம் 13 வரையான வகுப்புகளுக்கான போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இப் போட்டிக்கான வினாத்தாள்களை தமது கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்று விடைத்தாள்களை மீண்டும் தமது கோட்டங்களில் கையளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201)

## சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,நவ.13

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற சைவப் புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சைவப்புலவர் சங்கத்தின் பொன் விழாவினையொட்டி இம்முறை வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலும் லண்டன், சுவிஸ், ஜேர்மன் ஆகிய நாடுகளிலும் சைவப்புலவர் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன.

எனவே இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் ''தலைவர், 153, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது த்பால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம் என்று சங்கத்தின் செயலாளர் கந்தசத்தியநாதன் அறிவித்துள்ளார். (9)

## கோப்பாய் பிரதேசத்தில் சிறுவர் தின நிகழ்வுகள்

நல்லூர், நவ.13

'சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கோப்பாய் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை சிறுவர்கள் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மேகன்றாஸ் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (203-111)

## மலேரியா, டெங்குநோய் தடுப்பு இரத்தப் பரிசோதனை

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.பிராந்திய மலேரியா தடுப்பு அலுவலர்களின் ஏற்பாட்டில் மலேரியா, டெங்கு நோய் தடுப்பு, இரத்தப் பரிசோதனை நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை தொண்டைமானாறு பொதுச் சுகாதார பரிசோதகர் க.அருட்குமாரனின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய மலேரியா தடுப்பு வெளிக்கள அலுவலர்களான வ. வர்ணகுலசிங்கம், எஸ்.சிறீக்கண்ணன், ஆர். இரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசோதனையை மேற்கொண்டனர். (204-233)

## இயம சங்காரம்

சண்டிலிப்பாய்,நவ.13

சுதுமலை விசாலாஷி அம்பாள் சமேத விஸ்வநாதசுவாமி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இயம சங்கார உற்சவம் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தை முன்னிட்டு கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமான இலட்சா அர்ச்சனையும் ஹோமமும் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று இறுதி நாள் இயம சங்காரம் நடைபெறவிருக்கின்றது. (204-115)








சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய சிறுவர் [illegible] மத்திய சகிதம் அழைத்துவரப்படுகின்றனர். மங்கள விளக்கினை யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் ஏற்று[illegible] 2 ஆம் இடம் பெற்ற இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நவாலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் ஆசிரியர் தின விழா அண்மையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றத. இவ்விழாவில் கல்லூரியின் அதிபர் வணபிதா ஜேம்ஸ் சிங்கராஜர் மங்கள விளக்கேற்றுவதையும், அதிபர், ஆசிரியர்கள், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையம் ஆசிரியர்கள் ஆசிரியர் கீதம் இசைப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: புவி)*


## மணமகள் தேவை

MSC முடித்துவிட்டு Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian PR உள்ள சைவசமயம் 29 வயது ஏழுச்செவ்வாய், பூசநட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு வைத்தியத் துறையில் படித்துக்கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக்கொண்ட மணமகள் தேவை. தொடர்பு: 0713163508 (90672)



## The 58th Annual Festival

of
Carols
by
The Youth of the North
at
The Peto Memorial Hall
St. John's College, Jaffna
on
Saturday 14th November 2009
at 10.00 a.m
Admission by programme Rs 20/=
(C/562243)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2008

பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - I - 2007 (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 26.11.2009 (வியாழக்கிழமை) தொடக்கம் 12.12.2009 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 23.11.2009 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021- 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்.** 12.11.2009 (சி/562267)



## மரண அறிவித்தல்

### கந்தையா சுப்பிரமணியம்



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் (11.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் கணவரும் காலஞ்சென்ற சின்னராசா, நாகேந்திரம், குலேந்திரம் (M.P.C.S., சாவகச்சேரி), இராசேந்திரம், கன்னிகாதேவி, மகேந்திராதேவி, இந்திராதேவி, சந்திராதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் யோகேஸ்வரி, மகாதேவி, முருகசோதி, தவமணிதேவி, குணரத்தினம், சின்னத்துரை, ஆனந்தராசா, உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஹேமவர்சினி, ஹேமமாலினி (பிரதேசசபை, கொடிகாமம்), திவாகரன், சுபாகரன் (மலேசியா), ஜனகன் (M.P.C.S.சாவகச்சேரி), ஜனார்த்தனி (திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம்), நிருபானந்தன், லோகானந்தன், லஜானந்தன் (M.P.C.S.சாவகச்சேரி), தயானந்தன், அருளானந்தன், கவிதா, லலிதா, வசீகரன், ஜசிதா, செந்தூரன், சபேசன், சுபாசினி (யாழ்.பல்கலைக்கழகம்), சயந்தன், பிரதீபன் (பிரான்ஸ்), ரிஜதீபா, நிஷாந்தன் (பிரான்ஸ்), நிதுஷா (பிரான்ஸ்), நிவேதா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஜெயந்தன் (நீதிமன்றம், சாவகச்சேரி), ஸ்ரீரஜனி (இந்தியா), ஜெயந்தினி (வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை), சிவநாதன் (பிரதேச செயலகம், குடத்தனை), சுபாஜினி, கதிர்காமநாதன் ஆகியோரின் துணைவழிப் பேரனும் நர்த்தனி, அஞ்சரதன், தனுராஜ், தனுசாந், டனோசாந் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (12.11.2009) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப.2 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (சி/562268)


## சங்கிலி அபகரித்த நபருக்கு 18 மாத சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம்,நவ.13

வீதியில் சென்ற பெண் அணிந்திருந்த 80 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு தங்கச் சங்கிலிகளை அறுத்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு 11.11.2009 தொடக்கம் பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறையாக அனுபவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் கடந்த 31 ஆம் திகதி இடம் பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரின் துரித நடவடிக்கையினால் இந்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட தங்கச் சங்கிலிகளை உரியவரிடம் ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (203-207)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் உள்ளார்ந்த சக்தியையும் பாதுகாப்பையும் அனுபவம் செய்தல் என்ற தொனிப்பொருளிலான நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)

## நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட தொண்டராசிரியருக்கு யாழ்.வலயத்தில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், நவ.13

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நேற் றும் நேற்று முன்தினமும் யாழ்.வலயத் தில் இடம்பெற்றன.

பரீட்சைக்குத் தோற்றமுடியாமல் போன 27 பேருக்கான நேர்முகப் பரீட்சைகளே யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றன.

இந்த நேர்முகப் பரீட்சை சபை நடத்துவதற்காக கல்வி அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். (203-224)

## நெடுந்தீவில் 'லங்காபெல்' கோபுரம் அமைப்பு

நல்லூர், நவ.13

நெடுந்தீவில் 'லங்காபெல்' நிறுவனம் தொலைத் தொடர்புக்கான பிரதான கோபுரத்தை அமைக்கவுள்ளது.

கோபுரம் அமைப்பதற்கான காணியையும் மேற்படி நிறுவனம் பெற்றுக் கொண்டுள்ளது.

'டயலொக்' நிறுவனமும் இங்கு தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (203-111)


## தவறிவிட்டது

மருதமகால், இணுவில் வீதி, மானிப்பாயை சேர்ந்த கு.கு தங்கராசா என்பவரது தே.அ.அ. (இல: 371491678தி) யாழ்நகரில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் தயவுசெய்து 0776909677 அல் லது 2226724 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (90902)



## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA பேட்டுக் குஞ்சுகள் நாளை 14.11.2009ஆம் திகதி விநியோகிக்கப்படும் பதிவுகள் முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

ராஜீவ் கால்நடைத்தீவன விற்பனை நிலையம்
ஆனைக்கோட்டைச் சந்தி.
[illegible] (90917)


## கொடிகாமம் முகாம் செவ்வாய் மூடப்பட்டது

கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் இயங்கி வந்த நலன்புரி நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை மூடப்பட்டது.

இந்த நலன்புரி நிலையத்திலிருந்த 74 குடும்பங்களைச் சேர்ந்த 255 பேரும் கொடிகாமம் கிராமாவில் நலன்புரி நிலையத்திற்கு மாற்றப்பட்டதையடுத்து மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(1-207)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவனும் துரைவீதி கோண்டாவில் மேற்கில் வசிக்கும்*

**சுதாகரன் - சுசி தம்பதியரின்**

*செல்வப் புதல்வனுமாகிய*

**செல்வன் சுதாகரன் ஜனார்த்தன்**

*2009 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் **153** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு எதிர்காலங்களிலும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் பெற ஆசி கூறுகின்றோம்.*

**வாழ்த்துவோர்:**
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, தங்கை, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், சித்தப்பாமார், சித்திமார்.

துரை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (சி/562264)



## கேள்வி அறிவித்தல்

'பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகத்திற்கு தரவுப் பதிவினர், எழுது வினைஞர், தட்டெழுத்தாளர், படவரைஞர் மற்றும் சுருக்கெழுத்தாளர் சேவையை மனித வலுநிறுவனங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளல்'

"Optaining Service of Data Entry Operators, Clerks, Typest Draughtsman and steno for Deputy General Manager (North)'s office though Man Power Agency"

**கேள்வி இல : NP/DGM/2009/38**

மனிதவலு முகவர் நிலையங்களிடமிருந்த (Man Poyer Agency) மற்றும் அங்கீகாரம் பெற்ற கணனி கற்கை நிறுவனங்களிடமிருந்து (Recognized Computer Training Centers) மேல் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட கேள்வி (Tender) 2009.11.25 ஆம் திகதி மாலை 2 மணிவரை இலங்கை மின்சாரசபை )வடமாகாண பெறுகை குழுத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வியாளர்கள், கேள்விப் பத்திரங்களை ரூபா 1000 (ற்கான) கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று பணத்தினை செலுத்துவதன் மூலம், அல்லது பொது முகாமையாளர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு என்ற பெயரில் பெறகப்பட்ட வங்கிக்கட்டளையாகவோ சமர்ப்பித்து, இல.500 கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள பிரதிப் பொதுமுகாமையாளர், (வடமாகாணம்) அலுவலகத்தில் 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆம் திகதி வரை வேலை நாள்களில் காலை 9 மணிதொடக்கம் பி.ப 3 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 25.11.2009 மாலை 2 மணிக்கு பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சாரசபை, இல. 500, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமளிக்கலாம்.

கேள்வியாளர்கள் இலங்கை மின்சாரசபையிலிருந்து பெறப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரம் இணைப் பிரதிகளில் (Duplicate) பூர்த்தி செய்து, கடித உறையிலிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் "பிரதி பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகத்திற்கு தரவுப் பதிவினர், எழுது வினைஞர், தட்டெழுத்தாளர், படவரைஞர் மற்றும் மற்றும் சுருக்கெழுத்தாளர் சேவையை மனித வலு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளல்" எனக் குறிப்பிட்டு மேற்குறித்த முகவரிக்கு 25.11.2009 ஆந் திததி மாலை 2 மணிக்கு முன்னர் கிடைக்கும் படி பதிவுத்தபாலில் சேர்க்கப்படல் வேண்டும். இவ்வறிவித்தல் தொடர்பான மேலதின விவரங்களை கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்தில் உள்ள மின்பொறியியலாளர் (வாணிபம்) வடக்கு அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

மாகாண பெறுகைக் குழு (வட மாகாணம்),
பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்
இலங்கை மின்சார சபை
இல. 500, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. :021 222 2496
021 222 3233
தொலை நகல் இல.: 021 222 2497

தலைவர்.
மாகாண பெறுகைக் குழு

*"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"*
*இலங்கை மின்சார சபை*

(சி/562269)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இணையத்தள அங்குரார்ப்பண வைபவம் அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய உப அதிபர் ம.அருணாசலம், தென்மராட்சி வலய ஐ.சி.ரி.இணைப்பாளர் அ.கதிர்காமநாதன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.சியந்தன் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினர் இணையத்தளத்தை இயக்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

# தேசிய மரபுரிமை சிறுவர்களுக்கானது போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

அச்சுவேலி,நவ.13

தேசிய மரபுரிமை அமைச்சின் வழிப்படுத்தலுக்கு அமைய வடக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ''தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது'' என்ற தொனிப்பொருளில் சிறுகதை, குறும்படம், கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிபெற்றோர் பெயர் விவரம் வருமாறு:

சிறுகதை - 'குழந்தைத் தாய்' - மகாலிங்கம் நிரோஸ்குமார் - வவுனியா, 'அருஞ் சொத்து' - செல்வி உஷானி ஜெயக்குமார் - கரவெட்டி, 'விழுதில்லாத விருட்சங்கள்' - செல்வி பூதன் ஜெயமலர் - விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்.

குறும்படம் - 'எதிர்பார்ப்பு' - சுப்பிரமணியம் வரதகுமார், வவுனியா, 'உரிமையின் விலை' - செபஸ்ரி நீக்கிலாஸ் ஜோசவ் மரியாம்பிள்ளை - குருநகர், யாழ்ப்பாணம், 'பள்ளிக்கூடம்' - கந்தையா ஸ்ரீ கந்தவேள் - வவுனியா.

கவிதை - 'தேசிய மரபுரிமையை தேடி அலையும் சிறுவர் நாம்' - அருளப்பு மரியதாஸ் ஜெயரத்தினம் - கரவெட்டி, 'பிஞ்சு விழுதுகள்' - விசுவலிங்கன் முகிலன் - நெடுந்தீவு, 'தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது' - சிவசுப்பிரமணியம் ஜெயசங்கர் - கரவெட்டி.

கட்டுரை - 'தேசிய மரபுரிமை சிறுவர்களுக்கானது' - திருமதி பத்மலோகினி சற்குணமூர்த்தி - நல்லூர், 'தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது' - இராஜப்பு திருத்துவராஜனி -அல்வாய், 'தேசத்தின் விழுதுகளை வேரூன்றச் செய்வோம்' - ஜெயரட்ணம் துளசி - செட்டிக்குளம்.

(203-11)

# மீள்குடியமர்ந்தவர்களை அமைச்சர் நேரில் சந்திக்கிறார்

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மன்னார் போன்ற மாவட்டங்களில் நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்குள் சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டோர் அனைவரும் தங்கி இருக்கும் அனைத்துப் பகுதிகளுக்குமான விஜயத்தை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொள்ளவுள்ளார்.

இதனால், மேற்படி மக்களுக்கு முற்பணமாக வழங்கப்படுகின்ற 5000 ரூபா பணம், அவர்களுக்குரிய உபகரணப் பொதிகள் என்பன அனைத்து மக்களுக்கும் கிடைத்துள்ளனவா என்பதையும் அம்மக்களுக்குரிய 6 மாத கால நிவாரணம் ஒழுங்கு முறையில் வழங்கப்படுகின்றனவா என்பதையும் ஆராய்ந்து உடனடியாகத் தனக்கு உறுதிப்படுத்துமாறு அரசாங்க அதிபர் ஊடாக அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அத்துடன் அம்மக்களது இருப்பிட வசதிகள் வாழ்வாதாரம், வாக்குப் பதிவுகள், உள்ளூரில் இடம்பெயர்ந்து மீளத் தங்களது சொந்த இருப்பிடங்களில் குடியேறியுள்ள குடும்பங்களின் விவரங்கள் போன்றவற்றையும் ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார்.

(1)

## தவறவிடப்பட்ட அ.அட்டைகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில்

யாழ்ப்பாணம்,நவ.13

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து அழைத்து வரப்பட்டு சாவகச்சேரி கலை மன்றத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் தவறவிடப்பட்டதாக கருதப்படும் அடையாள அட்டைகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளன.

அரியதுரை இராமமூர்த்தி - வன்னேரிக்குளம் என்பவரது தேசிய அடையாள அட்டையும் சுகந்தன் பாலசுப்பிரமணியம் - தர்மபுரம், சிவராசா மகாலிங்கம் - மீசாலை மேற்கு ஆகியோருக்கு வவுனியா பொலிஸ் அத்தியட்சகரால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை ஆகியவையும் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்களை பிரதேச செயலகத்திற்கு வருகைதந்து பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(203-207)

# குருநகர் மீனவர்களின் பிரச்சினைக்கு அமைச்சர் டக்ளஸ் சுமுகத்தீர்வு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.குடாநாட்டின் மேற்குக் கரையோரப் பகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தில் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் 10 மணிக்கு நடைபெற்றது.

இழுவைப்படகு, மற்றும் சிறு படகுகளில் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கிடையே தத்தமது தொழில்களைத் தொடர்வதில் கடந்த இரு மாத காலமாக நிலவிவந்த இழுபறிக்கு நேற்றைய தினம் தீர்வு காணக்கூடிய சுமுகமான சூழ்நிலையை அமைச்சர் டக்ளஸ் ஏற்படுத்தியிருந்த நிலையில் குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் இச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

கடற்றொழிலை எதிர்காலத்தில் திறம்பட முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான முன்னேற்பாடுகள், ஒழுங்குகள் தொடர்பாக அமைச்சரிடம் கடற்தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் தமது ஆலோசனைகளை முன்வைத்தனர். அவற்றில் தற்போது நடைமுறையில் இருக்கும் அதிகாலை 4 மணிக்கு தொழிலுக்குச் செல்வதற்கான நேரத்தை அதிகாலை 3 மணிக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல், ஒரு நாள் முழுதும் கடலில் தங்கிநின்று தொழில் செய்வதற்கான 28 அடி நீளப் படகினைத் தயாரித்தல், கடற்கரையில் மக்களின் பாவனைக்கு அனுமதிக்காத வீடுகளைக் குடியிருப்பதற்காக அனுமதித்தல் போன்ற கோரிக்கைகள் கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்டன.

கடற்றொழிலாளர் சங்கத்தின் கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் அவற்றை நிறைவேற்றுவதற்கு கடற்றொழிலாளர்கள் அனைவரும் தமக்கு பக்கபலமாக இருக்கவேண்டுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இக்கலந்துரையாடலின்போது கேட்டுக் கொண்டார்.

(04)

# இலங்கை மனித உரிமைகளை மதித்து நடக்க வேண்டும்

## பரிசுத்த பாப்பரசர் அறிவுறுத்தல்

கொழும்பு, நவ.13

இலங்கை அரசு மனித உரிமைகளை மதித்து நடக்க வேண்டும் - என்று பரிசுத்த பாப்பரசர் பதினாறாம் ஆசீர்வாதப்பர் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இன்னும் பிரச்சினை இருக்கின்றது. பிரச்சினைகளைத் தீர்க்க அரசியல் தீர்வு ஒன்றை சர்வதேசத்தினூடாக முன் வைக்கப்பட வேண்டும்.

அகதிகளின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் திருப்தி தரத்தான் செய்கின்றன.

பொதுமக்கள் பாதுகாப்பாக அவர்களுடைய இடங்களுக்குச் செல்ல கூடிய வகையில் உதவி செய்ய வேண்டும். இந்த விடயத்தில் உரிய தரப்புகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

நாட்டுமக்கள் அனைவரும் விரைவாக சமாதானத்தை அடைய வேணடும்.

அதேவேளை இலங்கையின் மனிதாபிமான தேவைகளை புரிந்து கொண்டு இலங்கைக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும் - என்றார்.

(சி)

# இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு அதிக உதவிகளை செய்யவேண்டும்

## சட்டவிரோத வெளியேற்றத்தை தடுக்க ஆஸி.கூறும் ஆலோசனை

கொழும்பு, நவ.13

இலங்கை அரசினால் தமிழர்களுக்கு ஏராளமான உதவிகள் கட்டாயம் செய்து கொடுக்கப்பட வேண்டும். அப்போது தான் இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்கின்றமையைத் தடுத்து நிறுத்துவது சாத்தியமாகும் என்று ஆஸ்திரேலிய அரசு இலங்கைக்கு ஆலோசனை கூறியுள்ளது.

இலங்கையர்கள் சட்ட விரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்கு வர முயல்கின்றமையைத் தடுத்து நிறுத்துவது குறித்து இலங்கை அரசுக்கும் ஆஸ்திரேலிய அரச உயர்மட்டத்தினருக்கும் இடையில் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், இப் பேச்சுகளில் கலந்து கொள்வதற்காக ஆஸ்திரேலியப் பிரதமரின் விசேட தூதுவராக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஆஸியின் பிரபல இராஜதந்திரியான ஜோன் மக்காந்தி என்பவரே இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கை அரசு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் இது குறித்துத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் சிவில் யுத்தத்தால் தமிழர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இலங்கை அரசு அவர்களுக்கு ஏராள மான உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் இலங்கை அரசு மிகுந்த கவனத்துடன் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும். அப்போது தான் இலங்கைத் தமிழர்கள் சட்ட விரோதமான முறையில் வெளிநாடு செல்ல முயல்கின்றமையைத் தடுத்து நிறுத்துவது சாத்தியமாகும்.

(சி)

# அடுத்த ஏப்ரலில் பொருள்களின் விலை ஐம்பது சத வீதத்தால் அதிகரிக்கும்

## அரசின் திட்டத்தை அம்பலப்படுத்துகிறது ஐ.தே.க.

வர்த்தக அமைச்சுக்குழ் பாரிய வர்த்தக சங்கங்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இரகசிய உடன்படிக்கையை அடுத்தே அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த உடன்படிக்கையின் படி 2010 ஏப்ரலுக்குப் பின்னர் அத்தியாவ்சியப் பொருள்களின் விலைகள் 50 வீதத்தால் அதிகரிக்கும் எனக் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ள அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டதும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் யார் என்பதை அறிவிப்போம்.

மக்களுக்கு இதனை அறிவிப்பதற்காக மகிழ்ச்சியுடன் காத்திருக்கும் அதேவேளை, அரசு அச்சம் காரணமாகப் பல்வேறு ஊகங்களை வெளியிட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும் பாரிய நிறுவனங்களுக்கும் இடையில் ஏற்பட்ட இரகசிய வர்த்தக உடன்படிக்கையை அடுத்தே அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் திடீரெனக் குறைக்கப்பட்டன.

அடுத்த ஆறு மாதங்களுக்கு விலைகளைக் குறைத்துப் பின்னர் ஏப்ரல் 2010 இல் 40,50 வீதத்தால் அதிகரிப்பதே இந்த இரகசிய உடன்படிக்கையின் நோக்கம்.

வர்த்தக அமைச்சர் இதனைப் பகிரங்கப் படுத்த வேண்டும்.

அரசுக்கும் வர்த்தக சங்கங்களுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட பொருள்களின் விலை தொடர்பான உடன்படிக்கையை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அரச நிறுவனங்கள் பாரிய அளவில் நட்டத்தில் இயங்குகின்றன. இந்த நிலையில் எவ்வாறு பொருள்களின் விலையைக் குறைக்க முடியும்.

இது தேர்தலை மையப்படுத்தி அரசு செய்யும் நடவடிக்கை என அவர் தெரிவித்தார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 46

## மேல்மாகாணக் கல்வித் திணைக்கள இறுதிப் பரீட்சை - 2008

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

01. ''வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது'' - இங்கு வந்த 'தழல்' என்பதன் பொருள்,
1) கழல். 2) சூரியன். 3) நெருப்பு. 4) தளிர்.

02. ''ஊழி திரண்டதோ கங்குல் தினகரனும்.....'' - இங்கு வந்த 'கங்குல்'' என்பதன் பொருள்,
1) இரவு. 2) வானம். 3) பகல். 4) சூரியன்.

03. ''புலம்பெயர்ந்த ஆசிரியர்கள் தாம் வாழும் இடங்களிலுள்ள பாடசாலையொன்றில் தற்காலிகமாக இணைந்து கொண்டனர்'' - இங்கு வந்த 'தற்காலிகம்' என்பதன் எதிர்ப்பொருள்,
1) தற்சமயமாக. 2) நிரந்தரமாக. 3) மேலதிகமாக. 4) தற்செயலாக.

04. ''காண்பது சக்தியாம்; இந்தக்காட்சி நித்தியமாம்'' - இங்கு வந்த 'நித்தியம்' என்பதன் எதிர்ப்பொருள்,
1) நித்தம். 2) சத்தியம். 3) அசத்தியம். 4) அநித்தியம்.

05. ''உங்கள் தொழில் அனுபவம் பற்றி நல்லதொரு 'றிப்போட்' தருகிறேன். - இங்கு வந்த ''றிப்போட்' என்பதன் தமிழ்ச்சொல்,
1) அறிக்கை. 2) கடிதம். 3) கையேடு. 4) சாசனம்.

**✱ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தினை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லினைத் தெரிவுசெய்க.**

06. சுசாப்புத்கடைக்காரன் .............................. கைவரப்பெற்றவனாயிருந்தான்.
1) மெய்ஞானம். 2) மெய்ஞ்ஞானம்.
3) மெய்ம்ஞானம். 4) மெய்யானம்.

07. வாழ்க்கைப் பாதையில் ...................................... ஏற்படுவது சகஜம்.
1) அருமை பெருமை. 2) அறம்மறம்.
3) கங்குகரை. 4) இன்பதுன்பம்.

08. அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு ...................................... செய்தது.
1) கருத்துரை. 2) விதப்புரை. 3) மதிப்புரை. 4) அறிவுரை.

09. குற்றஞ்செய்த மாணவர்களுக்கு அதிபர் ............................... வழங்கினார்.
1) அபராதம். 2) சான்றிதழ். 3) தண்டனை. 4) விதிவிலக்கு.

10. இவ்வாண்டு சனத்தொகை ................................ மேற்கொள்ளப்படுகிறது.
1) வகையீடு. 2) அளவீடு. 3) கணிப்பீடு. 4) மதிப்பீடு.

**✱ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.**

11. மானின் இளையது குட்டி எனப்படுவது போல யானையின் இளையது,
1) போதகம். 2) குருளை. 3) பறள். 4) பிள்ளை.

12. புலி உறுமும் என்பது போல எருமை,
1) அலறும். 2) கதறும். 3) கத்தும். 4) முக்காரமிடும்.

13. குறித்த ஒரு நாளில் நீதிமன்றத்திற்குச் சமுகம் தரும்படி நீதிபதியால் விடுக்கப்படும் அதிகாரபூர்வமான கட்டளை,
1) பிடியாணை. 2) தேடற்கட்டளை.
3) அழைப்பாணை. 4) நீதிமன்ற உத்தரவு.

14. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன நற்குணங்கள் என்பது போல சாமம், பேதம், தானம், தண்டம் என்பன,
1) நான்கு உபாயம். 2) நாற்படை.
3) நாற்பாதம். 4) நால்வருணம்.

15. ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் மிக்கவர்,
1) அட்டாவதானி. 2) தசாவதானி.
3) சதாவதானி. 4) மெய்ஞ்ஞானி.

**✱ பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

16. ''உதவாக்கரை'' என்ற மரபுத்தொடரின் பொருள்,
1) ஆற்றங்கரை. 2) உதவி கேட்பவன்.
3) தட்டிக்கழிப்பவன். 4) பயனற்றவன்.

17. ''ஒருவர் செய்த செயலின் பயனை அவர் அனுபவித்தே தீருவார்'' என்ற பொருள் தரும் பழமொழி,
1) கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா?
2) வினை விதைத்தவன் வினையறுப்பான்.
3) விளையும் பயிரை முளையிலே தெரியும்.
4) முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?

18. ''ஆனைக்கும் அடி சறுக்கும்'' என்ற பழமொழியின் கருத்து,
1) வலிமை மிக்கவரும் வழுக்கி விழுவார்.
2) யானையும் வழுக்கி விழுதல் கூடும்.
3) வலிமை மிக்கவரும் தவறசுகூடும்.
4) மிருகங்களின் பாதம் வலிமையற்றது.

19. துன்பத்தில் உதவி செய்தல் என்ற பொருள் தரும் மரபுச்சொற்றொடர்,
1) கைகொடுத்தல். 2) கையைக்கட்டுதல்.
3) காலைச்சுற்றுதல் 4) வயிற்றிலடித்தல்.

20. ஒருவரது புகழ் முதலியன 'எங்கும் பரவிக் காணப்படுதல்'' என்பதனை விளக்கப் பொருத்தமான தொடர்,
1) கண்மூடிப் பழக்கங்கள். 2) குமரி முதல் இமயம் வரையும்.
3) கருவிலே திருவுடைய. 4) குற்றங்களைந்து குணங்கொண்டு.

**✱ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.**

21. ''வேகமாக வீசிய காற்று மேசையில் இருந்த கடதாசிகளைப் பறக்கச் செய்தது''
இவ்வாக்கியத்தின் எழுவாய்,
1) மேசை. 2) கடதாசி. 3) வேகம். 4) காற்று.

22. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி அல்லாதது எது?
1) தேரூர்ந்தது. 2) கடலலை. 3) மாங்கனி. 4) மலர்விழி.

23. 'வந்த மாணவர்கள்' என்பது,
1) பெயரெச்சத்தொடர். 2) வினைமுற்றுத்தொடர்.
3) வினையெச்சத்தொடர். 4) எழுவாய்த்தொடர்.

24. ''பவளவாய்'' என்பது,
1) உவமைத்தொகை. 2) பண்புத்தொகை.
3) வினைத்தொகை. 4) உம்மைத்தொகை.

25. ''மக்களிடையே ஒற்றுமை ஓங்குக'' - இவ்வாக்கியம்,
1) கூற்று வாக்கியம். 2) வியங்கோள் வாக்கியம்.
3) வினா வாக்கியம். 4) வியப்பு வாக்கியம்.

26. எதிர்கால இடை நிலைகளாவன,
1) த், ட் 2) கின்று, கிறு 3) ப், வ் 4) ற், இன்

27. ''அப்பொய்கையில் இலங்கிய அழகிய மலர்கள் முகம் மலர்ந்து அழைப்பன போல் அசைந்தன''- இங்கு இடம்பெறும் அணி,
1) உவமையணி. 2) தற்குறிப்பேற்ற அணி.
3) உருவக அணி. 4) உயர்வு நவிற்சியணி.

28. ''கடைக்குப் போன கண்ணன் சும்மா வந்தான்.'' - இங்கு வந்த சும்மா என்பது,
1) பெயர்ச்சொல். 2) வினைச்சொல். 3) இடைச்சொல். 4) உரிச்சொல்.

29. 'பாசிலை'' என்பதனைப் பிரித்து எழுதினால்,
1) பாசி + இலை. 2) பாசு + இலை.
3) பச்சை + இலை. 4) பசுமை + இலை.

30. ''மலையில் வீழ் அருவி'' எனும் தொடரில் வரும் 'இல்' உருபு உணர்த்தும் பொருள்,
1) நீங்கல். 2) ஒப்பு. 3) எல்லை. 4) ஏது.

**✱ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.**

31. அந்தச் செடியிலே காணப்படுகின்ற,
1) ஒவ்வொரு பூக்களும் அழகானவை. 2) ஒவ்வொரு பூக்களும் அழகியது.
3) ஒவ்வொரு பூவும் அழகியது. 4) ஒவ்வொரு பூக்களும் அழகியவை.

32. அவன் தந்தையின் அறிவுரையைக்,
1) கேட்டு நடந்தானன்று. 2) கேட்டு நடந்தானல்லன்.
3) கேட்டு நடந்தானல்ல. 4) கேட்டு நடந்தேனல்லன்.

**✱ பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகளற்ற வாக்கியத்தினைத் தெரிவுசெய்க.**

33. 1) கள்வித்திணைக்களம் பாடநூல்களை வெளியிடுகிறது.
2) கள்வித்திணைக்கழம் பாடநூல்களை வெளியிடுகிறது.
3) கல்வித்திணைக்கழம் பாடநூல்களை வெளியிடுகிறது.
4) கல்வித்திணைக்களம் பாடநூல்களை வெளியிடுகிறது.

34. 1) விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொளிலாளர்கள் போராடினர்.
2) விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொழிளாளர்கள் போராடினர்.
3) விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொழிழாளர்கள் போராடினர்.
4) விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொழிலாளர்கள் போராடினர்.

**✱ பின்வரும் தனிவாக்கியங்களை ஒரு வினைமுற்றுக்கொண்ட வாக்கிய மாக்கும்போது கருத்துத் திரிபடையாது அமைந்த வாக்கியத்தைத் தெரிவுசெய்க.**

35. அ. சங்கர் தனது நண்பன் வருகைக்காகக் காத்திருந்தான்.
ஆ. ஆனால் அவ ் வரவில்லை.
1) நண்பன் வராததால் சங்கர் அவனது வருகைக்காகக் காத்திருந்தான்.
2) சங்கர் தனது வருகைக்காகக் காத்திருந்தாலும் அவனது நண்பன் வரவில்லை.
3) சங்கர் தனது நண்பன் வருகைக்காகக் காத்திருந்தானாயினும் அவன் வரவில்லை.
4) நண்பன் வருகைக்காக அவன் காத்திருந்தானாயினும் சங்கர் வரவில்லை.

**✱ பின்வரும் செய்யுளைப் படித்த பின் அதன் கீழ்த்தரப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தருக.**

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிலை
வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லுக்கு இசைந்தொழுகாப் பெண்.

36. இச்செய்யுளின் பிரதான கருத்தாய் அமைவது,
1) கல்லாத மாந்தர்களது வாய்ச்சொற்களால் வரும் கேடு பற்றியது.
2) தீயொழுக்கமுள்ளவள் இல்லறத்திற்கேற்றவளல்லள் என்பது பற்றியது.
3) கூற்றம் எவ்வெவ் வகைகளில் அமையலாம் என்பது பற்றியது.
4) அறத்தின் வலிமை பற்றியது.

37. இச்செய்யுளில் பிரதான கருத்தை வலியுறுத்துவதற்குக் கையாளப்பட்டுள்ள உத்தி,
1) உவமைகள். 2) உருவகங்கள்.
3) இயற்கை வர்ணனை. 4) சம்பவ வர்ணனை.

மறுபக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I தொடர்ச்சி.....

38. வாழைக்குக் கூற்றம் எதுவெனக் கூறப்பட்டுள்ளது?
1) குலை. 2) மெல்லிலை. 3) நார். 4) வேர்.

39. இங்கு இடம்பெற்ற ''கூற்றம்'' என்பதன் பொருள் யாது?
1) இயமன். 2) கூறுதல். 3) துன்பம். 4) கொடுமை.

* கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

40. அ - கருணாகரன் இருக்கும் வரை அவள் தன்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள்.
ஆ - மார்த்தாண்டன் மங்கையற்கரசியின் சிற்றப்பனின் துணையுடன் அவளை மணமுடித்திட விரும்புகிறான்.
இ - கருணாகரனைக் கொலை செய்த செய்தியை மங்கையற்கரசியிடம் கூறித் தன்னை மணந்திடுமாறு கெஞ்சுகிறான்.
ஈ - இதை நன்குணர்ந்தமையால் அவனைக் கொலை செய்கின்றான்.
உ - இவனது கோழைத்தனமான செயல் கண்டு கொதித்தெழுந்த மங்கையற்கரசி அவனைப் பழிவாங்கியதுடன் தானும் உயிரை மாய்த்துக்கொள்கின்றாள்.

1) அ, உ, ஆ, ஈ, இ 2) ஆ, இ, உ, ஈ, அ
3) ஆ, அ, இ, ஈ, உ 4) ஆ, அ, ஈ, இ, உ

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II 22-T-II

01. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சுருக்கமான விடை தருக.
01) 'கண்ணீருங்கம்பலையும்' என்ற இணைமொழித்தொடரைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைக்குக.
02) இன்று பல சொவ்ட் வெயார்களை(Soft ware)மலிவாகப் பெற்றுக்கொள்ள முடிகிறது.இங்கு வந்த சொவ்ட் வெயார் என்பதன் தமிழ்ச் சொல் யாது?
03) ''உழவன் வயலை உழுதான்.'' இதனைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றியெழுதுக.
04) 'குடி' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.
05) ஐம்புலன்களும் எவை?
06) இயற்கை நிகழ்வொன்றின் மீது கவிஞன் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது எவ்வாறு அழைக்கப்படும்?
07) விவாதக் குழுவொன்றின் தலைவரது பிரதான வகிபங்குகள் இரண்டினைத் தருக.
08) உரத்து வாசிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டினைத் தருக.
09) ''வெண்ணிலா தண்ணொளி வீசியது.'' இங்கு இடம்பெற்றுள்ள எழுவாய் அடைமொழி யாது?
10) ''செய்திகள் வாசிப்பது செல்வகுமார்.'' இவ்வாக்கியத்தை வழு நீக்கி எழுதுக.

02. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றினை தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.
அ. 'இலங்கையின் முன்னேற்றத்திற்குக் கிராமங்களின் அபிவிருத்தியின் அவசியம்' என்பது பற்றிய உமது கருத்து வெளிப்பாடு.
ஆ இன்று தமிழில் ஏராளமான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. அவற்றை வாசிப்பதனாலேயே ஏராளமான விடயங்களை அறிந்துகொள்ள முடிகிறது.
ஆனாலும் இன்றைய மாணவர்களின் கவனம்இலத்திரனியல் ஊடகங்களின் பக்கமே உள்ளது. இவ்விலத்திதரனியல் ஊடகங்களினூடாகவும் பல அறிவு சார் விடயங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆயினும் மாணவரிடையே இன்று வாசிப்பு மற்றும் எழுத்தாற்றல் போன்றன கீழ்நிலையடைய இவையே காரணம் என்ற கூற்றையும் மறுப்பதற்கில்லை. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இன்றைய மாணவர் மீதான ஊடகத்துறையின் தாக்கம் பற்றி ஒரு விமர்சனக்கட்டுரை.
இ. உமது மனதைக் கவர்ந்த மாலைப்பொழுதிலே நீர் கண்ட காட்சிகளின் வர்ணனை.
ஈ. 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பழமொழிக்குப் பொருத்தமான ஒரு கற்பனைச் சிறுகதை.

03. பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை மூன்றில் ஒன்றாகச் சுருக்கி எழுதுக. நீங்கள் பயன்படுத்திய சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

எழுத்துகளாற் சொல்லும் சொற்களால் மொழியும் அமைகிறது. மொழி வளர்ச்சியின் அளவுகோலைக் கொண்டே சில சமயம் அந்த மொழியைப் பேசுகின்ற மக்களின் மன வளர்ச்சியும் வாழ்க்கை முன்னேற்றங்களும் கணிக்கப்படுவதும் உண்டு. ஏனெனில், மக்களின் வாழ்க்கைச் சூழல், சிந்தனைத் திறன், முயற்சி, வேகம் ஆகியவற்றை அடியொற்றியே அவர்களின் முன் னேற்றம் அமையும். அந்த முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் வேக முடுக்கியாக இயங்கி வருவது மொழியும் அம்மொழியின் வளர்ச்சிக்கு ஆதாரமான சொற்களின் பெருக்கமும் ஆகும். வளர்ச்சிப் போக்கில் புதிய கருத்தையோ அல்லது உணர்வையோ ஏதேனும் ஒரு சொல் வடிவில் மனிதன் மற்றவர்க்கு உணர்த்த முற்படுகிறான். இவ்வாறு கருத்து உணர்த்தும் புதிய சொல் காரண அடிப்படையில் அமைந்த சொல்லாகவோ அல்லது அடையாளங்காட்டும் இடுகுறியாகவோ அமையலாம்.

மேலும், ஒரு பகுதியினர் வேறொரு பகுதியைச் சார்ந்த வேறு மொழி பேசும் மக்களோடு உறவாடும்போது அவர்களிடமிருந்து புதிய செய்திகளை அல்லது கருத்துக்களைப்பெற வாய்ப்பு ஏற்படுகிறது. அத்தகைய கருத்தையோ செய்தியையோ குறிக்கும் சொற்களும் இயல்பாகவே அவர்தம் மொழியில் இடம்பெற நேர்கின்றது.

இவ்வாறே, ஒவ்வொரு மொழியும் தனக்குத்தானே உருவாக்கிக் கொள்ளும் சொற்களோடு பிறமொழிச் சொற்களையும் காலப்போக்கில் ஏற்றுக்கொண்டு வளர்கின்றது. இவ்வாறு ஒரு மொழியில் வந்து சேரும் சொற்கள், எந்த மொழியில் வந்து சேர்கின்றதோ அந்த மொழியின் இயல்புக்கும் இலக்கண விதிமுறைக்கும் ஏற்பத்திருத்தங்களைப் பெற்றுச் செம்மை அடைகின்றன. காலப்போக்கில் இத்தகைய சொற்கள் அம்மொழியின் மூலச் சொற்கள் அம்மொழியின் மூலச்சொற்கள் போன்ற தோற்றத்தையும் பெற்றுவிடுகின்றன.

04. பின்வரும் செய்யுளை படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கோவிலில் மணிக ளார்ப்பக் குயிலினம் வரவு கூறச்
சேவல்கள் சிறகு கொட்டிச் செகத்தினை விழிக்கச் செய்ய
பாவிய ருள்ளம் போலும் கங்குலும் பதுக்கங் கொள்ளத்
தேவர்க்கும் தேவ னாவான் பகலவன் தேரில் வந்தான்.

1) இப்பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி யாது?
2) இப்பாடலில் இடம்பெறும் அணிகளை விளக்குக.
3) பொருள் தருக.
அ. செகம். ஆ. கங்குல்

05. உமது பிரதேசத்தின் வீதிச் சீர்கேடு காரணமாகப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களைச் சுட்டிக்காட்டி வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவருக்கு 80 - 100 சொற்களில் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உமது பாடசாலையில் நடந்து முடிந்த நூலக வாரத்தை நெறிப்படுத்திய வாசிப்பு மன்றத்தின் செயலாளராக உம்மைக் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து 80 -100 சொற்களில் அமையுமாறு ஓர் அறிக்கை எழுதுக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III 22-T-III

01. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சுருக்கமான விடை தருக.
01) பருப்பொருள், நுண்பொருள் என்பவற்றுக்கு மறைமலையடிகள் கூறும் உதாரணங்கள் எவை?
02) ''பூவலரந்த மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்று ஊசலாடுற்றாள் உளம்.'' அவ்வடியின் எழுவாய், பயனிலை என்பவற்றை இனங்காண்க.
03) ''இதிலே தெரிஞ்சு போகும் யார் பெரிய புலவருன்னு.'' இதனை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.
04) சொல்வண்மை உடையானிடம் இருக்க வேண்டிய பண்புகள் மூன்று தருக.
05) உறவு அல்லாதோர், உறவினர் ஆகியோருக்கு வாக்குண்டாம் கூறும் உவமைகள் யாவை?
06) ஒரு பதிவிரதையின் சரித்திரத்தில் வரும் கசாப்புக்காரன் கூறிய விழுமியக் கருத்துக்கள் இரண்டு தருக.
07) ''திருத்தக்க வையமெல்லாம் எமதென்றெழுதுமே மொய்யிலைவேல் மாறன் களிறு.'' இவ்வடியினைக் கொண்டு கூட்டி எழுதுக.
08) ''காப்படங்கென்றன்னை'' இவ்வடியைச் சந்தி பிரித்து எழுதுக.
09) 'கல்வியே அழியாச் செல்வம்' என்ற கட்டுரையில் பொருள் தேடுதல் பற்றிய மக்களுடைய அவாவும் நடைமுறையும் எவ்வாறிருப்பதாகக் கூறப்பட்டு உள்ளது?
10) ஒரு பதிவிரதையின் சரித்திரம் என்ற கதையின் கரு யாது?

02. பின்வரும் செய்யுள் மற்றும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் தரப்பட்டவற்றின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

அ. கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற
அறைகல் அருவி அணி மலை நாட!
**நிறைகுடம் நீர்தளும்பல் இல்.**

ஆ. கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி
**நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்**
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு.

இ. அறிவான் மிக்க ஆன்றோன் மக்களாய்ப் பிறந்த எல்லார்க்குங் கல்வி இன்றியமையாதது வேண்டற்பாலதேயாமென்று கூறியிருக்க, அஃது ஆண்மக்களுக்குத் தாம் வேண்டுமேயல்லாமற் பெண்மக்களுக்கு வேண்டுவதில்லையென்று உரைப்போர் அறிந்தாராவ ரோ சொன்மின்கள்! அருமைத் தாய்மார்களே, பெண்பாலார் மக்களிலுந் தாழ்ந்த விலங்குகளாயிருந்தாலன்றோ அவர்கட்குக் கல்வி வேண்டாம் என்னலாம்? இவ்வுலக வாழ்க்கையை நன்றாக நடத்தும் முறையில் ஆண்மக்களைக் காட்டிலும்மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த நுண்ணறிவும் வேண்டிய அவர் கட்குக் **கல்வியெனுந் தூண்டாமணி விளக்கைத் தராமல்** அவர்களை அறியாமை என்னும் பேர் இருளிற்போகச் சொல்லுபவர்கள் உண்மை அறிந்தவராவாரோ சொன்மின்கள்!

ஈ. **நமது பெருமை மலைமேலிட்ட தீபம்.** ஈயாத லோபிகள் எல்லாம் பூண்டற்றுப் போகும்படி வசைபாடுவோம். தமிழுக்குத் தீங்கு புரிவோர்கள் இலவம் பஞ்சாகப் பறக்க அறம் பாடுவோம். 'இம்' என்றால் எழுநூறும் 'அம்' என்றால் ஆயிர முமாகக் கவிமாரி பொழிவோம். நாம் கல்விச் சமுத்திரம்; கலைமகள் இருப்பிடம்; தமிழ்க் கடலின் மடை திறந்த வெள்ளம். அது மட்டுமா? கற்பனை பிறப்பிடம்; கவிமாரி பொழியும் மேகம்....................

03. நீதிப்பாடல்கள்' என்ற பாடத்தினை அடியொற்றிப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) சொல்வன்மை, பயனில சொல்லாமை என்பன பற்றித் திருக்குறள் கூறும் கருத்துக்கள் யாவை?
2) நான்மணிக்கடிகை கூறும் நான்கு நீதிகளும் எவை?

அல்லது

'கவிச்சக்கரவர்த்தி' என்ற பாடத்தினை அடியொற்றிப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) ஒட்டக்கூத்தரின் கூற்றுக்களில் அவரது கர்வம் வெளிப்படுமாற்றினை விளக்குக.
2) கம்பன் சடையப்ப வள்ளலிடம் கொண்ட நன்றியுணர்வு வெளிப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினை எடுத்துகாட்டி விளக்குக.

04. 'ஒரு பதிவிரதையின் சரித்திரம்' என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
1) கசாப்புக்காரனைச் சந்திப்பதற்கு முன் யௌவன சந்நியாசியின் நிலை எவ்வாறு இருந்ததென்று எடுத்துக்காட்ட்ப்படுகிறது?
2) கசாப்புக்காரனைச் சந்தித்த பின் யௌவன சந்நியாசியின் நிலை எவ்வாறு இருந்ததென்று எடுத்துக்காட்டப்படுகிறது?

அல்லது

நீர் படித்த 'முத்தொள்ளாயிரம்' பாடல்களை அடியொற்றி,
1) 'தலைவனைக் காண்பதில் தலைவி கொண்ட ஆர்வம்' என்பது பற்றி எழுதுக.
2) 'முத்தொள்ளாயிரம்' கூறும் போர் பற்றிய செய்திகளைத் தொகுத்துத் தருக.

* 5-7வரையான வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

05. 'நளனுக்கே மாலையிட்டால் நங்கை' என்ற பாடப்பகுதியினை அடியொற்றி 'நளவெண்பாவின் அணிச்சிறப்பு' பற்றி விளக்குக.

06. மறைமலையடிகள் கல்வியின் சிறப்பை விளக்கப் பல்வேறு இலக்கியங்களில் இருந்தும் ஆதாரங் காட்டுமாற்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

07. 'தனிப்பாடல்கள்' என்ற பாடத்தினை அடியொற்றிப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) கம்பர், திருவெண்ணெய் நல்லூரின் சிறப்பை எவ்விதம் எடுத்துக் காட்டுகின்றார்?
2) இடைச்சி தந்த மோர் எத்தகையதென காளமேகப்புலவர் கூறுமாற்றினை விளக்குக.

-நிறைவுற்றது-

நன்றி: மேல்மாகாண கல்வித் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கி முகாமையாளர் லயன்.எஸ்.ரவீந்திரா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் க.லக்ஷ்மணா சர்மா ஆகியோர் மாணவர்களின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவதையும் சிறப்பு விருந்தினர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# நாடு முழுவதிலும் சீரற்ற காலநிலை

கொழும்பு, நவ. 13

நாட்டில் தொடர்ந்தும் சீரற்ற காலநிலையே தொடருமென வானிலை அவதான நிலையம் கூறுகிறது.

இரவு வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் எஸ். ஆர். ஜயசேகர தெரிவித்தார்.

நாட்டின் சில பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை பல நாள்களாக நிலவுகிறது. மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் குறிப்பிடத்தக்க மழை வீழ்ச்சி கிடைப்பதாக வானிலை அவதான நிலையம் தெரிவிக்கிறது.

மழை காரணமாக ஊவா பரணகம, கண்டி மஹியாவ, கெலி ஓயா போன்ற பகுதிகளில் மண்சரிவு ஓடைகளின் நீர்மட்டம் உயர்தல், கடும் காற்றில் மரங்களும் மின்சாரக் கம்பங்களும் வீழ்ந்தமை போன்ற அனர்த்தங்களால் மக்களுக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

சிலாபம் தெதுரு ஓயாப் பிரதேசத்தில் தேவாலயமொன்றின் மீது மரமொன்று வீழ்ந்துள்ளது.

நுவரெலியாப் பிரதேசத்தில் மழையுடன் பனி மூட்டம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சீரற்ற காலநிலை காரணமாக மலைப் பாங்கான பிரதேசங்களில் வாழ்வோர் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டுமென இடர் முகாமைத்துவ நிலையம் ஆலோசனை வழங்கியுள்ளது.

மண்சரிவு அபாயம் இப்பிரதேசங்களில் காணப்படுவதாக அந்த நிலையம் கூறுகிறது. (சி)


## வாழ்த்துகின்றோம்

இருபாலை தெற்கில் உள்ள
விதானையார் ஒழுங்கையை
50 வருடங்களுக்குப் பின்பு தார்போட்டு செப்பனிட
உதவிய 'நிக்கோட்' நிறுவனத்திற்கும்
ஊக்குவிப்பாளர்களாகிய கோப்பாய் பிரதேச செயலர்
**C.A.மோகன்ராஸ்**
அவர்களுக்கும் J/258 கிராம உத்தியோகத்தர் கோப்பாய்
**G.ஜெயந்திரன்** அவர்களுக்கும் எங்கள்
ஊர் மக்கள் சார்பில் வாழ்த்துகின்றேன்.
**பொ.கந்தசாமி,**
தாதி உத்தியோகத்தர், கோப்பாய்.
(90901)


# நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு விரைவில் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 13

அரசின் பொறுப்பற்ற நடவடிக்கையால் நாட்டில் மிகப் பெரிய அளவில் எரிபொருள் நெருக்கடியும் தட்டுப்பாடும் எதிர்வரும் நாள்களில் நிச்சயம் ஏற்பட்டுவிடும் என்று ஐ.தே.க. எச்சரித்துள்ளது.

உரிய நேரத்தில் எரிபொருள்களை இறக்குமதி செய்ய அரசு தவறிவிட்டதால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் போதியளவு எரிபொருள்கள் கையிருப்பில் இல்லை என்றும் கையிருப்பிலுள்ள எரிபொருள்கள் வெகு விரைவில் தீர்ந்துவிடும் என்றும் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் இது குறித்து வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பிலுள்ள எரிபொருள் மிக விரைவில் முடிந்துவிடும். இந்நிலைமைக்கு அரசே பொறுப்பு. ஏனெனில் அரசு எண்ணெயைக் கொள்வனவு செய்வதற்குப் பணம் இல்லாமல் வங்குரோத்து நிலையில் உள்ளது. இதனால் எதிர்காலத்துக்குத் தேவையான எண்ணெய்யைக் கொள்வனவு செய்யத் தவறிவிட்டது. அத்துடன் அரசிடம் தூர நோக்கம் என்பது இல்லை. ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு மூன்று மாதத்துக்கும் தேவையான எரிபொருள்கள் முன்கூட்டியே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் கையிருப்பில் நிச்சயம் சேகரிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் இன்றைய அரசு எங்களைப் போல் தூர நோக்குடன் செயற்படவில்லை. கையிருப்பிலுள்ள டீசல், பெற் றோல் என்பன வெகு விரைவில் தீர்ந்துவிடுமெனப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன. (சி)

## மிருசுவில் மக்களின் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.13

மிருசுவில், வாகனம் திருத்தும் நிலையத்துக்கும் புனித நிக்கலஸ் தேவாலயத்துக்கும் இடைப்பட்ட, ஏ-9 பாதையில் அமைந்துள்ள வீடுகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு அவ்வீடுகளுக்குரியவர்களான அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

மிருசுவிலில் கணிசமான பகுதி மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டபோதும், இந்தப் பகுதி இன்னமும் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை-

அப்பகுதியில் உள்ள ஒழுங்கைகள் ஊடாகப் பயணம் செய்ய அனுமதிக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (1)


## கணனிக்கற்கை நெறிகள் புதிய பிரிவு ஆரம்பம்

கல்வியாண்டு 2009இற்குரிய
இறுதிப்பிரிவு ஆரம்பம்



Diploma Courses

| Courses | Duration |
|---|---|
| Diploma in Microsoft Office | 4Months |
| Diploma in Desktop publishing | 3Months |
| Diploma in Internet Technology | 4Months |
| Diploma in Hardware Technology | 4Months |
| Diploma in Computer Programming | 6Months |
| Diploma in Computerized Accounting | 4Months |
| Diploma in Audio & Video Editing | 4Months |
| Diploma in Eng Drawing & AutoCAD | 4Months |
| Diploma in DataBase management | 4Months |
| Diploma in Visual Programming | 4Months |

ஆரம்பம்
14/11/2009
காலை 10.00மணி

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100,Clock Tower Road,Jaffna
T.P 021 222 2831 Fax: 021 222 6933
(சி/562194)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### நாகமுத்து நாகலிங்கம்

தோற்றம்: 01.06.1935
மறைவு: 24.11.2008

ஆவி பிரிந்தின்று ஆண்டொன்றாகியதோ
பாவிகள் நாம் இங்கு பரிதவித்து நிற்கின்றோம்
ஓர் நாளில் உங்களை நாம் மறந்திருப்போம்
அந்நாளில் நாங்கள் இறந்திருப்போம்.

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
(90892)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
23.11.1942
மறைவு:
26.10.2008

### திருமதி சிவபாக்கியம் அன்னலிங்கம்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்த
எங்கள் அன்புத்தாயே! எம்மை மீளாத் துயரில்
ஆழ்த்தி இறையடி சேர்ந்ததேனோ! நீங்கள்
இம்மண்ணைவிட்டுச் சென்றாலும் என்றும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு நீங்காது

தாவடிச் சந்தி,கோண்டாவில். (90888) குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலய 13 வயதுப் பிரிவு அணிகளின் உதைபந்தாட்டப் போட்டிகள் வார இறுதியில்

வலி.வடக்கு,நவ.13

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இந்தவார இறுதியில் நடைபெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட 12 பாடசாலைகள் இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ளன.

நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நடைபெறும் இப்போட்டிகளில் 'ஏ' பிரிவில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் ஆகியனவும்-

'பி' பிரிவில் சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக்கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியனவும்-

'சி' பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மாதகல் சென்.யோசப் வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியனவும்-

'டி' பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

போட்டிகள் தொடர்ந்து இரண்டு நாள்கள் காலை முதல் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குழுநிலைப் போட்டிகள் 'லீக்' முறையிலும் அதில் தெரிவு செய்யப்படும் அணிகளுக்கு இடையேயான போட்டிகள் விலகல் முறையிலும் நடைபெறவுள்ளன.

(50-86)

## ஊர்காவற்றுறை கோட்டமட்ட உதைபந்தாட்டம் காரைநகர் யாழ்ற்ரனை வீழ்த்தியது சென்.அன்ரனிஸ்

ஊர்காவற்றுறை,நவ.13

ஊர்காவற்றுறை கோட்டமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 18 வயதுப் பிரிவினருக்குப் புதிய அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் அரையிறுதிப் போட்டியில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி தியாகராஜாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென்.அன்ரனிஸ் அணி நாரந்தனை கணேசாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய சென்.அன்ரனிஸ் அணியும் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியும் ஆரம்பம் பலத்த மோதலில் ஈடுபட்டன.

ஆனால் சென்.அன்ரனிஸ் தனுஷன் எதிர்பாராத விதமாக கோல் அடிக்க காரைநகர் யாழ்ற்ரன் தடுமாறியது. இதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி மீண்டும் இன்னுமொரு கோலை சென்.அன்ரனிஸ் அணியினர் யாழ்ற்ரன் கல்லூரிக்குப் போட்டனர். யாழ்ற்ரன் கல்லூரி கடினமான முயற்சி எடுத்தபோதும் முதல்பாதி ஆட்டம் 2:0 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது. பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமானபோது யாழ்ற்ரன் கல் லூரி அணியினரை வழிமறித்து தடுத்து களமாடி அசத்தினர் சென்.அன்ரனிஸ் அணியினர்.

மீண்டும் பந்தை நகர்த்தி சென்.அன்ரனிஸ் அணியினரின் ஒத்துழைப்புடன் அடுத்தடுத்து இரண்டுகோல் அடித்து அசத்தினார் பிரதீபன். இதனால் 4:0 என்ற கோல் கணக்கில் காரைநகர் யாழ்ற்ரனை வீழ்த்தி ஊர்காவற்றுறை கோட்டச் சம்பியனானது சென்.அன்ரனிஸ் அணி. (203-325)

## தாச்சிப்போட்டியில் வெற்றியீட்டிய அணிகள்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான தாச்சிப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**13 வயது பிரிவு-ஆண்கள்**

முதலாவது இடம்-அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், இரண்டாம் இடம்-இடைக்காடு மத்திய வித்தியாலயம், மூன்றாம் இடம் கோப்பாய் சரவணபவாநந்த ம.வி.

**13 வயது பிரிவு-பெண்கள்**

முதலாவது இடம்-அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், இரண்டாவது இடம்-கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி., மூன்றாவது இடம்-கோப்பாய் சரவணபவானந்த ம.வி.

(50-23)

## மேசைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் 16 வயதுக்குட்பட்டோருக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

முதலாவது இடம்-யாழ்.மத்திய கல்லூரி, இரண்டாவது இடம்-யாழ். இந்துக் கல்லூரி, மூன்றாவது இடம்-யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

முதலாவது இடம்-வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாவது இடம்-கொக்குவில் இந்துக் கல்லூரி, மூன்றாவது இடம்- யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (50-23)

## பட்மின்ரன் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் 16 வயதின் கீழ் உள்ள ஆண், பெண் இருபாலாருக்கும் இடையே இடம்பெற்ற பட்மின்ரன் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அணிகளின் விவரம் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

முதலாவது இடம், சென்.ஜோன்ஸ் கல்லூரி, இரண்டாவது இடம்-யாழ்.இந்துக் கல்லூரி, மூன்றாவது இடம்-சென். பற்றிக்ஸ் கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

முதலாவது இடம்-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இரண்டாவது இடம்- யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மூன்றாவது இடம்-யாழ். இந்து மகளிர் கல்லூரி. (50-23)






*மாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையேயான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட வீராங்கனைகள், அதிபர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், விளையாட்டுத்துறைப் பயிற்றுநர் ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.* *(படங்கள்: தமிழினியன்)*



*மாகாண மட்டத்தில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினர் மேசைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்கள், கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி, பொறுப்பாசிரியர் எஸ்.மோகன் ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.* *(படங்கள்: இனியவன்)*

# 14 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டம்; ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு, நவ.13

ஊர்காவற்றுறைக் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி சம்பியனாகியது.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயமும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மைதானத்தில் புனித அந்தோனியார் கல்லூரி வீரர்களே ஆதிக்கம் செலுத்தினார்கள். போட்டி நிறைவில் புனித அந்தோனியார் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கில் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தை பெவற்றிபெற்று கோட்டச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் காரைநகர் யாழ்ரன் கல்லூரியும் மோதிக்கொண்டன. ஆட்ட நிறைவில் நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை 3:0 என்ற கோல் கணக்கில் யாழ்ற்ரன் கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

(50-86-325)

## 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் 40 வயதிற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுத் திடலில் ஆரம்பமாகின்றது.

இதில் 6 கழகங்கள் பங்கு பற்றுகின்றன. போட்டி லீக் முறையில் இடம்பெறவுள்ளது.

(50-23)

## படையினரின் ஏற்பாட்டில் கரப்பந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு, நவ.13

வலிகாமம் பகுதியில் நிலைகொண்டுள்ள 513ஆவது படையினரின் ஏற்பாட் டில் கரப்பந்தாட்டப் போட்டி ஒன்று இந்தவார இறுதியில் நடைபெறவுள்ளது.

513ஆவது படையினர் நிலை கொண்டுள்ள சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழைப் (பகுதி), உடுவில், நல்லூர்ப் (பகுதி) பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இப்போட்டி நடைபெறவுள்ளது. முதல்சுற்று சங்கானை, நல்லூர், சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை என மூன்று பிரிவு களாக நடைபெற வுள்ளது. முதல் சுற்றில் வெற்றி பெறும் அணிகள் இரண்டாம் சுற்றில் விளையாடவுள்ளன. ஆண்கள், பெண்கள் அணிகளுக்கு இடையே இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. (50-86)

# சென்.ஜோன்ஸ் ஆசிரியர் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது யாழ்.மத்திய கல்லூரி அணி

யாழ்ப்பாணம்,நவ.13

சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கு இடையே இடம்பெற்ற சிநேகபூர்வ உதைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் அணி வெற்றி பெற்றது.

இந்த சிநேகபூர்வப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் இடம் பெற்றது.

இதில் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி விளையாடியது.

ஆட்டம் ஆரம்பமானது முதல் இரு அணியினரும் மிகவும் விறுவிறுப்பாக உற்சாகத்துடன் விளையாடினார்கள்.

இரு அணிகளும் திறமைகளை வெளிப்படுத்திய ஆட்டமாகவே ஆரம்பம் முதல் இறுதிவரை போட்டி காணப்பட்டது.

இரண்டு அணிகளும் கோல் பெறுவதற்காகப் பந்தை முன்நகர்த்திச் சென்ற போதிலும் கோல்களைப் பெற முடியவில்லை.

இந்த நிலையில் முதலாவது பாதி ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

தொடர்ந்து இரண்டரவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் அணி வீரர் ஜோய் தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார்.

இதனால் போட்டி மிகவும் சூடுபிடிக்கத் தொடங்கியது. சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி வீரர்கள் கோல் பெறுவதற்கான முயற்சியினை மேற்கொண்ட போதிலும் அது கை கூடவில்லை.

ஆட்ட நிறைவில் யாழ் மத்திய கல்லூரி ஆசிரிய அணி1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(50-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சரம்

## பாம்பைக் காப்பாற்றிய வயோதிபர் கடியுண்டார்

யாழ்ப்பாணம், நவ.13

வலையில் சிக்கி உயிருக்குப் போராடிய வேளையில் காப்பாற்றிய வயோதிபரை கடித்துக் காயப்படுத்தியது பாம்பு.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நுணாவில் கிழக்கில் இடம்பெற்றது.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கோழிக் கூட்டினைச் சுற்றி விரிக்கப்பட்டிருந்த வலையில் சிக்கி பாம்பு உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தது.

இதனை அவதானித்த வயோதிபர் மற்றவர்கள் தடுத்த போதிலும் துணிந்து சென்று பாம்பினை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

வலையிலிருந்து விடுபட்ட பாம்பு தன்னைக் காப்பாற்றியவரைக் கடித்து காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நுணாவில் கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் தர்மநாயகம் (வயது 64) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கட்டுள்ளார். (201-207)

## விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், நவ.13

மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி தாயும் மகளும் உட்பட மூவர் காயமடைந்தனர்.

இச் சம்பவங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றன.

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் சரசாலையைச் சேர்ந்த ச.தயாமதி (வயது 43), அவரது மகளான ச. நிசன்ஜா (வயது 10) ஆகியோரும், மற்றொரு விபத்தில் த. சயந்தன் (வயது 25) என்பவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (201-207)

## வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

பிரான்பற்றுக் கிராமத்தின் வீதிகள் பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாததால் அவை குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

சுவாமி விவேகானந்தர் வீதி, நல்லுண்ணி வீதி, ஞானவைரவர் வீதி ஆகிய வீதிகளே திருத்தம் செய்து புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

மேற்படி வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலையம், மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளருக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. (201-130)

## பாடசாலை வீதிக்கு தாரிட்டுச் செப்பனிடல்

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவரும், யாழ். மாநாகர முதல்வரின் செயலருமாகிய கு. பற்குணத்தின் முயற்சியால் இந்தப் பாடசாலை வீதி தார் இட்டுச் செப்பனிடுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பாட சாலை அதிபர் ம.கஜேந்திரன் தெரிவித்துள்ளார். (201-15)

## கட்டாக்காலி மாடுகள் தாக்கியதில் மூவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், நவ.13

மறவன்புலோ பகுதியில் பயிர்களை அழிக்க வந்த கட்டாக்காலி மாடுகளை துரத்திய கும்பலைக் கட்டாக்காலி மாட்டுக் கூட்டம் திருப்பித் துரத்தித் தாக்கியதில் மூவர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றது.

எருது மாட்டினால் தாக்கப்பட்டு மீசாலையைச் சேர்ந்த குணரத்தினம் குலேந்திரன் (வயது 38) என்பவர் வைத்தியசாலையின் சிகிச்சை பெற்று வருகின்றர். (201-207)

## கந்தபுராண நூல் பாராயணம்

சுழிபுரம், நவ.13

சுழிபுரம் மேற்கு கதிர்காம வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்தபுராண நூலின் பாடல்கள் அனைத்தும் தொடர்ந்து மூன்று மாதங்கள் பாராயணம் செய்து நிறைவு செய்யப்படவுள்ளன.

கடந்த வாரம் ஆரம்பமான பாராயணம் தினமும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரை இடம்பெற்று வருகின்றது.

கந்தபுராணப் பாடல்களுக்கான உரைகளை உரையாசிரியர்களான பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், சைவசித்தாந்த பண்டிதர் செ. சிவபாதம் ஆகியோர் ஒப்புவித்து வருகின்றனர். (201-28)

## பாடசாலைக்கு அலுமாரிகள்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்துக்குத் தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினத்தால் இரண்டு அலுமாரிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலையில் நிலவும் பௌதிக வளப் பற்றாக் குறை தொடர்பாகத் தொழிலதிபரிடம் பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி உதவி வழங்கப்பட்டது. எதிர்காலத்தில் மேலதிக உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (201)

## ஆலய வீதியை செப்பனிடல்

சுழிபுரம், நவ.13

சுழிபுரம் ஈஸ்வர விநாயகர் ஆலய முன் பக்க, தெற்குப்பக்க வீதியைச் செப்பனிடுவதற்கு குளத்தில் இருந்து வெட்டப்படும் மண் உழவு இயந்திரம் மூலமாக ஏற்றி வரப்படுகின்றது.

இவ்வாறு ஏற்றிவரப்படும் மண் மூலம் ஆலயத்தின் முகப்பு வரையுள்ள வீதி செப்பனிடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. (201-28)

## கந்தரனுபூதி பாடல்களை மனனம் செய்வோருக்கு உருத்திராக்க மாலை வழங்கல்

கந்தரனுபூதி நூலின் ஐம்பத்தொரு பாடல்களையும் மனனம் செய்து ஒப்புவிக்கும் சுழிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட உருத்திராக்க மாலைகளை வழங்குவதற்கு டாக்டர் க. சிவராசா ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

பாடல்களை மனனம் செய்து ஒப்புவித்த ஐந்து பேர் உருத்திராக்க மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனை, பிரதி வெள்ளிக்கிழமை இடம் பெறும் சுவாமி எழுந்தருளி உள்வீதி உலாவருதல் ஆகிய நிகழ்வுகளில் கந்தரனுபூதி பாடல்கள் படிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை ஆலய உள்வீதி சுவர்களில் கந்தரனுபூதி நூலின் 51 பாடல்களும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (201-28)

## இலகு வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மைதானத்தின் சிரமதானம்

பண்டத்தரிப்பு, நவ.13

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கே. சிவராசாவின் வேண்டுகோளை ஏற்று இலகு வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலையின் விளையாட்டு மைதானம், பாடசாலையில் ஏனைய இடங்கள் பண் டத்தரிப்பு ஜே/146 கிராம சேவையாளர் பிரிவு மக்களால் அப்பிரிவு கிராம சேவையாளர் சா.ஞானந்தன் மேற்பார்வையில் சிரமதானம் செய்து கொடுக்கப்பட்டன. (201-130)

## உரையாசிரியர் கௌரவிப்பு

சுழிபுரம்,நவ.13

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இடம்பெற்று வந்த கந்தசஷ்டி, கந்தபுராணப் படிப்பின்போது உரைகூறிய பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கலாபூஷணம் ந.சிவசண்முகமூர்த்தி பொன்னாடை போர்த்து வருடாந்த பாராட்டுரை வழங்கிக் கௌரவித்துள்ளார். பண்டிதர் பொன்னம்பலவாணர் மேற்படி ஆலயத்தில் கந்தபுராண யுத்தகாண்ட உரையைக் கூறி[illegible] வராக விளங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (201-28)

## வாகனங்கள் வேகமாகச் செலுத்தப்படுவதால் போக்குவரத்துச் செய்வதில் நெருக்கடி

வண்ணை,நவ.13

யாழ். காங்கேசன்துறை நாச்சிமார் கோயில் பகுதியால் பயணிக்கும் வாகனங்கள் வேகத்தைக் கட்டுப்படுத்தாமல் கடுகதியில் செல்வதால் பக்தர்களுக்கு மிகுந்த அசௌகரியம் ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆலய முன் வீதியில் இருக்கும் திருப்பத்தால் வாகனங்கள் திரும்பும் போது எதிர் எதிராக வருகின்ற வாகனங்களிடையே ஆலய வழிபாட்டில் ஈடுபட்டு நிற்கும் பக்தர்கள் சிக்கி விபத்துகள் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை ஆலய எதிர்ப் புறமாகச் செல்லும் இராமநாதன் வீதிக்குச் செல்லும் யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்கு செல்கின்ற மாணவ, மாணவிகளும் வாகனங்கள் வேகமாக செலுத்தப்படுவதால் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்வதாவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆலயங்களின் சூழலில் வேகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த போதும் வாகனச் சாரதிகள் தம்போக்கில் வாகனங்களை வேகமாகச் செலுத்துவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (203-160)



நெடுந்தீவு கடற்றொழிலாளர் வங்கிக் கட்டடத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நெடுந்தீவு மத்தி மேற்கு அலையோசை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் காணியில் சங்கத்தலைவர் அ.மரியதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் வண.பிதா என்.சவிரிமுத்து அடிகளார், சங்க உறுப்பினர்கள், நெடுந்தீவு பிரதேசசபை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். [51]

## சுயதொழில் முயற்சிக்கடனுக்கு காசோலைகள் கிடைக்கப்பெற்றோர்

நவாலி, நவ.13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் முயற்சிக் கடனுக்கு விண்ணப்பம் செய்தவர்களின் கொடுப்பனவுக்கான காசோலைகள் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

காசேலைகள் கிடைக்கப்பெற்றவர்களின் பெயர் விவரம் வருமாறு:

அ.சிவஞான மூர்த்தி- டச்சுவீதி, மானிப்பாய், பொ. தம்பிராசா- ஆனந்தா வீதி, மானிப்பாய், எ. மாசில்லா- நல்லாயன் வீதி, இளவாலை, யா. பற்றிமா- முள்ளானை, இளவாலை, க. இராசாத்தி- 4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை, ர. சுஜந்தா- சுதுமலை தெற்கு, மானிப்பாய், ச.விமலச்சந்திரன் - மாதகல் கிழக்கு, மாதகல், இ. சுகந்தினி- கொம்பளிப்புலம், சண்டிலிப்பாய், ப. குகானந்தன் - ஆலங்குளாய், சண்டிலிப்பாய் வடக்கு, இ. கைலாசபிள்ளை - இணுவில் வீதி, சுதுமலை வடக்கு, மானிப்பாய், பொ. சற்குணராசா- மாதகல் கிழக்கு, மாதகல். க. ஜெயரத்தினம் - மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். நா. லோகேஸ்வரன் - மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். செ. பாமினி- நவாலி தெற்கு, மானிப்பாய். (203-100)

## பணிநயப்பும் நூல்கள் வெளியீடும் யாழ்.இந்துக்கல்லூரியில் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், நவ.13

கலாநிதி நா.தணிகாசலம் பிள்ளையின் பணிநயப்பும் நூல்கள் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்விற்குப் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமை தாங்குவார்.

வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், அதிபர் வீ.கணேசராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பாராட்டுரைகளை யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம், யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

'தணிகை' பணி நயப்பு மலரை யாழ். பல்கலைக் கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், நயப்புரையை யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற்துறை விரிவுரையாளர் பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் நிகழ்த்தவுள்ளனர்.

'கல்வியுலா' நூல் வெளயீட்டுரையை வவுனியா வளாக ஆங்கிலத்துறைத் தலைவர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் நிகழ்த்த கல்வியியற்துறை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, யாழ்.கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் அறிமுகவுரை ஆற்றவுள்ளனர். (203-204)

## கோடிகாமம் நலன்புரி நிலையம் விரைவில் மூடப்படும்

யாழ்ப்பாணம்,நவ.13

கொடிகாமம் அ.த.க பாடசாலையில் இயங்கும் நலன்புரி நிலையம் விரைவில் மூடப்படலாமெனத் தெரியவருகிறது.

பாடசாலையை மீண்டும் இயக்குவதற்காக இந்த நிலையத்தில் தங்கியுள்ள 74 குடும்பங்களையும் இராமாவில் நலன்புரி நிலையத்திற்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கைதடி சிறுவர் இல்லத்தில் இயங்கிய நலன்புரி நிலையம் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-207)

## வினாடிவினாப் போட்டி

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் பொன்விழாவினை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாலவர்தொடர்பான வினாடி வினாப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்குத் தனிப்பிரிவாகவும், 21 வயதுக்கு மேற்பட்டோருக்குத் தனிப்பிரிவாகவும் நடத்தப்படவுள்ள இப்போட்டியில் 5 பேர் கொண்ட குழுவாகப் பங்குபற்றமுடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை [illegible]தலைவர், 153 கே.கே.எஸ். வீதி, கொக்குவில் எனும் முகரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலர் கந்த சத்தியதாசன் அறிவித்துள்ளார். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






குடாநாட்டில் பெற்றோலுக்குத் திடீரென தட்டுப்பாடு நிலவுகிறது. இதனையடுத்து யாழ்.நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்றோல் கையிருப்பு முடிவுற்றதால் வாகனங்கள் பெற்றோல் நிரப்புவதற்குப் பெரும் சிரமப்பட்டு வருகின்றன.
இந்த வகையில் நகரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றில் பெற்றோல் பெறுவதற்கு வாகனங்கள் முண்டியடிப்பதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்: நந்தன், லக்ஸ்மன், ஓங்காரன்)

# முகாம்களிலிருந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவை ஐ.நா. வழங்குகிறது

யாழ்ப்பாணம், நவ.13

நலன்புரி நிலையங்களிலிருந்து மீள் குடியேறும் குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் வதிவிடம் அமைப்பதற்கான உதவிக் கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் இருந்து மீள்குடியேற்றத்துக்கு அல்லது உறவினர், நண்பர்கள் வீடுகளில் வதிவதற்கு அனுமதி வழங்கப்பட்ட சகல குடும்பங்களுக்கும் உதவித்தொகையான 25 ஆயிரம் ரூபாவில் ஐயாயிரம் ரூபா யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டபின் கடந்த 20ஆம் திகதி பணமாக வழங்கப்பட்டது.

இந்தப் பணத்தொகையைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு உடனடியாக அதனைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அனைத்துப் பிரதேச செயலர்களையும் உதவி அரசாங்க அதிபர்களையும் யாழ்.அரச அதிபர் பணித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் இருபதாயிரம் ரூபா நிதி வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கடந்த திங்கட்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான விளக்கங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இக்கொடுப்பனவுகள் இலங்கை வங்கி ஊடாக வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வங்கியில் ஏற்கனவே கணக்கு வைத்திருப்பவர்கள் அந்தக் கணக்கின் மூலம் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம்.

புதிதாகக் கணக்குத் திறக்கவேண்டியவர்கள் பிரதேச செயலர்களாலும் 'யு.என்.எச்.சி.ஆர்' நிறுவனத்தினாலும் வழங்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்து எந்த வித நிதி வைப்பும் இல்லாமல் புதிதாகக் கணக்கைத் திறக்கலாம்

இந்தக் கொடுப்பனவு ஏற்பாடுகள் ஏற்கனவே யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் செய்யப்பட்டுள்ளன. கூடிய விரைவில் இந்தநிதி மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு சகல பிரதேச செயலர்களும், உதவி அரசாங்க அதிபர்களும் கேட்கப்பட்டுள்ளனர் என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(1-201)

## தென்மராட்சியில் விரைவில் தும்புத் தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.13

தென்மராட்சிப் பிரதேச தொழிற்றுறை திணைக்களத்தினர் பிரதேச யுவதிகளுக்கான தும்புத்தொழில் பயிற்சியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் 18 வயதுக்கு மேற்பட்ட யுவதிகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக தொழிற்றுறைத் திணைக்களப் பிரிவில் கையளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(203-207)

## மங்கையர்க்கரசி வித்தியில் 38 மாணவர்கள் இணைவு

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டோரில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் 38 மாணவர்கள் இணைந்துள்ளதாக கல்லூரி அதிபர் ம. கஜேந்திரன் தெரிவித்தார்.

(203-15)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம்

வடமராட்சி, நவ.13

கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 24 மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸார் நடத்திய சோதனையின்போது தும்பளைப் பகுதியில் வைத்து போதைப் பொருளான கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, குற்றம்சாட்டப்பட்டவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அவருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் அபராதத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் 24 மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (203-236)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## இளவாலை ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு பிரிவின் கட்டடம் ஞாயிறன்று திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

இளவாலை ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவின் கட்டடத்திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி க.இராதையன், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தி.ஜெயகுமாரன், யாழ்.கட்டடத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் க.குகநேசன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சு.முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ம.ஜெகூ ஆகியோர் பங்குபற்றுவர்.

(203-204)

## வலுவிழந்தோருக்கு உதவி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.13

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியுள்ள அங்கவீனர்களுக்குப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் பொருள்கள் பெற்று விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

வலுவிழந்தோர் தமக்குத் தேவையான உபகரணங்கள், பொருள்கள் பற்றிய விவரங்களை சமூக சேவைகள் பிரிவில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

## யாழ்.நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த காவலரண்கள் அகற்றப்பட்டு வருகின்றன

வண்ணை,நவ.13

யாழ்.நகரப் பகுதிகளில் போக்குவரத்துக்கு பெரும் கேள்விக் குறியாக வீதிகளை உள்ளெடுத்து அமைக்கப்பட்டிருந்த படையினரின் காவலரண்கள் முற்றாக அகற்றப்பட்டு வருகின்றன. சில காவலரண்கள் உள் நோக்கி நகர்த்தப்படுகின்றன.

அந்த வகையில்,யாழ்.கே.கே.எஸ். வீதியில் சிவன் கோயில் வடக்கு மூலையில் பல வருடங்களாக இருந்துவந்த படையினரின் காவலரண் முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

முதலாம் குறுக்கு வீதி, வேம்படி வீதிச் சந்தியில் மகளிர் கல்லூரி மண்டப எதிரில் அமைந்திருந்த காவலரண் உள்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலைகள் ஆரம்பமாகின்ற, முடிகின்ற நேரங்களில் ஏற்பட்டு வந்த போக்குவரத்து நெரிசல் குறைந்துள்ளதாக மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

(203-160)

## ஊர்காவற்றுறை- காரைநகர் பாதை படகுச் சேவை சீர்செய்யப்பட்டு சேவைகள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம்,நவ.13

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையில் இடம்பெற்ற பாதைப் படகின் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதைப்படகின் கேபிள் அறுந்திருந்ததால் கடந்த ஒரு வாரமாக இச்சேவை இடம்பெறவில்லை. காரைநகர் ஊடாக ஊர்காவற்றுறைக்குத் தினமும் கடமைக்குச் செல்லும் வலிகாமம், காரைநகர் பிரதேசங்களைச் சேர்ந்த அரச ஊழியர்கள், பொது மக்கள், வர்த்தகர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதேவேளை காரைநகர் கடற்படையினர் தமது கடற்படைக் கலங்களில் முன்னுரிமை அடிப்படையில் அரச ஊழியர்களை மட்டுப்படுத்தப்பட்டளவில் ஊர்காவற்றுறைக்கு அழைத்துச் சென்றனர்.

இதனையடுத்து மக்களால் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா படகுச்சேவைப் பாதையை நேரடியாகச் சென்று பார்வையிட்டு இது தொடர்பாக உடனடியாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிப்பு விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் உடனடியாக அவ்விடத்துக்குச் சென்று அறுந்திருந்த கேபிளைச் சீர்செய்து படகுச்சேவை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தனர்.

(201-325-93)

## கை கழுவுதலின் முக்கியத்துவம் குறித்து மாணவரிடையே சித்திரப் போட்டி

குருநகர், நவ.13

பாடசாலை மாணவர்களிடையே கை கழுவும் செயற்பாட்டின் முக்கியத்துவம் குறித்து மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு மத்திய கல்வி அமைச்சுடன் இணைந்து சித்திரப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

''உணவு உண்ண முன்னர் சவர்க்காரமிட்டு கை கழுவுவதனால் நாம் பெறும் பலன்கள்'' எனும் தலைப்பில் ஏ-4 அளவிலான தாளில் சித்திரம் வரையப்பட்டிருக்க வேண்டும்.

இப்போட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் இரு பிரிவாக இடம்பெறும்.

6-8 வயதுக்குட்பட்ட மாணவர்களும் 9-11 வயதுக்குட்பட்ட மாணவர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

ஒரு மாணவர் ஒரு சித்திரத்தையே அனுப்பி வைக்க வேண்டும்.

இப்போட்டிக்கான சித்திரங்களை குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களிடம் பெற்று எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களையும் கொழும்பு சுகாதாரக் கல்விப் பணியகம் கோரியுள்ளது. (203-51)

## தார் பரல்கள் வந்து சேர்ந்தன

வடமராட்சி, நவ.13


யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களம், பருத்தித்துறை பிரதேச சபை, வேலணைப் பிரதேச சபை ஆகியவற்றுக்கு ஒரு தொகுதி தார் பரல்கள் வந்து சேர்ந்துள்ளன.

கொழும்பிலிருந்து ஏ-9 பாதையூடாக தனியார் நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான கனரக பார ஊர்தியில் தார் பரல்கள் எடுத்துவரப்பட்டன.

இதனையடுத்து பல வீதிகளைத் திருத்திப் புனரமைக்கும் பணியில் வீதி அபிவிருத்தித் திணைக்களமும், பருத்தித்துறை, வேலணைப் பிரதேசசபைகளும் ஈடுபட்டுள்ளன.

(203-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் வரையறுக்கப்பட்ட துணை நிறுவனமான பி.ஓ.சி.ரவல்ஸ் நேற்று யாழ்ப்பாணம் இலங்கை வங்கியில் திறந்து வைக்கப்பட்டது. இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம், கொழும்பு தலைமை அலுவலக முகாமையாளர் றொமேஸ் சமரநாயக்கா ஆகியோர் நாடா வெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். றொமேஸ் சமரநாயக்கா மங்களவிளக்கேற்றுவதையும் சிங்கப்பூருக்கான முதலாவது விமானப் பயணச் சீட்டை இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் என்.சிவரட்ணத்திடமிருந்து பயணி ஒருவர் பெற்றுக்கொள்வதையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஷ்மன்)*

# பயண நிறுவனங்களை நம்பி மக்கள் ஏமாற்றமடைகின்றனர் அவ்வாறு இல்லாமல் 'பி.ஓ.சி. ரவல்ஸ்' தரமான சேவையை வழங்கும்

## யாழ்.கிளையின் நிறைவேற்று அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 13

அநேகமான பயண நிறுவனங்களை நம்பி எமது மக்கள் ஏமாற்றமடைகின்றார்கள். அவ்வாறு இல்லாமல் எமது மக்களுக்குத் தரமான-உண்மையான சேவையை பி.ஓ.சி.ரவல்ஸ் நிறுவனம் வழங்கும்.

இலங்கை வங்கியின் துணை நிலையமாக இயங்கும் முதல்தர நிறுவனம் பி.ஓ.சி. டிரவல்ஸ். இதன் முக்கிய நோக்கம் யாழ்ப்பாணத்து மக்களுக்கு உன்னதமான சேவையை வழங்க வேண்டும் என்பதே என நிறுவனத்தின் யாழ்.கிளை நிறை வேற்று அதிகாரி வே.சுரேஸ்குமார் தெரிவித்தார்.

மேற்படி நிறுவனத்தின் கிளை அலுவலகம் ஒன்று நேற்றைய தினம் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கி அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுரேஸ்குமார் மேலும் கூறியவை வருமாறு:-

இங்கு அநேகமான பயண நிறுவனங்களை நம்பி பலர் ஏமாற்றமடைந்து வருகின்றனர். இந்த நிலைமையைத் தவிர்த்து மக்களுக்குத் தரமான சேவைகளை வழங்க வேண்டிய தேவை உள்ளது. பிரயாண அனுமதிச் சீட்டுக்காக மக்கள் வீண் சிரமங்களை எதிர்கொள்ளாது 15 நிமிடங்களில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு வீசாவுடன் வருபவர்கள் பயண அனுமதிச் சீட்டைப் பெறக் கூடியதாகவும் விசாவுக்கான படிவங்களை வழங்கி இந்த நாடுகளுக்குரிய விசாவைப் பெற்றுக் கொடுக்கவும் உதவிகள் செய்யப்படும்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் செல்வதற்கான விசாவுக்காக நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல வேண்டியவர்கள், வெளிநாட்டில் உள்ள மக்கள் தமது உறவினர்களை அங்கு அழைக்க விரும்பினால் அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளை வழங்கல், வெளியிடங்களில் இருந்து வந்தவர்கள் தமது பயணத்திற்குப் புறப்பட முடியாத சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அதற்கான திகதி மாற்றங்கள், வெளிநாட்டில் உள்ளவர்கள் இங்கு வர இருப்பின் அவர்களின் வரவுக்கான உதவிகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் கிடைக்கவும் வசதி செய்யப்படும். அத்துடன் காப்புறுதி செய்தவர்கள் பயணிக்கும்போது அவர்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படின் காப்புறுதி

தொகையையும் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தென்னிந்திய தலயாத்திரைகள், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு உல்லாசப் பயணம் செய்ய இந்த நிறுவனத்தை நாடுபவர்களுக்கு இங்கிருந்து சென்று கட்டுநாயக்கவுக்குத் திரும்பும் வரையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றார் - சுரேஸ்குமார்.

இந்த நிறுவனத்தின் கிளை அலுவலகத் திறப்பு விழா நேற்று இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக் கிளையில் நடைபெற்றது. இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

(50-111)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும்

உயர்திரு.



**சிவசம்பு பஞ்சாட்சரம்**

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2 - I இல் இருந்து இலங்கை அதிபர் சேவை தரம் - 01இற்கு 01.01.2002 முதல் பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரது பணி மென்மேலும் தொடரவும், பல்லாண்டு காலம் வாழவும் அருள வேண்டி இணுவில் பரராச சேகரப்பிள்ளையார், இணுவில் கந்தசுவாமி பாதம் பணிகின்றோம்.

பாடசாலைச் சமூகமும்,
ஆசிரியர் நலன்புரி கழகமும்,
யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

(90910)

## இணுவில் கந்தசுவாமி கோயில் - மகா சபை விசேட பொதுக் கூட்டம்

காலம் : 2009.11.15 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி
இடம் : கோயில் உள் மண்டபம்
தலைவர் : திரு. செ.சோதிப்பெருமாள் (ஜே.பி.)
சகல உறுப்பினர்களும் (நிரந்தர உபய காரர்கள்) தவறாது சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

நிர்வாக உறுப்பினர்கள்,
இணுவில். (90905) தர்மகர்த்தா சபை.

## ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



ஸ்ரீ அம்மா பகவான் சீடர் ராஜேஸ் தாதாஜி அவர்களால் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத் தப்பட இருந்த ஆன்மீக நிகழ்ச்சியும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் நடைபெற இருந்த நிகழ்ச்சியும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்பதை அனைத்து ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ.கல்கி ஆன்மீக மையம்
மணியர்பதி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(90904)

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் இராசம்மா



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும், தற்போது கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் இராசம்மா நேற்று (2009.11.12) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வே.சுப்பிரமணியம் (பத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், செல்லம்மா, கந்தையா, தட்சணாமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவராசா (ஆசிரியர்), ஆனந்தநடராசா (பொறியியலாளர், லண்டன்), புஸ்பவதி, சண்முகராசா, தேவராசா, செல்வராசா (ரூபி நகைமாளிகை), லீலாவதி, குணவதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சாமுண்டீஸ்வரி, ஜெயகௌரி (லண்டன்), ஜெகத்குருதாஸ் (மருந்தாளர்), இராஜமனோகரி, ரஞ்சனிதேவி, செல்வராணி, லிங்கரெட்ணம், சேத்திரபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் பார்த்தீபன் (இலங்கை வங்கி), செந்தில்குமரன், பிருந்தா (வைத்தியர், லண்டன்), ரூபன் (லண்டன்), கம்ஷா (இலங்கை வங்கி), டிவ்யா, கிரிதரணி, வைஷ்ணவி, வெண்ணிலவன், சுமந்தரன், சுபஜெனனி, சுபகரன், நிரோஷன் (பிரான்ஸ்), நிகிதா (பிரான்ஸ்), நீனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2009) வெள்ளிக்கிழமை அவரின் தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி புஷ்பவதி
ஜெகத்குருதாஸ் (மகள்).

இல.12, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(90911)

## கண்ணீர் அஞ்சலி



எம்து அன்பு நண்பன்
சிவானந்தன்
யோகானந்தின் தந்தை
**வைத்திலிங்கம் சிவானந்தன்**
*(ஓய்வுபெற்ற உதவிப்பொறியியலாளர், Srilanka Telecom, இரத்மலானை)*
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
2007 A/L கணித, உயிரியல் பிரிவு,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(90909)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## விஞ்ஞானபீடம்
### மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் தமிழ்மொழி மூலம் நடத்தும் கட்டணம் செலுத்திப் பயிலும் இரண்டு கல்வியாண்டு கால மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறிக்கு 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காவது தொகுதி மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

இக்கற்கை நெறிக்கு தகுதி வாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய எவரும் விண்ணப்பிக்கலாம். தெரிவு உளச்சார்பு பரீட்சை மூலமும் நேர்காணல் மூலமும் திறமை அடிப்படையில் அமையும். போதியளவு விண்ணப்பங்கள் கிடைத்தால் மட்டுமே கற்கை நெறி நடத்தப்படும்.

கட்டண விவரம்:

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் | ரூபா 1,000/- |
| கற்கைநெறிக்கட்டணம் | ரூபா 30,000/- |
| மீளப் பெறக்கூடிய வைப்பு | ரூபா 1,000/- |

கற்கைநெறிக்கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில் பதிவு மேற்கொள்ளும் பொழுது இருபத்திரண்டாயிரம் ரூபாவும் இரண்டாம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பு பத்தாயிரம் ரூபாவுமாக செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளுக்குமான உதவிப்பதிவாளர் பிரிவில் 100/- கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இக்கற்கைநெறி சம்பந்தமான 10.06.2009 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்துக்கு அமைவாக விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்க விரும்பின் அவர்களிடம் இருந்து விண்ணப்பப்படிவக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

இக்கற்கை நெறி பற்றிய விவரங்களடங்கிய கையேட்டை ரூபா ஐம்பது செலுத்தி விஞ்ஞானபீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 'உதவிப்பதிவாளர், விஞ்ஞானபீடம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்' எனும் முகவரிக்கு 07.12.2009 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கடிதவுறையின் இடதுபுறமேல் மூலையில் மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம் என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

*பதிவாளர், 12.11.2009* *(சி/562.274)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்சரிவால் பாதிக்கப்பட்ட நீலகிரியில் போர்க்கால அடிப்படையில் மீட்புப்பணி

## வரலாறு காணாத சேதத்தைப் பார்த்து இராணுவம் அதிர்ச்சி



ஊட்டி, நவ, 13

நீலகிரியில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

கோத்தகிரி, குன்னூர் பாதைகளில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வந்துள்ள இராணுவம் சேதத்தைப் பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளது.

வடகிழக்கு பருவமழை மற்றும் வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலையால், தமிழகம் முழுவதும் சில நாள்களாக கனமழை பெய்தது. நீலகிரியில் கடந்த மூன்று நாள்களில் மட்டும் 634 செ.மீ. மழை பெய்துள்ளது.

கடும் மழை காரணமாக, நீலகிரியின் நூற்றுக்கணக்கான இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், வீடுகள் இடிந்தும், மண்ணில் புதைந்தும், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும் 43 பேர் உயிரிழந்தனர்; 250 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன என் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் மரங்கள் சாய்ந்தும், மண்சரிவு ஏற்பட்டும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வீதியில் விழும் மரங்களை, தீயணைப்பு மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் அவ்வப்போது அகற்றி வருகின்றனர். ஊட்டியில் இருந்து கோத்தகிரிக்கு செல்லும் வீதியும், குன்னூருக்கு செல்லும் வீதியும் முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

நீலகிரியில் கனமழையால் ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிடவும், நிவாரணப் பணிகளை கண்காணிக்கவும் வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தலைமையில் மத்திய தொலைத்தொடர்புத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ராஜா, ஊரக தொழில்துறை அமைச்சர் பெங்களூர் பழனிசாமி, கதர் வாரியத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் ஆகியோர், சேதப் பகுதிகளை நேற்றுமுன்தினம் ஆய்வு செய்தனர்.

நீலகிரியில் பெய்த கனமழையால் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து கணக்கிட கலெக்டர் தலைமையில் தனிக்குழு அமைக்கப்பட் டுள்ளது. பொருள்சேதம் மற்றும் பயிர் சேதம் குறித்து இந்தக் குழு கணக்கிட்டு அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்.

மீட்புப் பணியை மேற்கொள்ள இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது. தமிழக அதி ரடிப் படையினரும் ஊட்டியில் முகாமிட்டுள் ளனர். வரலாறு காணாத சேதத்தைப் பார்த்து படையினர் கடும் அதிர்ச்சியடைந்தனர். வீதிகள் இல்லாத காரணத்தால் மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் ஊட்டிக்கு வருவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த குடும்பத்தாருக்கு, தலா ஒரு லட்சம் ரூபா நிவாரண நிதி வழங்கப்படும் என முதல்வர் அறிவித்தார். அதன் அடிப்படையில், எட்டு குடும்பத்தாருக்கு, எட்டு லட்சம் ரூபா நிவாரண நிதியை, மத்திய அமைச்சர் ராஜா நேற்றுமுன்தினம் வழங்கினார். பத்தாயிரம் பேர், தங்களது வீடுகளை இழந்து, நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.

நீலகிரியின் மற்ற பகுதிகளிலிருந்து, 30 கிராமங்கள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளதால் அவற்றுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்த பாதுகாப்பான வனப் பாதைகளைத் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது.



நீலகிரியில் கனமழையால் ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிடவும், நிவாரணப் பணிகளை கண்காணிக்கவும் மண்சரிவால் சேதமடைந்த பகுதிகளை நேற்றுமுன்தினம் அமைச்சர்கள் சென்று பார்வையிட்ட போது....

# கடலில் தத்தளித்த இலங்கை மீனவர் தமிழக மீனவரால் மீட்டுக் கரைசேர்ப்பு

இராமேஸ்வரம், நவ.13

இராமேஸ்வரம் அருகே உள்ள பிசாசு முனைக் கடற்பகுதியில், பிளாஸ்டிக் படகில் இலங்கை மீனவர்கள் 2 பேர், கடல் கொந்தளிப்பால் தத்தளித்தனர். அவர்களை அந்தப் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நாட்டுப் படகு மீனவர்கள் காப்பாற்றினர்.

அவர்களுக்கு தங்கள் படகில் வைத்திருந்த உணவையும் கொடுத்து, இராமேஸ்வரத்துக்கு படகுடன் கொண்டு வந்தனர்.

பின்னர் இலங்கை மீனவர்கள், இந்தியக் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். விசாரணையில் அவர்களது பெயர்கள் மரியன் பிரதீப் (வயது - 29), ஆல்பேர்ட் சலீமா (வயது - 31) என்று தெரியவந்தது.

அவர்கள் இலங்கையில் உள்ள பேசாலை என்ற இடத்தை சேர்ந்தவர்கள். கடலில் எரிபொருள் தீர்ந்து விட்டதால், கடல் கொந்தளிப்பில் சிக்கி 3 நாள்களாக நடுக்கடலில் தவித்தனர் என இலங்கை மீனவர்கள் தெரிவித்தனர். பின்னர் இலங்கை மீனவர்கள் 2 பேரும், இராமேஸ்வரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

# ஸ்ரீரங்கம் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்; இலங்கை திரும்பினார் மஹிந்தவின் சகோதரி

## புதிய தமிழகம் கட்சியினர் 30 பேர் கைது



திருச்சி, நவ.13

ஸ்ரீரங்கம் கோவிலுக்கு செல்ல திட்டமிட்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவின் தங்கை நிருபமா ராஜபக்ஷவுக்கு எதிராக திருச்சியில் ஈழத் தமிழ் ஆதரவு அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. இதனால் அவர் தனது சுற்றுப் பயணத்தை ரத்து செய்து விட்டு ஸ்ரீரங்கம் செல்லாமலேயே இலங்கை திரும்பினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தங்கை நிருபமா ராஜபக்ஷவும், அவரது கணவர் திருக்குமரன் நடேசனும் தமிழகத்தில் கடந்த சில தினங்களாக ஆன்மீக சுற்றுப் பயணம் செய்து வந்தனர்.

திருச்சி மத்திய பஸ்நிலையம் அருகே உள்ள ஹோட்டல் ஒன்றில் நிருபமா ராஜபக்ஷ தனது கணவருடன் தங்கியிருந்தார். ஸ்ரீரங்கம் கோவிலில் சுவாமி தரிசனம் செய்ய திட்டமிட்டிருந்தார். இந்தநிலையில் திருச்சியில் நிருபமா ராஜபக்ஷவுக்கு கறுப்புக்கொடி காட்டப்போவதாக பல்வேறு அமைப்புகள் அறிவித்தன.

இதனையொட்டி திருச்சியில் அவர் தங்கி இருந்த ஹோட்டல் முன்பு நேற்றுமுன்தினம் இரவு முதல் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

பொலிஸ் பாதுகாப்பையும் மீறி நேற்றுமுன்தினம் காலை சுமார் 7 மணிக்கு திருச்சி மத்திய பஸ்நிலையம் பெரியார் சிலை முன்பு புதிய தமிழகம் கட்சியினர் திரண்டனர். அவர்களில் 30 பேர் கைது செய்யப் பட்டனர்.

இதேபோல பெரியார் சிலை அருகேயும், மைக் டொனால்டு வீதிப் பகுதியிலும், நீதிமன்றம் முன்பும், விமான நிலைய வாசலிலும் பல்வேறு அமைப்புகள் சார்பாக போராட்டங்கள் நடத்தப்பட்டன.

திருச்சியில் தனக்கு எதிராக நடந்த தொடர் போராட்டத்தை அறிந்த நிருபமா ராஜபக்ஷ அதிர்ச்சியடைந்தார். ஸ்ரீரங்கத்தில் சுவாமி தரிசனம் செய்யும் எண்ணத்தை கைவிட்டு இலங்கை திரும்ப முடிவு செய்தார். அவர் நேற்றுமுன்தினம் காலை 9.45 மணிக்கு ஹோட்டலில் இருந்து நேராக திருச்சி விமானநிலையத்துக்குச் சென்றார். இதையடுத்து திருச்சி விமான நிலையத்திலும் நிருபமா ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புக் காட்ட ம.தி.மு.கவை சேர்ந்தவர்கள் நின்றனர். அவர்களையும் பொலிஸார் கைது செய்தனர். அதேபோன்று பெரியார் திராவிடக் கழகத்தை சேர்ந்த இராஜேந்திரனும் எதிர்ப்புக் காட்ட முயன்றபோது கைதானார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை 11.05 மணிக்கு நிருபமா, ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் மூலம் கொழும்பு புறப்பட்டுச் சென்றார்.

# வைரமுத்துவின் கவிதைகள் கன்னடத்தில் மொழிபெயர்ப்பு



சென்னை, நவ. 13

கவிஞர் வைரமுத்து எழுதியுள்ள கவிதைகளில், 33 கவிதைகளை கன்னடத்தில் மொழிபெயர்த்து பெங்களூரில் உள்ள கிறிஸ்து பல்கலைக்கழகம் வெளியிடுகிறது.

பெங்களூர் மாநிலக் கல்லூரி கன்னடப் பேராசிரியர் கே.மலர்விழி கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார்.

பெங்களூர், ஒசூர் சாலையில் அமைந்துள்ள கிறிஸ்து பல்கலைக்கழக அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் விழாவில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகள் வெளியிடப்பட உள்ளன.

கவிஞர் வைரமுத்து அதை வெளியிடுகிறார். விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் அருட்தந்தை தாமஸ் மேத்யூ, கன்னடக் கவிஞரும் நாடக ஆசிரியருமான சந்திரசேகர கம்பாரா, மூத்த கன்னட எழுத்தாளர் சேஷ நாராயணா ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்துக்கு அவமானத்தை ஏற்படுத்திவிட்டது காங்கிரஸ்

## பா.ஜ.கவின் பொன்.ராதாகிருஷ்ணன்

சென்னை, நவ. 13

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் அரசு தமிழகத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தி விட்டது. அங்குள்ள முகாம்களின் நிலையை அறிய எம்.பிக்கள் குழுவை அனுப்பினர். ஆனால், அகில இந்திய அளவிலான எம்.பிக்கள் குழுவை அனுப்பியிருக்க வேண்டும் - என்று முன்னாள் மத்திய அமைச்சரும், பாரதீய ஜனதாக் கட்சி மாநிலத் துணைத் தலைவருமான பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாகர்கோவிலில் நேற்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

தமிழகத்தில் பா.ஜ.க. எழுச்சி பெற்று வருகிறது.

நடந்து முடிந்த இடைத் தேர்தலில் காங்கிரஸுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. 17 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது என அக்கட்சி கூறுகிறது. அதில் 7 இடங்களில் திரிணாமுல் காங்கிரஸ்தான் வெற்றிபெற்றுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சிகள் மிகப்பெரிய சரிவை சந்தித்து வருகிறது.

காங்கிரஸ் அரசின் செயற்பாடு நாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்திலுள்ளது. சீனா 1962 இல் நடந்ததை மறந்து விடக்கூடாது என்று எச்சரிக்கிறது. நாம் வீரர்களைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இந்தியாவில் தற்போது லஞ்ச ஊழல் தலைவிரித்தாடுகிறது. தங்க விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் அரசு தமிழகத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தி விட்டது. எம்.பிக்கள் குழுவை அனுப்பினர். ஆனால் அகில இந்திய அளவிலான எம்.பிக்கள் குழுவை அனுப்பியிருக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

# இந்தியச் செய்திகள்

# மும்பை உட்பட முக்கிய நகரங்கள் மீது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதி

## உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 13

இந்தியாவில் மும்பை உட்பட முக்கிய நகரங்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் - என்று மத்திய உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட நகரங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் எவ்.பி.ஐ. புலனாய்வு அமைப்பினரால் கைது செய்யப்பட்ட டேவிட் ஹெட்லியிடம், பொலிஸார் நடத்திய விசாரணையில், இந்தியாவில் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் சதித் திட்டம் தீட்டியிருந்தமை தெரிய வந்தது. இந்நிலையில், ஹெட்லி இந்தியாவிற்கு அடிக்கடி வந்து சென்றதையும் பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

குறிப்பாக, மும்பை, அகமதாபாத், லக்னோ, ஆக்ரா மற்றும் டில்லிக்கு அவன் வழக்கமாக சென்றுவந்தமையும் தெரியவந்தது.

இதன் காரணமாக இந்த இடங்களில் அமைதியாக இருந்துவிட்டு தக்க தருணத்தில் தாக்குதல் நடத்தும் சில அமைப்புகளை ஹெட்லி நிறுவியிருக்கலாம் என்ற சந்தேகமும் வலுத்துள்ளது.

இதையடுத்து, இந் நகரங்களுக்கு பயங்கரவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்படலாம் என மத்திய உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது. இதையொட்டி, அந்தந்த நகரங்களில் உஷார் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும் பட்சத்தில் இராணுவத்தின் உதவிகளை கோரும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் தீவிரவாதக் குழுக்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்

## அமெ. அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் பேட்டி

வாஷிங்ரன், நவ. 13

''தலிபான்கள் மீது நடவடிக்கை எடுப்பதுபோல, பாகிஸ்தானிலுள்ள அனைத்துத் தீவிரவாதக் குழுக்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்நாட்டு அரசை வலியுறுத்துவோம்'' என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், தொலைக்காட்சியொன்றுக்குத் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

''பாகிஸ்தானுக்கு நான் சென்றிருந்தபோது, அந்நாட்டின் அரச தலைவர்களிடமும், இராணுவத் தலைவர்களிடமும் பேச்சுகள் நடத்தினேன். இவற்றிலிருந்து தலிபான்களுக்கு எதிரான யுத்தம் நாட்டுக்கான யுத்தம் அல்ல. அது தங்கள் எதிரிகளுக்கு எதிரான யுத்தம் என்ற விழிப்புணர்வு அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. தலிபான்கள் தங்களுக்கும் எதிரிகள் என்பதை அவர்கள் புரிந்துகொண்டுள்ளார்கள்'' என்றும் ஹிலாரி குறிப்பிட்டுள்ளார்.

''தலிபான்களுக்கு எதிராக பாகிஸ்தான் முழுவீச்சில் அதிரடி நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இதற்காக, அந்நாட்டை அமெரிக்கா மென்மேலும் உற்சாகப்படுத்தி வருகிறது. அதற்கு ஆதரவாக இருக்கிறது. எங்கோ ஓர் இடத்தில் தலிபான்களை வீழ்த்திவிட்டோம் என்று பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அவர்கள் ஒரு வலையமைப்பை உருவாக்கி உள்ளனர். பல்தேச தீவிரவாதிகளை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளனர். எனவே, பாகிஸ்தானியர் இது விடயத்தில் கூடிய விழிப்புடன் இருக்கவேண்டும்'' என்றும் ஹிலாரி கேட்டுள்ளார்.

''தீவிரவாதிகள் பாகிஸ்தான் இராணுவத் தலைமையகத்தை தாக்குகிறார்கள். உளவுத்துறை அலுவலகத்தை தாக்குகிறார்கள். இது அந்நிய நாடுகளின் சதி இல்லை. இந்தத் தீவிரவாதிகள் பாகிஸ்தானிலேயே வளர்ந்தவர்கள். அவர்கள் பாகிஸ்தான் அரசை கவிழ்க்க விரும்புகிறார்கள். பாகிஸ்தான் எல்லைக்குள் உள்ள நிலப்பரப்பை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரும்புகிறார்கள்'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

''பின்லேடன் எங்கே பதுங்கி இருக்கிறார் என்பது அந்நாட்டின் தலைமைக்குத் தெரியவில்லை. பாகிஸ்தானிலுள்ள தலைமைகளும், இராணுவ வட்டாரங்களும் இதனையே தெரிவிக்கின்றன. எனினும், இதை முற்றும் முழுதாக எம்மால் நம்பமுடியவில்லை'' என்றும் ஹிலாரி கூறியுள்ளார்.

## இந்தோனேஷியாவில் நேற்றும் நிலநடுக்கம்

ஜகர்த்தா, நவ. 13

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதியிலுள்ள தென் சுலவேசி மாகாணத்தில் நேற்று வியாழக்கிழமை காலையும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.1 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

புலுகும்பா என்ற இடத்திலிருந்து 163 கி.மீ. தொலைவில் நிலத்துக்கடியில் 10. கி.மீ. ஆழத்தில் நேற்று உள்ளூர் நேரப்படி காலை 5 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

# முஸ்லிம்கள் குறித்த ஒபாமாவின் வாக்குறுதி செல்லாக் காசாகியது

## ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் குற்றச்சாட்டு

பெய்ரூத், நவ. 13

''முஸ்லிம்களோடு நல்லிணக்கப்பாடு கட்டி எழுப்பப்படும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆரம்பத்தில் வாக்குறுதி வழங்கியிருந்தார். இது பிசுபிசுத்துவிட்டது. இது ஒரு போலியான வாக்குறுதி என்பதை இப்போது புரிந்து கொண்டோம்'' என லெபனானிய முக்கிய கட்சியான ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹஸன் நஸ்ரல்லா, ஹிஸ்புல்லா தியாகிகள் தின நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''பலஸ்தீன மேற்குக் கரையில், யூதக் குடியேற்றத் திட்டங்களை இஸ்ரேல் கைவிடவேண்டும் என எம்மோடு இணைந்து அமெரிக்காவும் குரல் கொடுக்கின்றது. இதற்கு மாறாக இஸ்ரேலுக்கு மேலதிக இராணுவ உதவிகளை அது மறுபுறம் வழங்கிவருகிறது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''அரபு உலகம் தனது பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண அமெரிக்காவை நாடவேண்டிய அவசியமில்லை. அமெரிக்காவை நம்பியிருக்கவேண்டும் என்பதுமில்லை. ஏனெனில், இப்பிரச்சினைகளுக்கெல்லாம் மூலகர்த்தா அமெரிக்காதான்'' என்றும் ஹிஸ்புல்லாவின் தலைவர் அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

''பராக் ஒபாமா சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இதையடுத்து, புதிய அமெரிக்க நிர்வாகம் உருக்கொண்டது. இதனால் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என அநேகர் எதிர்பார்த்தனர். நம்பினர். இந்த நம்பிக்கை அவநம்பிக்கையாகி விட்டது'' என்றும் அவர் தெரிவித்தார்.

''இஸ்ரேலின் நலன்களிலும், பாதுகாப்பிலும் அமெரிக்கா கூடிய அக்கறை செலுத்துகிறது. இவற்றிலேயே ஈடுபாடு காட்டுகின்றது. அரபுலகம், முஸ்லிம் மக்கள் இவர்களின் அரசுகள் கொண்டுள்ள உணர்வுகள், கௌரவம் ஆகியவை குறித்து அமெரிக்கா சிரத்தை கொள்வதில்லை. பொருட்படுத்துவதுமில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பாகிஸ்தானுக்கு சீனாவிடமிருந்து 36 அதிநவீன போர் விமானங்கள்

இஸ்லாமாபாத், நவ. 13

பாகிஸ்தான் 21 ஆயிரம் கோடி ரூபாவுக்கு 36 போர் விமானங்களை சீனாவிடமிருந்து வாங்கவுள்ளது. இந்த ஜே - 10 ரக விமானங் கள் அமெரிக்காவின் எவ் - 16 ரகத்துக்கு இணையானவை; அதி நவீனமானவை.

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடுகளில் சீனாதான் முதலிடத்தில் உள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக சீனா பாகிஸ்தானுக்குப் போர் விமானங்களை விற்பனை செய்துவருகிறது.

இது தவிர, பிரான்ஸிடமிருந்து மிரேஜ் விமானங்களையும், அமெரிக்காவிடமிருந்து எவ். 16 ரக விமானங்களையும் பாகிஸ்தான் வாங்கி குவித்து வருகிறது.

# ஏ.கே. 47 துப்பாக்கியைக் கண்டு பிடித்தவருக்கு 'ரஷ்ய கதாநாயகன்' விருது வழங்கி கௌரவிப்பு

மொஸ்கோ, நவ. 13

ஏ.கே. 47 துப்பாக்கியைக் கண்டுபிடித்த மிகயீல் கலாஷ்னிகோவ், அவரது 90 ஆவது பிறந்தநாள் விழாவில் 'ரஷ்யாவின் கதாநாயகன்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கிரெம்ளின் மாளிகையில் புதன்கிழமை இந்த விழா நடைபெற்றது.

ரஷ்ய ஜனாதிபதி மெத்வடேவ் மிகயீல் கலாஷ்னிகோவுக்கு தங்கப்பதக்கமும், 'ரஷ்யாவின் கதாநாயகன்' விருதும் வழங்கி இவ்விழாவில் அவரைக் கௌரவித்தார். இதில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டார்கள்.

ரஷ்ய ஜனாதிபதி மெத்வடேவ் தம் உரையில், ''நீங்கள் துப்பாக்கியை மட்டும் உருவாக்கவில்லை. ஒரு தேசிய வர்த்தக சின்னத்தையும் உருவாக்கியுள்ளீர்கள். இதன் மூலம் ஒவ்வொரு ரஷ்யனும் பெருமையடைகின்றான்'' என்றார்.

ஏ.கே. 47 ரகத் துப்பாக்கியைக் கண்டுபிடித்த மிகயீல் கலாஷ்னிகோவ், ரஷ்யாவைச் சேர்ந்தவர். இவர் இத்துப்பாக்கியை 1947 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். எளிமையான வடிவமைப்பு, நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கு இந்தத் துப்பாக்கி புகழ் பெற்றது.

இந்தத் துப்பாக்கி 35 நாடுகளில் அதிகார பூர்வமாக இராணுவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இது தவிர, தீவிரவாதிகள் அனைவரும் இந்தத் துப்பாக்கியையே பயன்படுத்துகிறார்கள்.

# ஒப்பந்த நிறுவனங்களைப் பதிவு செய்தல்

கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிகாட்டலின் கீழ் எதிர்காலத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஒரு கட்டமைப்பின் கீழ் ஓர் ஒழுங்கின் பிரகாரம் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவாக இக்ராட் தர பதிவுப்புத்தகம் உள்ள சகல ஒப்பந்த நிறுவனங்களையும் எமது யாழ்.மாவட்ட நிர்மாணிகர் சங்கத்தில் எதிர்வரும் 25.11.2009 க்கு முன்னர் இல.175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது சங்க காரியாலயத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: பதிவுக்கட்டணம்/சந்தா தொடர்பான விவரங்களை எமது தொலைபேசி இலக்கம் 021 321 0148 ஊடாக தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளவும்.

பதிவு செய்யத்தவறும் ஒப்பந்த நிறுவனங்கள் எமது ஒழுங்கமைப்புக்குள் உள்வாங்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

எம்.இராமதாஸ்
(தலைவர்)

(90918)

சு.மணிராஜா
(செயலாளர்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கண் மகிழ
16
★
03
★
1932



நெஞ்சம் நெகிழ
14
★
10
★
2009

## அமரர் மருதப்பு கார்த்திகேசு (பப்பா)

கடந்த 14.10.2009 அன்று அமரத்துவம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கின்போது கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறியும், எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (13.11.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். எமது நினைவிற்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் பெருந்தன்மையுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

(90920)

தகவல்:
குடும்பத்தினர்.

# காலநிலை மாற்றம் சுவரொட்டிச் சித்திரப் போட்டிக்கான பரிசு வழங்கலும், விழாவும்

தலைவர்:- திரு.ப.சிவநாதன் (தலைவர் - T.R.R.O)
பிரதம விருந்தினர்:- திரு.க.கணேஷ் (அரச அதிபர், யாழ்.மாவட்டம்)
சிறப்பு விருந்தினர்கள்:- Dr.கு.மிகுந்தன் (விவசாயத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் S.T.B.இராஜேஸ்வரன் (கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்
திருமதி மதுமதி வசந்தகுமார் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)

## நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்
அமைதிப் பிரார்த்தனை
வரவேற்புரை
தலைமையுரை
சிறப்பு விருந்தினர் உரை
பிரதம விருந்தினர் உரை
பரிசு வழங்கல்
கலை நிகழ்வுகள்
நடனம் (கலைக்கோயில் நடனக் குழுவினர், மானிப்பாய்)
பட்டிமன்றம் (நடுவர் திரு.தமிழேந்திரன் ஆசிரியர் யாழ்.மத்திய கல்லூரி)
நன்றியுரை

காலம்:- 14.11.2009 முற்பகல் 9.30 மணி
இடம்:- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

"சூழல் பாதுகாப்பில் ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்".

"[illegible] உதவி நிறுவன பங்காளி நிறுவனங்கள்
(SOND, VDF, JSAC, T.R.R.O)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு; ஏ-9 பாதை ஊடாக எடுத்துவருவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.13

குடாநாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்குத் தரைப் பாதையூடாக கூடுதலான கனரக பவுசர் வாகனங்கள் மூலம் எரிபொருள்கள் எடுத்து வரப்படவுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபன வட்டாரங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

தற்போது குடாநாட்டிற்கான எரிபொருளை ஏற்றிவரும் கப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் தரைப்பாதையூடாகவே எரிபொருள்கள் எடுத்துவரப்படுகின்றன.

பெரும்பாலும் இந்த வாரத்தில் கூடுதலான கனரக பவுசர் வாகனங்கள் மூலம் எரிபொருள் கொண்டுவரப்படும் பட்சத்தில் இதற்கான தட்டுப்பாடு அறவே நீங்கிவிடும் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேசமயம் நேற்று மூன்று கனரக பவுசர் வாகனங்களில் மண்ணெண்ணெய்யும், பெற்றோலும் குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

போதிய பவுசர் வாகனங்கள் மூலம் எரிபொருள்கள் வந்து சேரும் பட்சத்தில் தட்டுப்பாடும் நீங்கிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (1-224-112)

## கலைப்பீட மாணவர் விரிவுரைக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணம், நவ.13

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வகுப்புக்களைப் புறக்கணித்த கலைப்பீட மாணவர்கள் நேற்று விரிவுரைகளுக்குச் சென்றனர்.

பல்கலைக்கழக துணைவேந்தர் மாணவர்களுடன் கலந்துரையாடியதை அடுத்து இந்த சுமுகமான நிலை ஏற்பட்டதாக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (10)

## வலிகாமத்தில் இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு அழைப்பு

நலன்புரி முகாம்களில் இருந்து வலிகாமம் கல்வி வலயத்தில் இணைப்புப் பெற்ற ஆசிரியர்களை உடனடியாக வலய அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை வலயத்துக்குத் தவறாது சமுகமளிக்ககுமாறு அவர் அறிவித்துள்ளார். (1)

## யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள கிளி. அரச ஊழியரை செயலகத்தில் பதியுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.13

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் தங்கியிருக்கும் கிளிநொச்சி மாவட்டச் செயலக அரச ஊழியர்களை கடமைக்குத் திரும்புமாறு கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள 18 ஊழியர்கள் தமது விவரங்களை செயலகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பதிவுசெய்யுமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டுள்ள ஊழியர்களின் விவரம் வருமாறு:-

ஆர்.திருசெந்திநாதன் - கணக்காய்வாளர், கே.கோபாலசூரியர் - வெளிக்கள பரிசோதகர், செல்வி கே. சந்திரவதனி - அபிவிருத்தி உதவியாளர், ஆர். மங்களேஸ்வரன் - அபிவிருத்தி உதவியாளர், திருமதி ஏ.மாணிக்கராஜா - முகாமைத்துவ உதவியாளர், செல்வி என். யுகாந்தினி - முகாமைத்துவ உதவியாளர், செல்வி அருட்செல்வி - முகாமைத்துவ உதவியாளர், கே.பவானந்தன் - முகாமைத்துவ உதவியாளர், எம்.காண்டீபன் - முகாமைத்துவ உதவியாளர், செல்வி எஸ்.சயந்தினி - முகாமைத்துவ உதவியாளர், திருமதி எஸ். சாரதாம்பாள் - கிராமசேவையாளர், ரி.அருந்தமிழ்செல்வன் - கிராமசேவையாளர், எஸ்.ரூபசிங்கம் - கிராமசேவையாளர், எம்.மாசிலாமணி - கிராமசேவையாளர், டி.நகுலேஸ்வரன் - கிராமசேவையாளர், என்.திருமோகன் - அலுவலக உதவியாளர், எஸ்.நகுலேஸ்வரன் - சாரதி, மாணிக்கராஜா - காவலாளி. (1)

## இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை சனிக்கிழமைகளிலும் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ.13

அச்சுவேலி இலங்கை வங்கியின் செயற்பாடுகள் நாளை சனிக்கிழமை தொடக்கம் வாரத்தில் இறுதி நாளான சனிக்கிழமைகளிலும் இடம்பெறவுள்ளன.

சனிக்கிழமை வங்கியின் செயற்பாடுகள் ஆரம்பிப்பது தொடர்பான நிகழ்வுகள் வங்கி முகாமையாளர் த. புவனேந்திரன் தலைமையில் நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் கலந்து கொண்டு வைபவரீதியாக வங்கியின் செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (1-11)

## சுன்னாகம் வங்கியின் அடகுப்பிரிவில் காப்பு மீட்பு

யாழ்ப்பாணம்.நவ.13

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சுன்னாகம் மக்கள்வங்கியின் அடகு நகை வாடிக்கையாளர் பிரிவில் கண்டெடுக்கப்பட்டுள்ள காப்பை உரியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வங்கியின் அடகு நகை வாடிக்கையாளர் பிரிவில் குழந்தையின் காப்பு கண்டெடுக்கப்பட்டு முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு முகாமையாளர் கேட்டுள்ளார். (10)

### ஆடவருக்கான ஒற்றையர் பிரிவில்

# அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் நடால்; அதிர்ச்சித் தோல்வியடைந்தார் பெடரர்!



பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஆடவருக்கான ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்றில் பிரான்ஸ் வீரர் பென்னெட்ரூவிடம் உலகின் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல் வியடைந்து வெளியேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் நடால், அல்மார்கோவை சற்றே போராடி வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

ஜூலியன் பென்னெட்ரூ, 3- 6, 7- 6, 6- 4 என்ற செட் கணக்கில் ஃபெடரரை வீழ்த்தினார். இது அவரது கனவு வெற்றியாகும்.

இறுதிக் கட்டத்தில் ஜூலியன் அபாரமாக விளையாடினார் என்று ஃபெடரரே அவரைப் புகழ்ந்து விட்டார். இதனையடுத்து பெடரர் முதல் செட்டைக் கைப்பற்றினார். எனினும் இரண்டாவது செட்டை பிரேக் கரில் ஜூலியன் ஆதிக்கம் செலுத்தி 4 புள்ளிகளுடன் அந்த செட்டை கைப்பற்றினார்.

பின்னர் 3ஆவது செட்டில் பெடரை விரைவாக ஆடவைத்து தவறு செய்யத் தூண்டினார் ஜூலியன். இதனால் அதிர்ச்சித் தோல்வி ஏற்பட்டது.

மற்றொரு ஆட்டத்தில் சக வீரர் நிகோலஸ் அல்மார்கோவை, ஸ்பெயின் வீரர் நடால் 1- 6, 7- 6, 7- 5 என்ற செட் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



மற்றொரு ஆட்டத்தில் பிரிட்டனின் ஆன்டி முர்ரே அமெரிக்க வீரர் ஜேம்ஸ் பிளேக்கை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

டொமாஸ் பெர்டிச்சை 6- 4, 6- 4 என்ற செட்கணக்கில் சுலபமாக வீழ்த்திய ஸ்பெயின் வீரர் டாமி ராப் ரீடோவை ரஃபேல் நடால் அடுத்த சுற்றில் சந்திக்கிறார்.

செர்பிய நட்சத்திரம் நோவக் ஜோகோவிச், அர்ஜென்டீனாவின் மொனா கோவை 6- 3, 7- 5 என்ற செட்களிலும், ராபின் சோடர்லிங் குரேஷியாவின் கார் லோவிச்சை 6- 4, 7- 6 என்ற செட் கணக்கிலும் வீழ்த்தினர்.

ஸ்வீடன் வீரர் சோடர்லிங் 3-வது சுற்றில் நிகோலே டேவிடென்கோவை சந்திக்கிறார்

## செஸ் தொடரில் ஆனந்த் முன்னிலை

மொஸ்கோவில் நடைபெறும் தால் நினைவு செஸ் தொடரின் 5 ஆவது சுற்றில் கங்கேரியின் நட்சத்திர வீரர் பீற்றர் லீகோவை, இந்தியாவின் நட்சத்திர வீரர் விஸ்வநாதன் ஆனந்த் வீழ்த்தி 3.5 புள்ளிகளுடன் ரஷ்யாவின் விளாதிமிர் கிராம்னிக்குடன் முன்னிலை வகிக்கிறார். இன்னும் 5 சுற்றுகள் கொண்ட இந்தத் தொடரில் கிராம்னிக் - ஆனந்த் மோதும் போட்டியை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த் துக் காத்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் லீகோவிற்கு எதிராக வெள்ளைக் காய்களைக் கொண்டு ஆடிய ஆனந்த் 22 ஆவது நகர்த்தலில் புதிய உத்தி ஒன்றைக் கடைப்பிடித்தார்.

முதலில் குதிரையை இழந்த ஆனந்த், 22 ஆவது நகர்த்தலில் லிகோவின் குதிரையை தன் அபாரமான நகர்த்தலால் வெட்டினார். அதன் பிறகு ராணியையும், யானையையும் வைத்து புகுந்து விளையாடினார் அவர்.

45ஆவது நகர்த்தல்வரை போராடித்தாக்குப் பிடித்த லீகோ அந்த நகர்த்தலுடன் தோல்வியை ஒப்புக்கொண்டார். அடுத்ததாக ஆனந்த், முதல் தரவரிசையில் உள்ள மேக்னஸ் கார்ல்சனை எதிர்கொள்கிறார். கார்ல்சன் இது வரை தான் ஆடிய போட்டிகளில் இந்த தொடரைத் தான் சமநிலை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸி - இந்தியத் தொடர் மழை காரணமாக ரத்து

நடந்து முடிந்த இந்திய அவுஸ்திரேலிய ஒரு நாள் தொடரில் நேற்று நடைபெற வேண்டிய 7ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி மழையால் கைவிடப்பட்டதையடுத்து ஷேன் வாட்சன் தொடர் நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

மைக் ஹஸ்ஸி இந்த தொடரில் 313 ரன்களை 104.33 என்ற சராசரியில் பெற்று அதிக ரன்களை எடுத்த வீரராக திகழ்கிறார்.

தோனி இவருக்கு அடுத்த படியாக 285 ரன்களை 57 என்ற சராசரி விகிதத்தில் பெற்றுள்ளார்.

தொடர் நாயகனான ஷேன் வாட்சன் 22 என்ற சராசரியில் 10 விக்கெட்டுகளையும் பேட்டிங்கில் 42.66 என்ற சராசரியில் 256 ரன்களையும் எடுத்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் 46 என்ற சராசரி விகிதத்தில் 275 ரன்களை எடுத்து 3ஆம் நிலையில் உள்ளார்.

ஆஸ்ட்ரேலியாவின் டக் போலிஞ்சரும், மிட்செல் ஜான்சனும் தலா 9 விக்கெட்டுகளையும், ஆஷிஷ் நெஹ்ரா 8 விக்கெட்டுகளையும், ஹர்பஜன் சிங் 7 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

## நியூஸிலாந்துப் போட்டியில் பாக். அணித் தலைவராக யூசுப்

நியூஸீலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கு பாகிஸ்தான் அணியின் தலைவராக முகமது யூசுப் செயல்படுவார் என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் நேற்று அறிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து சிறிது காலம் ஓய்வுபெற விரும்புவதால் தன்னை நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குத் தேர்வுசெய்ய வேண்டாம் என யூனிஸ்கான் கூறியதால், அவருக்குப் பதிலாக முகமது யூசுப் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார் என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணித்தலைவர் பதவியை யூசுப் ஏற்றுக் கொண்டார் எனவும், துணைத் தலைவராக கம்ரான் அக்மல் செயற்படுவார் என்றும் அவர் கூறினார்.

## பொன்சேகா ராஜினாமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சவாலாக எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடுவார் என்று மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட நிலையில் பொன்சேகா தமது இராணுவப் பதவியை இராஜினாமா செய்திருப்பது, அவரது அரசியல் பிரவேசத்தை சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்தியிருக்கிறது என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.

ஜெனரல் சரத் பொன்சேகா தனது பதவி விலகல் கடிதத்தைப் பாதுகாப்புச் செயலாளர் ஊடாக நேற்று வியாழக்கிழமை அனுப்பிவைத்துள்ளார். ஜனாதிபதி மீதும், அரசின் மீதும் தனது நம்பிக்கை குறைவடைந்துள்ளது எனவும் அதனால் முப்படைகளின் பிரதான அதிகாரியாகத் தன்னால் தொடர்ந்தும் பணியாற்ற முடியாதுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதியை அவர் ஜனாதிபதி செயலகத்திற்கும் அனுப்பியுள்ளார். தமது மூன்று பக்கக் கடிதத்தில், இராணுவப் பணியிலிருந்து ஓய்வுபெறுவதற்கான அனுமதியைக் கோரியுள்ளதுடன் தாம் இராஜினாமா செய்வதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

எனினும் பதவியை இராஜினாமா செய்தபின்னர் அரசியலில் பிரவேசிக்கும் நோக்கம் குறித்து சரத் பொன்சேகா எதனையும் தெரிவிக்கவில்லை.

### விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதால் தமக்குத் தொடர்ந்து பாதுகாப்புத் தேவை என்கிறார்

பாதுகாப்புப் படைப்பிரிவின் உத்வேகத்தைத் தொடர்ந்து பேணுவதற்கு அரசுக்கும் முப்படைகளின் தலைமையதிகாரிகளுக்கும் வலுவான நம்பிக்கை அவசியம் என்பதையும் ஜெனரல் பொன்சேகா தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அரசுக்கும், தமக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் உள்ள மோதல்கள், மனக் கசப்புகள் காரணமாக இராணுவத்தில் காணப்படும் ஒழுக்கத்தின் உயர்வு குறைந்துவிடும் என்றும் சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார்.

அமைச்சர்களால் தமக்கு நேர்ந்த அவமரியாதைகள், அநீதிகள் குறித்தும் அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றின் காரணமாக டிசெம்பர் முதலாம் திகதி முதல் தான் தமது பதவியை இராஜிநாமாச் செய்கிறார் எனவும் தமது இராஜிநாமாவை ஜனாதிபதி ஏற்கவேண்டும் என்றும் பொன்சேகா குறிப்பிட்டிருக்கிறார்.

ஜெனரல் சரத் பொன்சேகா தனது பதவியை இராஜிநாமாச் செய்த பின்னரும் தமக்கு விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருக்கும் என்பதால் தனக்குரிய பாதுகாப்பை தொடர்ந்து வழங்குமாறும் கேட்டுள்ளார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சரத் பொன்சேகா 1970ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி இலங்கை இரா ணுவத்தில் இணைந்து கொண்டவர்.

2005ஆம் ஆண்டு டிசெம்பர் 6ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் 18 ஆவது தளபதியாக இவர் பொறுப்பேற்றுக் கொண்டார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத்தின் களனி வருகையை எதிர்த்து மேர்வினின் ஆதரவாளர் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, நவ- 13

களனி விகாரையில் வழிபாடு செய்யச் சென்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை வழிபாடு செய்ய விடாமல் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் தடுத்தனர் என்றும் சரத் பொன்சேகாவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் மோதல் உருவாகும் சூழ்நிலையை ஏற்படுத்த முயன்றனர் என்றும் கூறப்படுகிறது.

ஆனால், ஜெனரல் சரத் பொன்சேகா தமது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பொறுமையுடனும், நிதானத்துடனும் செயற்படும்படி பணித்தார் என்றும், இதனால் மோதல் உருவாகும் சூழ்நிலை தவிர்க்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# ஐ.தே. முன்னணியின் கொள்கைப் பிரகடனத்துக்கு மகாநாயக்கர்களின் ஆசிபெற நாளை சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, நவ. 13

ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தை நாளை 14 ஆம் திகதி கண்டி மகா நாயக்க தேரர்களுக்கு சமர்ப்பித்து ஆசிபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சித் தலைவர்களும் வாகனப் பேரணியொன்றின் மூலம் கண்டிக்குச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் காலை 8 மணிக்கு வாகனப் பேரணி ஆரம்பமாகும் எனவும் கூட்டமைப்பில் உள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கான தமது பிரதிஞ்யை அங்கு உறுதிப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக மேலும் தெரிவித்தார்.

சுதந்திர சதுக்கத்திலிருந்து மருதானை கண்டி வீதி வழியாக கண்டி நோக்கிச் செல்லும் வாகனப் பேரணியை வரவேற்பதற்கு பேலியகொட, ஹொரகொல்ல, பண்டாரநாயக்க சமாதி உள்ளிட்ட 15 இடங்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கண்டியை அடையும் கட்சியினர் தலதா மாளிகை உட்பட ஏனைய வணக்கஸ்தலங்களிலும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வர் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பணியிலிருந்து கொண்டு நாட்டு மக்களுக்காக முழு முனைப்புடன் உழைத்தேன். அதேபோல், சீருடையைக் கழற்றிய பின்னரும் மக்களுக்கான எனது பணிகள் தொடரும் - என்றார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியொன்றை எழுப்பினார். ''நீங்கள் இராணுவக் கூட்டுப்படைத் தலைமைப் பதவியிலிருந்து விலகிய பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா?''

''நான் இன்னமும் இராணுவ பணியிலிருந்து விலகவில்லை. எதிர்வரும் முதலாம் திகதிக்குப் பின்னர்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா என்பது குறித்து தெரிவிக்க முடியும்'' - என்று சரத் பொன்சேகா தெரிவித்தார்.

**இப்போதைய பதவியில் மக்களுக்கு பணியாற்றும் வாய்ப்பு இல்லை**

''ஜானக பெரேரா அரசியலிக்கு வந்த சமயம் நீங்கள் அரசியலுக்கு வரமாட்டீர்கள் என்று கூறினீர்களே? தற்போது இது குறித்து என்ன கூறுகின்றீர்கள்'' என்று கேட்டதற்கு -

''அப்போது நான் ஓய்வு பெறும் காலத்தில் இருக்கவில்லை. அத்துடன் அந்த நேரத்தில் நிலைமை வேறாக இருந்தது. ஆனால் தற்போது நான் இராணுவத்திலிருந்து ஓய்வு பெறும் நிலையில் இருக்கின்றேன்.

''அத்துடன், எனக்கு இப்போது வழங்கப்பட்டிருக்கும் பதவியில் மக்களுக்குப் பணியாற்றக்கூடிய எந்தவித வாய்ப்புகளும் இல்லை. தற்போதைய நிலைமையும் வேறாக இருக்கிறது'' - என்றார்.

மேலும், ''உங்களுக்கும் அரசுக்கும் இடையில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டுள்ளதா?'' என வேறொரு ஊடகவியலாளர் கேட்டதற்கு -

''நான் பதவியில் இருக்கும் போது அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட்டேன். தற்போது எனக்கும் அரசுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றனவா என்பதை நீங்கள் அரசிடம்தான் கேட்க வேண்டும்'' என்றார்.

''நீங்கள் இராணுவத் தலைமைப் பதவியிலிருந்த ஏன் ஓய்வு பெறுகிறீர்கள் என்று கேட்டபோது -

''நான் எனது பதவிக்காலத்தை விட கூடுதலாக 4 வருடங்கள் மக்களுக்காகப் பணியாற்றியுள்ளேன். தற்போது எனக்கு வழங்கப்பட்டிருக்கும் பதவியில் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய எந்த வாய்ப்பும் இல்லை. அதனால் இராணுவப் பயணியிலிருந்து ஓய்வு பெறுகிறேன்'' - என்றார் சரத் பொன்சேகா. (அ-சி)

## சகல மக்களினதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு ரணில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மனித உரிமைகள், ஊடக சுதந்திரத்துக்கான 5 மூலதா்மங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இதனை ஐக்கிய தேசிய முன்னணி ஏற்றுக் கொண்டுள்ளது. இதனை முன் கொண்டு செல்வது எமது கடமையாகும்.

சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அனைத்து இன மக்களினதும் அரசியல் உரிமைகளையும் உறுதி செய்வதாக அது அமைய வேண்டும்.

வன்னி அகதிகளின் மீள்குடியமர்வு மற்றும் அவர்களது நடமாட்ட சுதந்திரம் என்பன உறுதிப்படுத்தப்படுவது மிகவும் முக்கியமாகும்.

மக்களின் மீள்குடியமர்வை அரசு கண்ணிவெடியை காரணம் காட்டி இழுத்தடிக்கின்றது. இதனை நாம் முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

சர்வதேச நாடுகளிடமிருந்து கட்டுப்பாடின்றி கடன்களை வாங்கி மக்களின் தலையில் கடன் சுமையை ஏற்றுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. எனவே இந்த அத்துமீறல்கள் யாவும் நீங்க வழி செய்வதற்கு, நாட்டுக்கு மன்னாக மஹிந்த ராஜபக்ஷவை தெரிவு செய்யப் போகிறோமா அல்லது மக்களே மன்னர்களாக மாறப் போகிறார்களா என்பதே முக்கியமானது. இதனை எல்லோரும் உணர வேண்டும். மக்களை மன்னர்களாக்கி சுதந்திர வாழ்வை பெற்றுக் கொடுப்பதே ஐக்கிய தேசிய முன்னணியின் நோக்கமாகும். - என்றார். (அ-சி)

**பாதுகாப்பு அலுவலர்கள்**

பாதுகாப்பு அலுவலர்களாகப் பணியாற்ற அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை.
ஆண்கள் மட்டும்.
வயதெல்லை: 50
முன் அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்களுடன் இன்று நேரில் வரவும்.
நிர்வாக அதிகாரி,
கேற்வே சென்ரர்,
346, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# மியன்மாருடன் உறவு கொள்வதை எதிர்க்கிறார்கள் இங்குள்ள அந்நாட்டு பிக்குகள்

கொழும்பு, நவ.13

மியன்மார் நாட்டு இராணுவ ஆட்சியாளர் தான்சூகியுடன் நட்புறவைப் பேணுவதன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முட்டாள்தனமாக செயற்படுகின்றார் என்று கொழும்பில் வசிக்கும் மியன்மார் நாட்டுப் பிக்குகள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

ஜனாதிபதி கடந்த ஜூன் மாதம் மியன்மாருக்கு விஜயம் செய்திருந்தார். இந்நிலையில் மியன்மார் நாட்டின் இராணுவ ஆட்சியாளரான தான்சூகி மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார். இதுவே அவரது முதலாவது இலங்கை விஜயமாகும்.

இந்நிலையிலேயே தான்சூகியின் அதிருப்தியாளர்களான கொழும்பிலுள்ள மியன்மார் நாட்டுப் பிக்குகள் இவ்வாறு எச்சரித்துள்ளார்கள். ''மியன்மாரின் இராணுவ அரசுடன் இலங்கை மிகவும் நெருக்கமான உறவுகளைப் பேணி வருகிறது. இந்த உறவுகள் படிப்படியாக வளர்ந்து செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. எனவே இராணுவ அரசுடன் இலங்கை நட்புறவைப் பேணுவதால் சர்வதேச சமூகம் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் மிகுந்த அவதானத் துடன் இருக்கும்'' என்று அவர்கள் தெரிவித்தனர். (அ-சி)

# தமிழக அகதி முகாம் மக்களின் மேம்பாட்டுக்கு 100 கோடி ரூபா ஒதுக்க மாநில அரசு முடிவு

சென்னை, நவ. 13

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களை மேம்படுத்த தமிழக அரசு 100 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. தமிழக அரசு நேற்று இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

கடந்த சில வாரங்களாகவே முதல்வர் கருணாநிதி அகதி முகாம்களின் நிலைமையில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். தனது அமைச்சர்களை முகாம்களை பார்வையிட்டு வருமாறு பணித்திருந்தார். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கைகளை விவாதிப்பதற்காகவே நேற்று அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தினார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில், முகாம்களில் உள்ள 5,922 குடியிருப்புக்களை செப்பனிடவும் சாலை, கழிப்பிடம், குடிதண்ணீர், கழிவு நீர் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் முகாம் வாசிகள் அனைவருக்கும் தமிழகத்திலுள்ள இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்படுவது போல இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி வழங்கவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## ஆஸி.விசேட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்குச் சென்று அங்கு அகதிகள் மீள் குடியேற்றப்படும் நவடிக்கைகளை நேரில் பார்வையிட்டார்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி மாவட்ட ஆயுதப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் அத்துல ஜயவர்த்தன ஆகியோரை ஆவுஸ்திரேலியாவின் விசேட தூதுவர் சந்தித்து அங்கு இடம்பெற்று வருகின்ற அபிவிருத்திப் பணிகள், மீள்குடியேற்றச் செயற்பாடுகள் என்பன குறித்து விரிவாக கேட்டறிந்ததாக தகவல்கள் தெரிவித்தன. (அ-7)

## தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

530 பேருக்கு நிரந்தர நியமனம் வழங் கும் நிகழ்வு நாளை வீரசிங்கம் மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

நியமனம் பெறுபவர்களின் விவரம் நேற்று மாலை கல்வித்திணைக்களத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் வந்து சேரவில்லை.

நியமனம் பெறுபவர்களின் பட்டியலை எடுத்துவரும் மாகாணக்கல்வி அமைச்சு அதிகாரி இன்று நண்பகல் அளவில் இங்கு வந்து சேருவார் என்று தகவல் கிடைத்துள்ளதாக மேலதிக கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார். (அ-1)

## ஜோன் ஹோம்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கு அடுத்த வாரம் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்படுவதை நேரில் பார்வையிடுமாறு இலங்கை விடுத்த அழைப்பை ஏற்றே ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கை வரும் ஜோன் ஹோம்ஸ் தமது ஒருவார கால விஜயத்தின் போது, இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களைப் பார்வையிடவுள்ளார்.

## வத்தளைப் பகுதியில் வெடிபொருள் மீட்பு

கொழும்பு, நவ.13

வத்தளைப் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிலிருந்து பொலிஸார் ஏராளமான வெடிபொருள்களை மீட்டுள்ளார்கள் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்க நேற்று அறிவித்துள்ளார். (சி)

## 25 நாள்களாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவுஸ்திரேலியாவில் அரசில் தஞ்சம் கிடைக்கும் வரை கப்பலை விட்டு ஓரடிகூட வெளியில் எடுத்து வைக்கப் போவதில்லை என்று அவர்கள் உடும்புப்பிடியாக இருக்கின்றனர்.

இவர்களின் எந்தவொரு தந்திரோபாய நடவடிக்கைகளுக்கும் அசைந்து கொடுக்கப் போவதில்லை என்று இதுநாள்வரை அவுஸ்திரேலிய அரசு கடும்போக்கை கடைப்பிடித்து வந்துள்ளது.

ஆனால், உள்நாட்டு, அரசியற் கட்சிகள் - ஊடகங்கள் - பொதுமக்கள் ஆகியோரின் அழுத்தங்கள் காரணமாகவும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் அழுத்தங்கள் காரணமாகவும், ஏனைய நாடுகள் இந்த இலங்கையர்களைப் பொறுப்பேற்கத் தயங்குவதாலும் ஆஸ்திரேலியாவின் கடும் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த இலங்கையர்களுக்கு அரசியற் தஞ்சம் வழங்க ஆஸி கொள்கை அளவில் இணங்கியுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியற் தஞ்சம் பெற உரித்தானவர்கள் எதிர்வரும் 12 வாரங்களுக்கிடையில் அவுஸ்திரேலியாவில் அரசியற் தஞ்சம் பெறுவர் என்று ஆஸி. அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இலங்கையர்களுக்கு எழுத்து மூல வாக்குறுதி வழங்கியுள்ளார்கள். இவர்களில் அரசியற் தஞ்சம் பெற உரித்தானவர்கள் என ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருக்கும் 30 பேருக்கு எதிர்வரும் 4 வாரங்களுக்கிடையில் ஆஸியில் அரசியற் தஞ்சம் கிடைக்கும் என்றும் இவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2010 A/L வரலாற்ற மாணவர்களுக்கான 'வரலாறு' கடந்த கால வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பம்
வரலாறு I, II
ஆசிரியர்: S.S.தாஸ்
காலம்: 14.11.2009
குறிப்பு: கைநோட்டுகள் வழங்கப்படும்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,

New Medi Care Hospital
New Medi Care Hospital
* MBBS சேவை
* வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
* சகல இரத்த, சல பரிசோதனை ஆய்வுகூடம்
* ஸ்கான், ECG
* பல் புடுங்குதல், கட்டுதல், அடைத்தல், கிளிப்போடுதல்.
Dr.S. ரவிராஜ் (சத்திர சிகிச்சை நிபுணர்)
இன்று (13.11.2009) வெள்ளி - 4 மணிக்கு
பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர்
ஞாயிறு காலை 8.30
பல் வைத்தியம்
திங்கள், புதன், வெள்ளி 12 - 2 மணி
இல.32, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (சி/562289)
நிர்வாகம். T.P. No.: 0213734505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.